கடவுள் துணை.

1934-ம் ஆண்டிற்குச் சிரேட்ட பாடசாலைத் தராதர
(பிறிலிம்) பத்திரத்திற்கென நியமிக்கப்பட்டுள்ள

# செந்தமிழ் இலக்கியக் கோவை
## தமிழ் வியாசங்கள் என்பவற்றின்
## உரைகள்.

---


கொழும்பு சஹிராக் கல்லூரித் தலைமைத்
தமிழ்ப்பண்டிதர் மு. நல்லதம்பி அவர்களாலும்
பண்டிதர் எஸ். பி. சாமிநாதன் அவர்களாலும்
எழுதப்பெற்றவை.


---


JAFFNA,
ST. JOSEPH'S CATHOLIC PRESS
1933.


விலை சதம் 50

கடவுள் துணை.

1934-ம் ஆண்டிற்குச் சிரேட்ட பாடசாலைத் தராதர
(பிறீலிம்) பத்திரத்திற்கென நியமிக்கப்பட்டுள்ள

# செந்தமிழ் இலக்கியக் கோவை

## தமிழ் வியாசங்கள் என்பவற்றின்

## உரைகள்.

---


கொழும்பு சஹிராக் கல்லூரித் தலைமைத்
**தமிழ்ப்பண்டிதர் மு. நல்லதம்பி** அவர்களாலும்
**பண்டிதர் எஸ். பி. சாமிநாதன்** அவர்களாலும்
எழுதப்பெற்றவை.


---


JAFFNA,
ST. JOSEPH'S CATHOLIC PRESS
1933.

# உள்ளுறை

## செந்தமிழ் இலக்கியக் கோவை


| | | பக்கம் |
|---|---|---|
| I | அறவுரை ... ... | 1 |
| II | தமிழ் மொழி ... ... | 2 |
| III | இலக்கியம் | |
| | 1. கம்ப ராமாயணம்-சூளாமணிப்படலம் | 2 |
| | 2. கந்தபுராணம்-தகரேறு படலம் ... | 13 |
| | 3. சாவித்திரி வெண்பா | 19 |
| | 4. பெரியபுராணம்-அப்பூதியடிகள் சரித். | 25 |
| | 5. மகாபாரதம்-பதினெட்டாம்போர்ச் சரு. | 30 |
| IV | நீதித் திரட்டு | |
| | 1. திருக் குறள் ... ... | 34 |
| | 2. அறநெறிச்சாரம் ... ... | 36 |
| | 3. நாலடியார் ... ... | 37 |
| | 4. சோமேசர் முதுமொழி வெண்பா... | 39 |
| | 5. பழமொழி ... ... | 40 |
| | 6. தண்டலையார் சதகம் ... ... | 41 |
| V | வீரச் சுவை | |
| | 1. கலிங்கத்துப்பரணி ... ... | 43 |
| VI | ஈ ரேழுபது | |
| | 1. புவி யெழுபது ... ... | 51 |
| | 2. ஏ ரெழுபது ... ... | 54 |
| VII | வருணனைக் கவிகள் ... ... | 57 |
| VIII | தனிச் செய்யுட்கள் ... ... | 59 |
| IX | பிரபந்தப் பாடல்கள் ... ... | 62 |


## தமிழ் வியாசங்கள்


| | |
|---|---|
| சுகாதார தருப்பணம் ... ... | 65 |
| செல்வம் ... ... | 67 |
| நட்பு ... ... | 69 |
| சாதுரியம் ... ... | 72 |
| கல்வி ... ... | 72 |
| வசனம் ... ... | 74 |
| செய்யுள் ... ... | 75 |
| பிழை திருத்தம் ... ... | 79 |

# செந்தமிழ் இலக்கியக் கோவை உரை

## 1 அறவுரை

### இளங்கோவடிகள்

தெரிவு உறக் கேட்ட திருத் தகு நல்லீர்-தெளிவடையுமாறு கேட்ட சிறப்பமைந்த அறிவுநலம் படைத்தோரே; பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்-பிறருக்குத் துன்பம் புரிதலையும் நெருக்குதலையும் தசைமை மேம்படக் கைவிடக் கடவீர்; தெய்வம் தெளிமின்-இவ்வுலகுக்குக் காரணராகிய கடவுளொருவருள்ளாரென்னத் தெளிந்து கொள்வீர்; தெளிந்தோர்ப் பேணுமின்-கடவுளொருவருண்டென்று ஐயந் திரிபு நீக்கித் தேறிய அடியார் தம்மைப் போற்றக் கடவீர்; பொய்யுரை அஞ்சுமின்-பொய் கூறுதலால் துன்பம் வந்து சூழும் எனப் பயந்து நடவுங்கள்; புறஞ்சொல் போற்றுமின்-புறங்கூறலென்னுங் குற்றம் சாராமல் நும்மைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்; ஊன் ஊண் துறமின்-புலாலுணவை விலக்கிவிடுவீர்; உயிர்க் கொலை நீங்குமின்-உயிரை உடம்பினின்றும் நீக்குதலாகிய கொடுஞ் செயலைத் தவிர்த்து விடுங்கள்; தானஞ் செய்மின்-கல்வி, காசு, சோறு, கூறை முதலாயினவற்றை வழங்கவேண்டியவர்க்கு வழங்குங்கள்; தவம் பல தாங்குமின்-பல்லாற்றானும் தவம் செய்தலை ஏற்றுக் கொள்ளுங்கள்; செய்ந்நன்றி கொல்லன்மின்-பிறர் நுமக்குச் செய்த நன்றியைக் கொன்றிடாதீர்; தீ நட்பு இகழ்மின்-தீயன புரிவார்தம் நட்பை இகழ்ந் தொதுக்கக் கடவீர்; பொய்க்கரி போகன்மின்-நீதி மன்றங்களில் பொய்ச் சான்று கூறுதற்குப் புகுதாதிருங்கள்; பொருள் மொழி நீங்கன்மின்-சான்றோர் கூறும் உறுதி மொழிகளை விலக்கி ஒழுகாதிருங்கள்; அறவோர் அவைக்களம்-கற்றாங் கொழுகும் நெறியுடையாராகிய நல்லோர் கூடுஞ் சபையை; அகலாது அணுகுமின்-விலகாது சேரக்கடவீர்; பிறவோர் அவைக்களம்-அறத்தின் மாறுபட்ட கீழ்மக்கள் கூடுங் கூட்டங்களை; பிழைத்துப் பெயர்மின்-பிழையுடையனவாகக் காட்டி அகன்று நில்லுங்கள். (அறம்-இது செயற்பாலது, இது விடற்பாலதென வரையறுக்கப்பட்டது.) பிறர் மனை அஞ்சுமின்-பிறர் மனைவியரை விரும்புதலிற் பாவம் வந்தடையுமெனப் பயந்து நடவுங்கள்; பிழை உயிர் ஓம்புமின்-பிழையான வழியில் ஒழுகும் உயிரை அவ்வழியில் செல்லாதிருக்குமாறு பாதுகாத்திடுங்கள்; அறமனை காமின்-மனையறத்தின் செம்மையை விரும்பக்கடவீர்; அல்லவை கடிமின்-அறத்தின் மாறுபட்டனவாகிய பாவச் செயல்களை விலக்கி விடுங்கள்; கள்ளும் களவும் காமமும் பொய்யும்.........; வெள்ளைக் கோட்டியும்-அறிவிலார் கூட்டத்தையும்; விரகினில் ஒழிமின்-விடு நெறியறிந்து விடக்கடவீர்; இளமையும் செல்வமும் யாக்கையும் நில்லா-இளமைப் பருவமும் பணமாகிய செல்வமும் உடம்பும் நிலைபெறமாட்டா; உளநாள் வரை

யாது-வாழுநாள் இத்துணைக் காலம்என அளவு குறியாது (என்றது முதுமைப் பருவத்தே அறஞ்செய்வாமெனக் கருதி, வாழ்நாளை அளவிட்டுக்கொண்டு வாளா கழித்தலை) ஒல்லுவது ஒழியாது-இயல்வதனைக் கைவிடாது; செல்லுந்தேயத்துக்கு உறுதுணை தேடுமின்-உடலை விட்டுப்பிரிந்து செல்லுந் தேயமாகிய மறுமைக்கு நம்மோடு கூட வரக் கடவதாகிய உற்ற துணையை (தருமத்தை) த் தேடிக்கொள்ளுங்கள்; ஈங்கு-இவ்வாறு; மல்லல் மா ஞாலத்து வாழ்வீர்-வளம் பொருந்திய பெரிய பூமியின்கண்ணே வாழ்வீராக.

பிழையுயிர்-இறக்குந் தன்மையை யடையும் உயிர் என்றுமாம்.

:o:

# II தமிழ்மொழி

நலம் பழுத்த செழுந் தமிழ்ப் புலவராகிய சுப்பிரமணிய பாரதியாரவர்க ளியற்றிய இப் பாக்கள் மிக்க தெளிவுடையனவாதலின் உரை வேண்டப்படுவனவல்லவென விடுத்தாம்.

1. பாண்மை கெட்டு-தகைமை யிழந்து; தேம் மதுரம்-மிக்க இனிமை; ஒரு பொருள் குறித்த இரு சொற்கள் சிறப்புக் கருதி யடுக்கப்பட்டன. 4. உள்ளத்திலே உண்மை விளக்கம் உண்டாகுமாயின், வாக்கினிலும் அவ் விளக்கம் தோற்றமடைந்துநிற்கும். கலைகள்-கல்வியின் பல்வேறு துறைகள்; தமிழ் என்னும் விழியின்மையால் குருடடைந்தார் யாவரும் கலைப் பெருக்கமும் கவிப் பெருக்கமும் உண்டாகுமாயின் அறிவென்னும் பார்வை பெற் றுய்வர் என்க. தெளிவுடைய தமிழாகிய அமிழ்தத்தின் சுவையினைக் கண்டவர், இம்மையிலேயே தேவர்களடையும் இன்பத்தை அடைந்து மகிழ்வர் என்பது.

:o:

# III இலக்கியம்

## 1 கம்ப ராமாயணம்

### சூளாமணிப் படலம்

சூளாமணி—சூடாமணி; சூடா-தலைமயிர்முடி; மணி-இரத்தினம்.

1. புண்டரிகை போலும் இவள்-செந்தாமரைமலரில்வாழும் இலக்குமிபோன்றவளும், இன்னல் புரிகின்றாள்-தனது நாயகனைப் பிரிந்திருப்பதினாற் றுன்ப மனுபவிப்பவளும், அண்டம் முதல் நாயகனது ஆவியனையாளை-உலகங்களுக்கெல்லாம் முதற் பரம் பொருளாகிய ஸ்ரீராமபிரானது இன்னுயிரை யொத்தவளுமாகிய சீதாபிராட்டியை, கொண்டு அகல்வதே-என்னுடன் கொண்டு செல்வதே, கருமம் என்று உணர்வு

கொண்டான்-இப்போது நான் செய்ய வேண்டிய காரியம் என்று தனது மனதுள் எண்ணினன், (இவ்வநுமானுக்கு) உலகின்-உலகத்தில், துணை-வேறு உவமை, உண்டு-, என்ன-என்று சொல்ல, எளிதோ-எளியதோ? எளியதல்ல, அம்மா-ஆச்சரியம்!

2. முனிந்தருளல்-கோபித்துக்கொள்ளாதீர், அடியேன் உரை-இராமபிரானது பக்தனுன எனது வார்த்தையை, கேட்டி-கேட்பீராக; கேளார்வீட்டியிடும் மேலவனே வேறல் வினை அன்று-பகைவர்களை நாசஞ் செய்கின்ற மேலாந் தன்மையை யுடைய இராவணனை வெல்லுதல் நாம் இப்போது செய்யும் காரியமன்று; இனி பல ஈட்டிஎன்-இப்பொழுது பல வார்த்தைகளை அடுக்கிச் சொல்லிப் பயன் என்ன? இராமன் எதிர் நின்னை காட்டி அடி தாழ் வென்-ஸ்ரீ இராமபிரானது முன்னிலையில் உம்மைக் கொண்டுபோய்ச் சேர்த்து (அப்பிரானது) திருவடிகளை வணங்குவேன்; இது காண்டி-இந்த எனது செய்கையைக் காண்பீராக; இது காலம்-இச் செய்கையைச் செய்வதற்கு இதுவே ஏற்ற காலமாம்; (எ-று) ஆல்-ஈற்றசை.

3. பொன் திணி பொலம் கொடி-பொன் நிறமான, அழகிய காம வல்லிக் கொடி போன்றவளே, என் மெல் மயிர் பொருந்தி துன்றிய புயத்து-எனது மெதுமையான ரோமங்கள் நெருங்கி யிருக்கப் பெற்ற தோளின்மேல், துயர் விட்டாய்-துன்பத்தை நீக்கி இனிது இருந்து, இன் துயில் விளைக்க-இனிமை பொருந்திய நித்திரை செய்வீராக, ஓர் இமைப்பின்-ஒரு கொடிப் பொழுதிற்குள்ளே, உனைகொடு-உம்மைத் தாங்கிக் கொண்டு, இறை வைகும் குன்றிடை குதிப்பென்-ஸ்ரீ ராமர் எழுந்தருளி யுள்ள மதங்க மலையின் மீது குதிப்பேன், இடையில் தரியேன் (எ-று).

4. நெறிந்த குழல்-சுருண்டு நீண்ட கூந்தலை யுடையவளே! அறிந்து-எடுத்துச் செல்வதை அறிந்து, இடை அரக்கர் தொடர்வார்கள் உளராமேல்-நடுவழியிலே (நாம் போகும்போது) எம்மைத் தொடர்ந்து போர்க்கு வரும் அரக்கர் உள்ளாரானால், ஒருவராலும் விளியாதேன்-எவராலும் கொல்லப்படாத சிரஞ்சீவியாகிய யான், எதிர்-உமக்கெதிரிலே, முறிந்து உதிர நூறி-அரக்கர் அழிந்தொழிய நாசஞ் செய்து, என் சினம் முடிப்பேன்-எனது கோபத்தைத் தீர்த்துக்கொள்ளுவேன், நின் நிலைமை கண்டும்-உமது தற்கால நிலைமையைக் கண்ணுற் கண்ட பின்பும், நெடியோன்பால்-பெரியோரான உமது தலைவனிடம், வெறுங்கை பெயரேன்-வெறுங் கையுடன் போகேன் (உம்மை உடன் கொண்டு செல்வேன் என்றபடி) எ-று.

5. அருந்ததி-அருந்ததி போலக் கற்பில் மேம்பட்டவளே! அழகற்கு அருகு சென்று-பேரழகுடைய ஸ்ரீ ராமபிரானிடம் சென்று, உன் மருந்து அனைய தேவி-உமது தேவாமிர்தத்தை ஒத்த (தெவிட்டாத இனிமையுள்ள) பத்தினி, நெடு வஞ்சர் சிறை வைப்பில்-மிகுதியும் வஞ்சனையுடைய இராட்சதரது சிறைச்சாலையில், ஒரு வீடு பெறல் இல்லாது-ஒருவகையாலும் விடுதலையடையும் வழியின்றி, பெரும் துயரினோடும்

இருந்தனள்-தாங்க இயலாத துன்பத்தோடும் இருக்கின்றாள் என்று, பகரின்-(நான்) சொல்வேனாயின், என் அடிமை என் ஆம்-எனது அடிமைத் தொழிலால் யாது பயன் உண்டு, உரைத்தி-சொல்வீராக.

6. அம் சொல் இளவஞ்சி-அழகிய சொற்களையுடைய இளமையான வஞ்சிக் கொடி போன்றவளே! இனி வேறு விளம்ப உளது அன்று-இனி வேறு யாதும் யான் சொல்லத் தக்கதில்லை, விதியால்-எனது நல்வினைப் பயனால், இ பேறு பெற என் கண் அருள் தந்தருளு-(உம்மை மீட்டுப் பிரானிடம் சேர்த்தல்) என்கிற இந்தப் பெரிய பாக்கியத்தைப் பெறும்படி என்னிடத்துக் கிருபைசெய்வாயாக, பின்-பின்பு, போய்-(ஸ்ரீ ராமரிடம்) சென்று, துயர் ஆறு-உமது துன்பத்தை ஆற்றிக்கொள்ளும், அடியன் தோள்-அடியேனுடைய தோளின் மேல், கடிது ஏறு-விரைவில் ஏறி அருள்வீராக; என்று-, தொழுது இன் அடி பணிந்தனன்-கைகுவித்துக்கொண்டே, பிராட்டியாரது இணை அடிகளை வணங்கினன் (அனுமன் எ-று)

## வேறு

7. அரியது அன்று-(இது உன்னால்) செய்தற்கு முடியாத காரியம் அல்ல, நின் ஆற்றலுக்கு ஏற்றதே தெரிய எண்ணினை-உனது வல்லமைக்குத் தக்கதையே செய்ய மிகவும் ஆலோசித்துள்ளாய், செய்வதும் செய்தியே-செய்வதாகச் சொன்னவை எல்லாம் நீ சந்தேகமறச் செய்யும் வல்லமை உள்ளவனே, (ஆனாலும்) என் பெரிய பேதைமை. சில் மதி பெண்மையால்-எனது பெரிய அறியாமையையும் சிறிய அறிவையும் உடைய பெண் தன்மையால், உரியது அன்று என-(நீ எண்ணிய காரியம்) தகுதியுடையதன்றென்று, ஓர்கின்றது அது-ஆலோசிக்கின்றதொன்று (என் மனத்தில் உன் எண்ணத்திற்கு மாறாக) உண்டு-, எ-று. என்று பின்னும் தொடர்ந்து கூறுவாள்:—

8. வேலையின் இடையே-சமுத்திரத்தின் மத்தியில் (நீ என்னை கொண்டு போகும்போது) வெய்யவர் வந்து-கொடிய இராட்சதர் வந்து, கோலி-எம்மை வளைத்துக் கொண்டு, நின்னொடும் வெம் சரம் கோத்தபோது-உன்னோடு கொடிய அம்புகளைத் தொடுத்தபோதில் (அதாவது உன்னுடன் எதிர்த்துப் போர் செய்யும்போது) ஆலம் அன்னவர்க்கு அல்லை-விடம் போன்ற அரக்கர்களுடன் போர் செய்யவும் ஆற்றாது, எற்கு அல்லை-என்னைக் காப்பாற்றவும் முடியாமல், சாலவும் தடுமாறும் தனிமையோய்-மிகுதியும் தடுமாறுகின்ற தனிமையை உடையவன் ஆவாய். (அதாவது இரண்டில் ஒன்றும் செய்யமாட்டாது தடுமாறுவாய்) எ-று.

9. அன்றியும் பிறிது ஒன்று உள்ளது-மேலே கூறிய காரணம் அல்லாமலும் (உன்னோடு யான் வராமைக்கு) வேறொரு காரணமும் இருக்கின்றது. (அது என்ன வென்றால்) ஆரியன்-ஸ்ரீ ராமனது, வென்றி வெம் சிலை மைந்தனும்-வெற்றியையுடைய கொடியவில் குற்றத்

தை அடையும், (மனையாளை மீட்க இயலாதவன் என்றபடி) (இப்படிப் பலவகையான குற்றங்களுக்கு இடமாயிருத்தலால்) இனி வேறு நன்றி என்-(நீ கொண்டு செல்வதால்) வேறு என்ன நன்மை உண்டு? (ஒன்றுமில்லை என்றபடி) பதம் வஞ்சித்த நாய்களின்-பக்குவப்படுத்திய சோற்றை வஞ்சித்துக் களவாண்டு செல்கின்ற நாய்கள் போல, நின்ற வஞ்சனை-அரக்கரிடத்திருக்கின்ற வஞ்சனைகளை, நீயும்-, நினைத்தியோ- நினைப்பாயோ? நினைத்தல் உனக்குத் தகுதி அல்ல, எ-று. (இராவணன் என்னை ஒருவர்க்கும் தெரியாது வஞ்சித்துக் கொண்டுவந்தது போல, நீயும் செய்தல் இழிவு என்றபடி)

10. பொன் பிறங்கல் இலங்கை-பொன் மயமான திரிகூடமலை மேலுள்ள இலங்காபுரி, பொருந்தலர் என்பு மால்வரை ஆகிலதே எனில்-பகைவர்களாகிய இராட்சதருடைய என்பு மலையை உடையதாகாமற்போனால்; (எனது) இல் பிறப்பும்-உயர்குடிப் பிறப்பையும், ஒழுக்கும்-நல் ஒழுக்கத்தையும், இழுக்கம் இல் கற்பு-குற்றமற்ற கற்பு நிலையையும், யான்-, பிறர்க்கு-மற்றும் உலகில் உள்ளவர்களுக்கு எங்ஙனம் காட்டுவேன்-எவ்வாறு காண்பிப்பேன்? (எ-று) காண்பிக்க வேறு வழி இல்லை என்பதாம்.

11. அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ-துன்பத்தைச் செய்கின்ற மிருகத் தன்மை பொருந்திய இராட்சதருடைய இலங்காபுரியை மட்டுமோ? எல்லை நீத்த உலகங்கள் யாவும்-எல்லை இல்லாத சகல உலகங்களையும், என் சொல்லினுல் சுடுவேன்-எனது சாப வார்த்தையொன்றினுலே சுட்டழிப்பேன், அது-யான் அவ்வாறு அழித்தல், தூயவன் வில்லின் ஆற்றற்கு மாசு-பரிசுத்தமுள்ள ஸ்ரீ ராமபிரானது வில் தொழில் வல்லமைக்குக் குற்றத்தை உண்டாக்கும், என்று வீசினேன்-என்று எண்ணி யான் அழியா தொழிந்தேன் (எ-று)

12. மெய்ம்மையோய்-உண்மையான நற்குணங்கள் உடையவனே! வேறு உரையும் உண்டு-நான் உன்னுடன் வராமைக்கு வேறு காரணங்களும் இருக்கின்றன, அது கேள்-அதனைக் கேட்பாயாக, ஐம்பொறி ஆறும் நின்னையும்-ஐந்து பொறிகளையும் அடக்கி ஆளுந் தன்மையுள்ளவனுகிய உன்னையும்; ஆண் என கூறும்-ஆண்மகன் என்று உலகத்தார் கூறுவர், எறு சேவகன் மேனி அல்லால்-ஆண் சிங்கம் போன்ற வீரனுகிய ஸ்ரீ ராமபிரானது, மேனி அல்லால்-பரிசுத்த சரீரத்தை அல்லாது, இடை இ உருதீண்டுதல் கூடுமோ-இடையிலே உனது சரீரத்தைத் தொடுதல் சரியானதோ? (சரியல்ல) எ-று.

13. தீண்டுவான் எனின்-என்னைத் தொட்டு இருப்பான் ஆனுல், உயிர் மெய்யில்-இராவணன் உயிர் அவன் சரீரத்தில், இத்தனை சேண்பகல் ஈண்டுமோ-இவ்வளவு நெடுங்காலமாக நிலைத்திருக்குமோ? (இராது, உடனே செத்திருப்பான்) கீழ்மையான்-அற்ப குணம் உடைய இராவணன், இமைப்பின் முன் மாண்டு தீர்வன் என்றே-(எனது மேலில் தொட்டால்) இமைப்பொழுதிற்குள்ளே உயிர் நீங்கிவிடும் என்று கரு

தியே, வன்மையால் நிலம் கீண்டு கொண்டு எழுந்து ஏகினன்-தனது வலிமையால், நான் இருந்த தரையைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றான் (எ-று)

தனக்குரியர் அல்லாத பிற பெண்களை அவர்கள் சம்மதத்துடனன்றி அவர் மெய்யில் தீண்டினால், தலை ஆயிரம் சுக்கலாய் வெடித்துப் போகக்கடவதாக என்ற ஒரு சாபம் இராவணனுக் கிருந்தமையின், சீதாபிராட்டியை நிலத்துடன் சேர்த்து எடுத்துச் சென்றான் என்க.

14. ஐய-ஐயனே, ஆசலால்-ஆகையால், அது காரியம் அன்று-(நீ செய்ய நினைத்த தொழிலாகிய) அத் தொழில் செய்யத்தக்க காரியம் அல்ல, (நீ) இனி-, வேதநாயகன்பால்-வேதங்களுக்கு முதல்வனாகிய ஸ்ரீ ராமநாயகன் இடத்தில், மீண்டனை போதல்-திரும்பிச் செல்லுதலே, காரியம்-நீ செய்யக்கூடியதாம், என்றனள் பூவை-என்று சீதைகூறினாள், (அவள் கூறியவற்றைக் கேட்டு) அ கோது இலானும் இனையன கூறினான்-குற்றமற்றவனாகிய அனுமனும், இத்தன்மையானவற்றை சொல்வானாயினான் எ-று (சொன்னவற்றை பின் வரும் கவிகளிற் காண்க).

பூவை-உவமை ஆகுபெயர்.

15. நின்ற சங்கை இடரொடு நீங்கினான்-(சீதையை இராவணன் தீண்டி இருப்பானோ என்று தன் மனத்துள்ள) சந்தேகமும், அதனாலாய துன்பமும் நீங்கினவனாகிய அனுமன், (பிராட்டியைப் பார்த்து) இ உலகு உடை நாயகன் தன்-இந்த உலகங்கள் எல்லாவற்றிலும் நிறைந்திருப்பவனும் தலைவனுமாகிய இராமபிரானது, துணை பெரும் தேவி-இல்லறத்துக்குப் பெருந் துணைவியாகிய சீதா தேவியே (உங்களது) தவம் தொழில் நன்று நன்று என்று-தவச் செய்கை மிகவும் நன்றாயிருக்கிறது என்று வியந்து கூறி, சிந்தை களித்து உவந்து ஏத்தினான்-மனம் உவந்து மிகுதியும் சீதாபிராட்டியைக் கொண்டாடினான் (எ-று)

களித்து உவந்து—ஒரு பொருட் பன்மொழி.

16. நீ இனி சில் பகல் தங்குதி-நீ இன்னும் சிலநாட்கள் மாத்திரம் இங்கு (இவ்விலங்காபுரியில்) தங்கி இருப்பீரானால், இராவணனால் இருளும் ஞாலம் இது-இராவணனது கொடுங்கோன்மையால் பாவஇருள் அடைந்திருக்கிற இவ்வுலகம் முழுதும், தெருளும்-(ஸ்ரீ ராமனது துட்டநிக்கிரக சிட்ட பரிபாலனத்தால்) தெளிவு பெறும், மருளும் மன்னவற்கு-(உமது) பிரிவால் மயக்கம் கொண்டிருக்கிற மன்னனாகிய ராமருக்கு, யான் சொல்லும் வாசகம் அருளுவாய்-அடியான் சொல்லவேண்டிய வார்த்தைகளைச் சொல்லி அருள்வீர்களாக, என்று-என்று கூறி, அடியின் இறைஞ்சினான்-அச் சீதா தேவியின் பாதங்களில் வீழ்ந்து அநுமான் வணங்கினான் (எ-று)

17. நீதியோய்-அறநெறியுடையவனே! யான் இன்னும் ஒரு திங்கள் ஈண்டு இருப்பல்-இன்னமும் ஒரு மாச காலத்திற்கு யான் இவ்வூரில் இருப்பேன், பின்னை-அதன் பின்பு (இக் கெடுவுக்குள் என் நாய

கன் வராவிடில்) அந்த மன்னன் ஆணை-அந்த இராமபிரான்மேல் ஆணை, ஆவிபிடிக்கின்றிலேன்-உயிர் வைத்திருக்கமாட்டேன், நின்னை நோக்கி பகர்ந்தது-உனது முகத்தைப் பார்த்துச் சொன்னதாகிய, இதனை நீ மனங் கொள்-இதனை நீ மனத்திற் பதிப்பாயாக, (எனது நாயகனுக்கு விண்ணப்பித்தருள்) எ-று.

18. ஆரம் தாழ் திரு மார்பற்கு-மாலைகள் தொங்கப்பெற்ற (அழகிய அல்லது) இலக்குமி தங்கப்பெற்ற மார்பினையுடைய இராமபிரானுக்கு, அமைந்தது-தகுதியாகிய, ஓர் தாரம்தான் அலள் எனும்-ஓர் மனைவி யான் அல்லளாயினும், தயா எனும் ஈரம் தான் அகத்து இல்லை என்றாலும்-தயவு என்ற அன்புதானும் (என்னிடத்தில் அவருக்கு) மனத்தில் இல்லை என்றாலும், தன் வீரம் காத்தலை வேண்டு-தனது வீரத்துக்குக் (குறைவு வராமல்) காப்பதையாயினும் விரும்புக; என்று வேண்டுவாய்-என்று (யான் விண்ணப்பித்ததாக) வேண்டுவாயாக, எ-று.

19. ஏத்தும் வென்றி இளையவற்கு-(எல்லாராலும்) கொண்டாடப்படுகிற வெற்றியுடைய இளைய பெருமாளுக்கு, ஈது ஒரு வார்த்தை கூறுதி-இந்த ஒரு வார்த்தையைச் சொல்வாயாக, (அதாவது) மன் அருளால் எனை காத்து இருந்தவற்கே-மன்னவனாகிய இராமபிரானது கட்டளையால் என்னை (பஞ்சவடியில்) காவல்செய்திருந்த அவ்விலக்குவனுக்கே, இடை கோத்த வெம் சிறை வீடு-இடையிலே வந்து சேர்ந்த இக் கொடிய சிறையில் நின்றும் (என்னை) மீட்டல், கடன் என்று கூறுவாய்-கடமையாம் என்று சொல்வாயாக, எ-று.

(காத்திருந்தவற்கே மீட்டலும் கடன் என்று கூறுவாயாக என்றவாறும்)

20. திங்கள் ஒன்றின் என் செய் தவம் தீர்ந்ததால்-(இன்னும்) ஒரு மாச காலத்தோடு யான் கொண்டுள்ள விரதம் தீர்ந்து விடுமாதலால், இங்கு வந்து இலனே எனின்-(யான் கூறிய ஒரு மாச கெடுவுக்குள்) என்னை மீட்க இராமபிரான் வராது விடுவாரேயானால், யாணர் நீர் கங்கையாறு அம் கரை-என்றும் புது நீர் வருதலாகிய வருவாயையுடைய கங்கை ஆற்றின் அழகிய கரையிலே, அடியேற்கு-(தமது அடியவளாகிய) எனக்கு, தன் செம் கையால் கடன் செய்க-தனது செவ்விய கைகளினால் செய்ய வேண்டிய நீர்க்கடனை (அந்திம கிரிகைகளை)ச் செய்து முடித்து விடுவாராக, என்று செப்புவாய்-என்று ராமபிரானுக்குக் கூறக்கடதாய், எ-று.

21. ஐயா-ஐயனே! அறத்தின் நாயகன்பால் அருள் இன்மையால்-தருமத்தின் இருப்பிடமாகிய ஸ்ரீராமரிடத்து (என்னை மீட்கவேண்டுமெனும்) கருணை இல்லாமையால், மறக்கும் ஆயினும்-அவர் என்னை மறந்து விடுவார் ஆனாலும், சிறக்கும் மாமியர் மூவர்க்கும்-சிறந்த எனது மாமியர்களாகிய (கோசலை, சுமுத்திரை, கையேயி) ஆகிய மூவர்களுக்கும், சீதை-, ஆண்டு இறக்கின்றாள்-இலங்காபுரியில் மரணம்அடைகின்றவள், (அப்போது உங்களை) தொழுதாள்-வணங்கினாள், எனும் இன்ன

சொல்-என்கின்ற இவ் வார்த்தையை, நீ மறவேல்-நீ சொல்ல மறக்காதே, எ-று.

22. வந்து-(மிதிலைக்கு) வந்து, எனை கரம் பற்றிய வைகல்வாய்-என்னை மணஞ் செய்த அந்த நாளிலே, இந்த இ பிறவிக்கு இரு மாதரை-இவ்வுலகத்தில் எடுத்த இந்தப் பிறப்பில் (உன்னை அல்லாது,) வேறு ஒரு பெண்ணை, (இரண்டாம் ஆளாகிய ஒருத்தியை) சிந்தையாலும் தொடேன் என்ற-மனத்தாலும் எண்ணேன் என்று, தந்த வார்த்தை-(எனக்குத்) தந்த வார்த்தைகளாகிய, செம் வரம்-மேலாகிய வரத்தை, திரு செவி சாற்றுவாய்-ஸ்ரீராமனது அழகிய காதுகளில் சொல்லக் கடவாய், எ-று.

23. ஈண்டு நான் இருந்து-இவ் விலங்காபுரியிலே நான் இருந்து, இன் உயிர் மாயினும்-(இராமபிரானால் மீட்கப் பெருமல்) இனிமையான உயிர் நீங்கப் பெற்றாலும், மீண்டு வந்து பிறந்து-மறு பிறப்பிலே யான் இவ்வுலகத்திலே வந்து பிறந்து, தன் மேனியை தீண்டல் ஆவது-ஸ்ரீ ராமபிரானது பரிசுத்த மேனியைத் தழுவும் படியான, ஓர் தீவினை தீர் வரம்-குற்றம் நீங்கிய ஓர் வரத்தைத் தருமாறு, (சீதை) தொழுது வேண்டினாள் என்று-, விளம்புவாய்-விண்ணப்பித்துக் கொள்வாயாக, எ-று.

24. தன்னை நோக்கி உலகம் தளர்தற்கும்-(அயோத்தி நகரத்தை விட்டுக் காட்டுக்கு வந்ததை) யிட்டுத் தம்மைக் குறித்து உலகத்தார் வருந்துவதற்கும், அன்னை நோய்க்கும்-(இராமரது பிரிவால்) அவர் தம் மன்னைகௌசலை யடைந்த துன்பத்திற்கும், பரதன் அங்கு ஆற்றும் இன்னல் நோய்க்கும்-தம்பியாகிய பரதன் ஊரில் இருந்து அனுபவிக்கிற துன்பமாகிய மனோ வியாதிக்குமாக, (ஆகிய இவர்களது துன்பம் நீங்குமாறு) அங்கு ஏகுவது அன்றியே-அயோத்திமா நகருக்குச் செல்வதே யன்றி, என்னை நோக்கி இங்கு எங்ஙனம் எய்துமோ-யான் ஒருத்தி படுந் துன்பத்தை நோக்கி இவ்விடத்துக்கு எவ்வாறு வருவாரோ? (வரார் என்றபடி) எ-று.

## வேறு

25. பொன்னே-இலக்குமி போன்றவளே, ஓங்கிய போர் வில்லான்-மேலான கோதண்டத்தை உடைய ராமபிரான், முன்னே மூவுலகும் கொல்பவன்-(இராவணன் உம்மை எடுத்து வருதற்கு) முன்பே மூன்று உலகத்தில் உள்ள ராட்சதர்களையும் கொல்லும் எண்ணம் உடையவர், (அப்படியாயின்) நின் நிலை ஈது என்றால்-உமது நிலைமை இப்படிப்பட்டது என்றால், பின்பு-(கேட்ட) பிறகு, செம்மை பிடிப்பானோ-சாந்த குணத்தைக் கடைப்பிடிப்பானோ? என்னே-வியப்பாயிருக்கிறது (உமது பேச்சு) எ-று.

உலகு, பொன் இரண்டும் ஆகுபெயர்.

26. புளிக்கும் கண்டகர்-யாவரும் வெறுக்கின்ற முள்ளுப்போலக் கொடிய அரக்கரது, புண் நீருள் குளிக்கும் பேய் குடையுந் தோறும்-(இராம சங்காரத்தில்) இரத்த வெள்ளத்தில் முழுகுகிற பேய்கள் நீந்தும் போதெல்லாம், ஒளிக்கும் தேவர்-(இராவணனுக்கு பயந்து) மறைந்திருந்த தேவர்கள், உள்ளம் உவந்து-மனம் மகிழ்ந்து, களிக்கும் நல்வினை காணுயோ-செருக்கடைகிறதாகிய செய்கையை நீவிர் காணமாட்டீரோ? (எ-று) (காண்பீர் எ-டி)

## வேறு

27. காம் பயில் முரசு இனம் கறங்க-கைகளினுல் அடிக்கப்படுகிற வாத்தியங்கள் ஒலிக்கவும், கை தொடர் நரம்பினும் இமிழ் இசை நவில-கையினுல் தடவி வாசிக்கப்படுகிற யாழ் நரம்புகளினின்றும் ஒலிக்கின்ற கீதம் பயிலவும், அரம்பையர் நாடகம் ஆடிய அரங்கின்-தேவமாதர்கள் (இராவணன் ஏவலால்) நடனம் செய்த இலங்காபுரி நாடகசாலைகளில், ஆண் தொழில் குரங்குகள் முறை முறை குனிப்ப-ஆண்தன்மை (வீரம்) யுடைய குரங்குகள் வரிசை வரிசையாக நின்று (போர்வென்ற மகிழ்ச்சியால்) கூத்தாடுவதை, காண்டி-பார்ப்பாயாக, எ-று

28. வினை உடை அரக்கராம் இருந்தை வெந்து உக-பாவத் தொழில்களுடைய ராட்சதர்களாகிய கரிகள் அழிந்துபோம்படி, சனகி என்று ஒரு தழல் நடுவண் தங்கலால்-ஜானகி என்கிற ஓர் அக்கினி நடுவில் தங்குதலினுலே, அநகன் கை அம்பு எனும் அளவு இல் ஊதையால்-குற்றம் அற்ற ஸ்ரீ ராமரது கையினுல் விடப்படுகிற அம்பாகிய அளவற்ற ஊழிக் காற்றினுலே, கனகம் நீடு இலங்கை-பொன்மயமாக ஒளிவிடும் இலங்காபுரி, நின்று உருக-நின்று உருகுவதை, காண்டி-பாப்பாயாக, எ-று.

29. ஈண்டு ஒரு திங்கள்-இவ்விடத்தில் ஒருமாசகாலம், இஇடரின் வைகுதல்-இப்படிப்பட்ட பெரிய துன்பத்தில் நீர் தங்குதல், வேண்டுவது அன்று-, நான்-, விரைவில் வீரனை-சீக்கிரத்தில் ராமபிரானை காண்டலே குறைவு-காணவேண்டியதே குறைவாம், பின்-யான் கண்ட பின்பு, காலம் வேண்டுமோ-(அவர் இங்கே வருவதற்குக்) காலமும் தேவையோ (உடனே வருவார் என்றபடி) ஆண் தகை இனி ஒரு பொழுதும் ஆற்றுமோ-வீரம் நிறைந்த எம் பிரான் ஒரு கணப்பொழுதேனும் (இங்கு வராமல் தாமதித்து) அங்கு இருப்பாரோ? இரார் என்றவாறு.

30. ஆவி உண்டு என்னும் ஈது உண்டு-இராம நாயகனுக்கு உயிர் உள்ளது என்கிற இந்தச் சொல் மாத்திரம் தான் உண்டு (சீதை பிரிவு வாட்டத்தைக் கொடுத்தது என்றபடி) நெடிய கான் எலாம்-ஸ்ரீராமன் போகின்ற பெரிய காடுகள் முழுதும், உன் ஆர் உயிர் சேவகன் திரு உரு தீண்ட-உமது நிறைந்த உயிர் போன்ற மகா பராக்கிரமசாலியான ஸ்ரீ ராமனது அழகிய திருமேனி மேற் படுவதனுல், தீது இலா-தீந்து போதலில்லையான, பூ இலை-, தளிர் இலை-துளிர்கள் இல்லை, பொரிந்து

வெந்திலா-பொரிப் பொரியாய் வெந்துபோகாத, கா-சோலைகள், இலை, கொடிகளும் இல்லை என்றவாறு.

சீதையைப் பிரிந்ததனால் உண்டாய விரக வேதனையைக் குறிப்பித்தவாறும்.

31. மத்துறு தயிர் என-மத்தினால் கடையப்படுகிற தயிர் போல, வந்து-ஒரு உடம்பினுள்ளே வந்தும், சென்றும்-வெளியே போயும், (மரித்தும்) இடை தத்துறும்-(ஓர் உடம்பிலுமின்றி) நடுவே நின்று தடுமாறுகிற, உயிரொடு-உயிரும், புலன்கள்-ஐம்புலன்களும், தள்ளுறும்-சோர்வடைதலினாலாகிய, பித்து-பைத்தியமும், (இவை ஒரு புறமும்) நின் பிரிவினின் பிறந்த வேதனை-உம்மைப் பிரிந்திருத்தலாகிய துன்பங்களும் (இது மறுபுறமும் நின்ற வருத்தம் துன்பங்கள்) எத்தனை உள-எவ்வளவு உள்ளனவோ, அவை எண்ணும் ஈட்டவோ-அவைகள் எல்லாம் எண்ணிச் சொல்லும் தன்மை உடையனவோ? அல்ல, என்றவாறு.

(இவை கூறி அநுமன் சீதாதேவியைத் தேற்றினன் என்க)

32. இ நிலை யுடையவன்-முன் கூறிய நிலையை (உம்மைப் பிரிந்ததால்) அடைந்துள்ள ராமபிரான், தரிக்கும் என்றி ஏல்-உயிர்வாழ்ந்திருப்பான் என்று கூறுவாயானால், மெய் நிலை உணர்ந்த உழி மிடைந்தது ஈது எனின்-ஸ்ரீ ராமரது உடம்பின் தன்மையை ஆலோசித்துப் பார்க்கும்போது பொருந்தியது இதுவாதலால், பொய் நிலை-நீ சொல்வது பொய்ம்மை உடையதாம், யான் புகன்ற யாவும்-நான் சொன்ன எல்லாவற்றையும், உன் கை நிலை நெல்லி அம் கனியின்-உமது கையில் உள்ள அழகிய நெல்லிக் கனி போல, காட்டுவேன்-நான் காண்பிப்பேன், காண்டி-காண்பாயாக, எ-று.

33. எண் அரும் பெரும் படை-கணக்கில்லாத பெரிய குரங்குப் படைகள், நாளை இ நகர் நண்ணிய பொழுது-நாளைக்கே இவ் விலங்காபுரிக்கு வந்து சேர்ந்த பொழுது, அது நடுவண்-அந்தச் சேனையின் நடுவிலே, விண் உற கருடன் மேல் விளங்கும் விண்டுவின்-ஆகாயத்தைப் பொருந்தக் கருடபகவான் மீது விளங்குகின்ற திருமாலைப் போல, கண்ணனை-ஸ்ரீ ராமனை, என் நெடு வெரிநில்-எனது பெரிய பிடரியின் மேல், மங்கை-பெண்களிற் சிறந்தவளே, நீ காண்டி-நீர் காண்பீராக, எ-று.

(விரைவு பற்றி நாளை என்றார்.)

34. அங்கதன் தோண்மிசை-அங்கதனது தோளின் மேல், இளவல்-இளையவனாகிய இலக்குவன், அ மலை பொங்கு வெம் கதிர் என-அந்த உதயகிரி மலையில் விளங்குகின்ற உஷ்ண கிரணங்களையுடைய சூரியன் போல, பொலிய-விளங்கவும், போர் படை இங்கு வந்து இறக்கும்-யுத்த எத்தனங்கள் உள்ள குரங்குப் படை இவ் விலங்காபுரியில் வந்து தங்கும், ஆகையால், நீ-, இடரும்-இப்போது கொண்டுள்ள துன்பத்தையும், ஐயமும்-ராமபிரான் மீட்பாரோ எனும் ஐயத்தையும், சங்கையும்-பகைவரை வெல்வரோ எனும் சந்தேகத்தையும், நீங்குதி-தவிர்

வாயாக, தனிமை நீங்குவாய்-தனித்திருத்தலையும் விரைவில் நீங்கப் பெறுவாய், எ-று.

35. குரா வரும் குழலி-குராமலர்கள் வாசனை வீசப்பெற்ற கூந்தலையுடையவளே, இ குறித்த நாள்லே-நீர் குறித்த இவ்வொரு மாச காலத்துள்ளே, விராவரும் நெடுஞ்சிறை மீட்கிலான் எனின்-பொருந்தியுள்ள இப்பெரும் சிறையில் நின்றும் உம்மை மீட்காமற் போவார் ஆனால், பராவரும் பழி யொடும் பாவம் பற்றுதற்கு-பரவிவருகின்ற பழியும் பாவமும் தொடருதற்கு, அவன் இராவணன் இவன் இராமன் என்றனன்-இராமபிரானே இராவணன், இவ் விராவணனே இராமன் ஆவான் என்று கூறினன் அநுமான், எ-று.

## வேறு

36. ஆக-இவ்வாறாக, ஆசு இல-குற்றமில்லாதனவாகிய, இமொழி-இவ் வார்த்தைகளை, தோகையும் கேட்டு-மயில் போலும் சாயலையுடைய சீதாபிராட்டி கேட்டு, அறிவு உற்றாள்-அறிவு தெளிந்தவளாய், உவகைகொண்டு களிக்கும் மனத்தள்-மகிழ்ச்சி மிகுந்து உவக்கின்ற மனத்தையுடையவளாய், உயர்ந்தாள்-சிறப்பினை அடைந்து, இவன் போகை நன்று புந்தியில் வைத்தாள்-அனுமனாகிய இவன் விரைவில் நமது நாயகனிடம் செல்லுதலே தக்கது என்று தன் மனதுள் எண்ணி, சில வாசகம் இன்னன சொன்னாள்-இவ்வாறான (கீழ் வரும்) சில வார்த்தைகளைச் சொல்வாளாயினள், எ-று.

37. மெய்ம்மை தொடர்ந்தோய்-உண்மையான வழியை நாடுபவனே! என் ஓர் இன் உயிர் மென் கிளிக்கு-எனது ஒப்பற்ற இனிய உயிரினும் அரிய கிளிப்பிள்ளைக்கு, யார் பெயர் ஈகேன் மன்ன என்றலும்-யாருடைய பெயரை இடுகிறது நாயகனே என்று யான் கேட்டபோது, மாசறு கை கயன் மாது-குற்றமற்ற கேகய நாட்டரசன் புத்ரியும், என் அன்னை தன் பெயர் ஆக என-எனது தாயாருமாகிய கைகேசியினுடைய பேர் வைக்கக் கடவது என்று, அன்பினொடு அந்நாள் சொன்ன-உள்ளன்புடனே அந்த நாட்களில் கூறிய, மெய் மொழி சொல்லுதி-மெய்ம்மையான வார்த்தையையும் (அடையாளமாகச்) சொல்வாய், எ-று.

38. தன் மலர் கையில் அன்னது வாங்கினாள்-சீதாபிராட்டி தனது மலர் போன்ற கைகளில் (மறைத்துவைத்திருந்த) சூடாமணியை எடுத்தாள், அ அநுமனும் இது என் கொல் என்னா முன்னா ஏங்கினான்-அந்த அனுமனும் இது என்னவென்று எண்ணி திகைத்து, வீங்கினான் வியந்தான்-உடம்பு பூரித்து ஆச்சரியம் கொண்டான், (பிராட்டி, கையில் வைத்திருந்த போதில் அதன் ஒளியால்) உலகு ஏழும் விழுங்கி தூங்கு-ஏழுலகங்களையும் உட்கொண்டு தங்குகிற, கார் இருள் முற்றும் சுற்றும் இரிந்தது-கரிய இருள் முழுவதும் சுற்றிலும் ஓடிப்போய் விட்டது, எ-று.

ஏங்கினான், வீங்கினான் என்பன முற்றெச்சம்.

39. (சூடாமணியின் பிரகாசத்தால்) மஞ்சு அலங்கு ஒளியோனும்-மேகங்களுக்கு மேல் விளங்குகின்ற ஒளியுடைய சூரியனும், அஞ்சலன்-பயப்படாதவனாய், இமா நகர் வந்தான் என-இலங்காபுரியிலே வந்தான் போலும் என்று, வெம் கண் அரக்கர் அயிர்த்தார்-பயங்கரமான கண்களையுடைய இராட்சதர்கள் சந்தேகித்தார்கள், (இராவணனுக்குப் பயந்து சூரியன் வருதல் இல்லை அந்நகருக்கு என்றபடி) சஞ்சலம் புரி சக்கர வாகமுடன்-(சோடுடன் சேராது) வருத்தம் அடைந்துள்ள சக்கரவாளப் பட்சிகளும், தாழ் கஞ்சமும்-என்றும் மலராது குவிந்தே உள்ள தாமரை மலர்களும், மலர்வு உற்றன-மலர்ச்சியடைந்தன, காந்தம் காந்தின-சூரியகாந்தக் கற்கள் தீயுமிழ்ந்தன, எ-று.

சக்கரவாளப் பட்சிகள் இரவில் பிரிந்து இருந்து பகலில் ஆணும் பெண்ணும் கூடிக் குலாவுத லியற்கை. மற்றவை வெளிப்படை.

40. மழை கொள் மென் கூந்தல்-குளிர்ச்சியைக்கொண்ட மென்மையான (சீதையின்) கூந்தலாகிய, முகில் மேல் எழு-மேகத்தின் மேலே விளங்குகிற, கோளின் வேந்து அது அன்னது-நவக் கிரகங்களுள் தலைவனை சூரியனை ஒத்திருப்பதும், மெல் இயல் தன் எழில் மேனி-மென்மையான தன்மையையுடைய ஜானகியுடைய அழகு மிகுந்த சரீரம்போல, சேந்தது-சிவந்துள்ளதும், அந்தமில் சேவகன்-(திருக்கலியாண குணங்களுக்கு) எல்லையில்லாத வீரனாகிய ஸ்ரீராமனது, சே அடி என்ன காந்துகின்றது-சிவந்த திரு வடிகள் பிரகாசிப்பதுமாகிய அச் சூளாமணியை. காட்டினள்-பிராட்டியார் காண்பிக்க, மாருதி கண்டான்-அனுமான் பார்த்தான், எ-று.

(முகில் கூந்தலுக்கும் சூரியன் சூளாமணிக்கும் உவமை.)

41. நாடி வந்து-(என்னை) தேடிவந்து, எனது இன் உயிர் நல்கிய நம்பா-எனது இனிய பிராணனைக் கொடுத்த மேலானவனே, கண் மணி ஒப்பது-கண்ணுள் மணியை ஒப்ப அருமையானதும், தொல் நாள் ஆடையின் கண் இருந்தது-இராவணன் எடுத்து வந்த நாள் முதல் எனது ஆடையுள் முடிந்து வைக்கப்பட்டிருந்ததுமாகிய, சூடையின் மணி-இச்சூடாமணியை. பேர் அடையாளம் கோடி என்று-பெரிய அடையாளமாகக் கொள்வாயாக என்று சொல்லி, மெய் புகழ் கொண்டாள்-உண்மைப் புகழ் படைத்த பிராட்டியானவர், கொடுத்தனள்-அதனை அனுமனிடம் கொடுத்தாள், எ-று.

42. தொழுது வாங்கினன்-(அனுமன்)பிராட்டியை வணங்கி வாங்கிக்கொண்டு, முற்ற-முடிய (ஸ்ரீ ராமரிடம் தான் செல்லும் வரை) பழுது உறு வகை சுற்றிய தூசினன்-ஒரு பழுதும் வராதபடி (இடைவழியில் நழுவி விழாதபடி) தனது ஆடையிற் சுற்றி முடிந்து, பந்தனை செய்தனன்-அதனைப் பத்திரப்படுத்தி, வந்தித்து-நமஸ்கரித்து, அழுது-சீதையின் நிலைமையை எண்ணி அழுது, மும்மை வலங் கொடு இறைஞ்சினன்-மூன்றுமுறை சுற்றி வந்து பின்னும் வணங்கினான், எழுது பாவையும்-சித்திரத்து எழுதிய பாவை போல்வாளும், அன்பொடு ஏத்தினள்-

அன்புடன் அவனை ஆசீர்வதித்தாள், இ பால் வகினன்-பின்பு அனுமன் இராமனிடம் போகுமாறு திரும்பினான், எ-று.

—:o:—

## 2 கந்த புராணம்

### தகரேறு படலம்

*நாரத முனிவர் இயற்றிய வேள்வித் தீயில் நின்றும் தோன்றிய ஆட்டுக்கடா ஒன்று, அனைவரையும் கொன்றெறிந்தது. இந் நிகழ்ச்சியைத் தேவர்கள் மூலம் அறிந்த முருகவேள், தமது துணைவராகிய வீரவாகுவை யேவி, கடாவினைக் கொணர்வித்து, அவர்கள் கேள்விப்படி, வாகனமாகக் கொண்டருளினர் என்பதாம்.*

1\. சூரன் முதலோர் உயிர் தொலைக்க வரு செவ்வேள்-(அசுரரான) சூரபன்மனதும் அவனது துணைவரதும் ஆவியை அழிக்கும் வண்ணம் அவதரித்தவரான முருக பிரான், ஆரும் மகிழ் வெள்ளி அசலத்தின் அமர் போழ்தின்-யாவரும் மகிழ்தற்கேற்ற வெள்ளி மயமான கைலாச மலையிலே (எழுந்தருளி) இருக்கும்போது, நாரதன்-நாரதமுனிவர் ஆனவர், மேருவில் உடைபரன் விரும்ப-மகாமேருமலையை வில்லாக உடைய பரமேஸ்வரன் (சிவன்) மகிழும்படி, அகிலத்தே-பூமியிலே, ஓர் வேள்வியை நடாத்தியிடல் உற்றான்-ஒரு யாகத்தை இயற்றினான், எ-று.

ஓர் வேள்வி-ஒப்பற்ற வேள்வியுமாம், அமர் போழ்தின், பரன் விரும்ப அகிலத்தில் நடாத்தியிடலுற்றான் எனப் பொருள் முடிவு செய்க. அமர், வினைத்தொகை, நடாத்தி என்பது விகாரம். முப்புரங்களை எரிக்க, மேரு மலையை வில்லாகக் கொண்டார் சிவபெருமான் என்பது புராணக் கதை.

2\. மா முனிவரும்-(தவத்தால்) உயர்ந்த முனிவர்களும், சுரரும்-தேவர்களும், மாநில வரைப்பில்-மிகவும் (பரந்த) நிலப் பரப்பையுடைய பூவுலகில், தோம் அறு தவத்தின் உயர் தொல்லை மறையோரும்-குற்றமற்ற தவத்தினால் உயர்ந்த பழைய பிராமணர்களும், ஏமமொடு சூழ் தர-மகிழ்வுடன் (யாகத்தைச்) சூழ்ந்திருக்க, இயற்றிய மகத்தில்-(நாரதன்) செய்த யாகத்தில், செக்கர் புரை ஒரு செச்சை-(மாலைக் காலத்தில் தோற்றும்) சிவந்த வானத்தை ஒத்த ஒரு ஆட்டுக்கடா, தீ மிசை-ஓமத் தீயில் நின்றும், எழுந்தது-, எ-று.

3\. அங்கிதனில் வந்த தகர்-வேள்வித் தீயில் நின்றும் புறப்பட்ட, ஆட்டுக்கடாவானது, ஆற்றும் மகம் தன்னில்-(மனிதரால்) செய்யப்படுகின்ற வேள்விகள் அனைத்திலும், நங்கள் இனம் பலவுமே நாளும் அடுகின்றார்-எங்கள் இனமாகிய பல ஆடுகளையே நாள்தோறும் கொன்று வருகிறார்கள், (ஆதலால் இவர்களை) இங்கு யான் இவரை அடுவன் என்று இசைவு கொண்டு-இவ்விடத்தில் இவரை எல்லாம், (கொலைக்குக் கொலையே என்றபடி) கொல்லுவேன் என்று மனதுள் உறுதி

கொண்டு, வெம் கனலை எந்து பரி-கொடிய அக்கினியைச் சுமக்கின்ற, (குதிரையானது) மீது எழுதல் போலும்-அவ் வக்னியின் மேற் கிளம்புவது போலும், எ-று.

4. மாருதமும்-ஊழிக்காற்றும், ஊழிதனில் வன்னியும்-வடவைதீயும், விசும்பில் பேரும் உறும் ஏறும்-மேகத்தில் தோன்றும் இடியும் ஆகிய இவைகள் எல்லாம், ஒரு பேர் உருவு கொண்டு ஆருவதுபோல்-ஒரு பெரிய உருவத்தை எடுத்துக்கொண்டு வருவது போல, விரைவும் அத்து ஒளியும் ஆர்ப்பும் சேர எழும் மேடம்-அதிக விரைவும், சிவப்பு நிறமும், பேர் ஒலியும், பொருந்துமாறு தோன்றிய ஆட்டுக் கடாவானது, அடு செய்கை நினைந்ததன்று-கொலை செய்தலை நினைத்தது எ-று.

5. கல் என-கல் லென்னும் குறியோசை உண்டாகுமாறு, மணித்தொகை-சிறு மணிக் கூட்டங்கள், களத்தின் இடை தூங்க-அதனுடைய கழுத்திலே அசைந்து (சப்திக்கவும்) சில் அரி பெய் கிங்கிணி சிலம்பு அடி புலம்ப-சில பருக்கைக் கற்கள் உள்ளே வைக்கப் பெற்ற கிங்கிணியும் சிலம்பும் கால்களிலே ஒலித்தலைச் செய்யவும், வல்லை வருகின்ற தகர்-விரைவாக வருகின்றதாகிய கடாவினை, மகத்து உள்ளோர் எல்லவரும் கண்டு-யாக சாலையில் உள்ளவர்கள் எல்லாரும் கண்டு, அச்சமொடு இரிந்தனர்கள்-பயத்துடன் ஓடிப்போனார்கள், எ-று.

6. இரிந்தவர்கள் யாவரையும்-(அதனைக் கண்டு) பயந்து ஓடினோர் எல்லோரையும், செயிர்த்து-(கடாவானது) கோபித்து, இபுவியும் வானும் துரந்து-இந்தப் பூவுலகத்திலும், ஆகாயத்திலும் துரத்திச் சென்று, சிலர் வீழ்ந்து தொலைவு ஆக நனி தாக்கி-(பயந்து ஓடினோருள்) சிலரைக் கீழே விழுந்து அழியும்படி மிகுதியும் தாக்கி, பரந்த தரை மால் வரை பராகம் எழ ஓடி திரிந்து-பரந்த இந்தப் பூமியிலும் பெரிய மலைகளிலும் தூசு எழும்படி அதி வேகமாய் ஓடித் திரிந்து, உயிர் வருந்த அடல் செய்தது-அவர்களது உயிர்களானவை வருத்தம் அடையும்படி கொன்றழித்தது, எ-று.

7. எட்டுள திசைகரி இரிந்து அலறி ஏங்க கிட்டி எதிர் தாக்கும்-எட்டுத் திக்குகளிலும் உள்ள (வலிமை மிக்க) யானைகளும் அஞ்சிக் கதறி ஏக்கமடையுமாறு, அவற்றினை அணுகி எதிரே மோதும், மதிகேள் கிளர் விமான தட்டு இரவி தேரொடு தகர்ந்து முரிவு ஆக மூட்டும்-சந்திரனது நிறம் துலங்குகின்ற தேரின் தட்டும், சூரியனுடைய தேரும் உடைந்து அழிந்து சிதையும் வண்ணம் (கடா) தாக்கும், அவர் தம் பரியை மொய்ம்பினொடு பாயும்-சந்திர சூரியரது குதிரைகளை வலிமையுடன் (கொல்லும் பொருட்டுப் பாயும்) எ-று.

சந்திரன் பத்துக் குதிரைகள் பூட்டிய மூன்று சில்லுத் தேரிலும், சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய தேரிலும் பவனி வருவர் என்பது புராணக் கதை.

8. இனைய வகையால்-இவ்விதமாக, தகர்-ஆட்டுக் கடா, யாண்டும் உலவுற்று-எவ்விடங்களிலும் உலாவி, சினமொடு உயிர்கட்கு இறுதி

செய்து பெயர்காலே-கோபத்துடனே உயிர்களுக்கு அழிவைச்செய்து வருகின்றபொழுது, முனிவர்களும் நாரதனும் மொய்ம்பு மிகு வானோர் அனைவர்களும்-கடாவது செய்கை கண்ட தவத்தினர்களும், நாரதனும், (மற்ற) வலிமை மிகுந்த தேவர்கள் எல்லோரும், அரும் கயிலை புக்கார் ஓடினர்-அரிய கயிலாயத்துள் (அடைக்கலமாகப்) புகுந்துகொள்ளுமாறு ஓடினார்கள், எ-று.

9. ஊறு புக-(தகரினால்) துன்பம் உண்டாக, அன்னவர் உலைந்து கயிலை கண் ஏறி வரு காலேயில்-(முனிவர், தேவர்) ஆகிய அனைவர்களும் அலைந்து, கயிலாய மலைக்கு ஏறி வருகின்ற பொழுதில், ஆறுமுக அண்ணல்-ஆறுமுகனாகிய குமரவேள், வீறு திறல் இலக்கம் உடன் ஒன்பான் வீரர் ஒடு-உயர்ந்த வலிமையுடைய இலட்சத்தொன்பது வீரர்களோடும், மேவி உலவுற்று விளையாடல் அது கண்டார்-சேர்ந்து உலாவி விளையாட்டயர்வதைக் கண்டார்கள், எ-று.

அன்னவர் கண்டார் என முடிக்க.

10. ஈசனிடை நண்ணுகிலம்-(நாம்) கைலைநாதனிடம் செல்லத் தேவையில்லை, குமர ஈசன் நம் துயரம் நீக்க நேசமொடு ஈண்டு எதிர் வந்தான்-குமாரக் கடவுள் எங்களது துன்பத்தை நீக்குமாறு, அன்புடன் இவ்விடத்திலே எமக்கு எதிர் காணப்பட்டார், ஆ-ஆகா! அண்டர் பலரோடும் வாசவனை வென்று உயிரை மாற்றி எழுவித்தான்-தேவர்கள் பலருடன், தேவேந்திரனை வென்று அவனைக் கொன்று பின்பு (தேவரின் மன்றுட்டுக் கிரங்கி) உயிர்ப்பித்தவர், சிறுவன் அல்லன்-இவர் பாலியர் அல்லர், எ-று.

11. எம் குறை முடித்திடல் இவற்கு எளிது-எமக்குக் (கடாவினால் ஏற்பட்ட) துன்பத்தை முடித்தருளுதல் (குமரனாகிய) இவருக்கு இலகுவாகும், (ஆதலால்) நாம் இபுங்கவனொடு உற்றது புகன்று இடுதும் என்னா-நாங்கள் இந்த முதல்வர் இடத்தே நடந்தவைகளைக் கூறுவோம் என்று, தங்களில் உணர்ந்து-தங்களுக்குள்ளே ஆலோசித்து சுரர் தாபதர்கள் யாரும்-தேவர்கள் முனிவர்கள் (என்று சொல்லப்பட்ட) எல்லாரும், அரும் துதிகள் செய்து அங்கு அவன் முன் ஏகினர்-மேலான நமஸ்காரங்கள் செய்து அக் குமரக் கடவுளுக்கு முன் (வணக்கத்துடன்) சென்றார்கள், எ-று.

12. வந்து புகழ் வானவரும் மாமுனிவர் தாமும்-(இவ்வாறு) வந்து புகழ்ந்தேத்துகின்றவராகிய தேவர்களும் சிறந்த முனிவர்களும், தந்தி முகவற்கு இளவல் தன் அடி வணங்க-பிள்ளையாரது தம்பியாகிய வேற்கடவுளது இணை அடிகளை நமஸ்கரிக்க, கந்தன் அவர் கொண்ட துயர் கண்டு-மயில்வாகனர் (முனிவரும் தேவரும்) ஆகிய அவர்கள் அடைந்துள்ள துன்பத்தைப் பார்த்து, நீவிர் மிக நொந்தனிர்-நீங்கள் மிகவும் வருத்தம் அடைந்தவர்களாகக் காணப்படுகிறீர்கள், புகுந்தது நுவன்று இடுதிர் என்றான்-(நீவிர்) இங்குற்றது எதனால் என்றதைக் கூறுவீர்களாக, என்று அருளினார், எ-று.

13. இளையோய் கேட்டி-(கணபதி)க் கிளைய குமரவேற் கடவுளே கேட்பீராக!, யாங்கள் மறை கிளத்தும் ஒரு வேள்வி வேட்டனம்-நாங்கள் வேதத்திலே கூறப்பட்ட (விதி தப்பாது) ஒரு யாகம் செய்தோம், அது வேலை இடைதன்னில்-செய்துகொண்டு இருக்கும்போது, மாட்டு கனல் ஊடு ஒரு மறி தகர் எழுந்து-யாக அக்கினியில் நின்றும் ஒரு இளமை பொருந்திய ஆட்டுக்கடா தோன்றி, ஈட்டம் உறும் எம்மை அட எண்ணியது-கூடி இருந்த எங்களைக் கொல்லக் கருதியது, எ-று.

14. ஆடு எழு கிளர்ச்சியை அறிந்து-அந்த ஆட்டுக் கடா (வெறி கொண்டு) எழுகின்ற எழுச்சியைக் கண்டு, மகம் விட்டு இவண் ஓடி உற்றனம்-(நாங்கள்) யாகத்தை விட்டு இவ்விடத்துக்கு ஓடிவந்தோம், அது உருத்து துரந்து சிற் சிலவர் தம்மை சாடியது-(வரும்போதில்) அவ் வாடு கோபங்கொண்டு பின்தொடர்ந்து, எம்மில் சில பேர்களைக் கொன்றழித்தது, அதனாலே-, விண்ணின் ஒடு மண்மேல்-மேல் உலகிலும் பூமியிலும், அளப்பு இல் உயிர் வீடியது-அளவில்லாத உயிர்கள் இறந்து ஒழிந்தன, எ-று.

15. இது நீல விடம் அன்று-இது நீல நிறம்பொருந்திய நஞ்சல்ல, செக்கர் நிறம் குலவு கோலவிடமே அயம் போல உருவு கொண்டது-சிவப்பு நிறம் பொருந்திய வடிவினையுடைய நஞ்சே ஆட்டுக்கடாப்போல உருவு எடுத்தது, ஓலம் இட எங்கும் உலவுற்றது-(கண்ட உயிர்கள் பயத்தால்) ஓலமிடும்படி எங்கணும் உலாவிற்று, ஒரு கன்னல் முடிமுன்னம்-ஒரு நாழிகை காலத்துள்ளே, உயிர் எல்லாம் காலம் முடிவு எய்தும்-(இது இன்னும் உலவுமேல்) உலகின்கண் உயிர்கள் எல்லாம் இறந்துபடும், எ-று.

16. சீற்றமொடு உயிர்க்கு இறுதி செய்து உலவும் மேடத்து ஆற்றலை அடக்கி-சினத்துடனே சீவன்களுக்கு அழிவை உண்டாக்கி வருகின்ற ஆட்டுக்கடாவினது வலிமையை அடக்கி, எமது அச்சமும் அகற்றி-எமது பயத்தையும் நீக்கி, எற்ற குறை வேள்வியையும் ஈறு புரிவித்து-(யாம்) ஏற்றுக்கொண்ட (ஆரம்பித்த) குறை யாகத்தையும் முடிவுபெறச் செய்து, போற்றுதி-(எம்மைக்) காப்பாற்றி அருள்க, என தொழுது போற்றி செயும் வேலை-என்று, தேவர் முனிவர் முருகனைத் துதித்து நிற்கும் பொழுது, எ-று.

17. இளையோன்-குமரவேலன், எஞ்சும் அவர் தம்மை பரிவின் நோக்கி-மனம் வருந்தி நிற்கும் அவர்களைக் கிருபையுடன் பார்த்து, அம் கையது அஞ்சல் விடுமின்கள் என அமைத்து-(தமது) அழகிய கையால் பயத்தை அகற்றுங்கள் எனக் (கை) அமர்த்தி, தஞ்சம் என பரவு தன் பரி சனத்துள்-(குமரனே) அடைக்கலம் என்று துதிக்கின்ற தனது பரிவாரங்களுள், மஞ்சு பெறமேனி விறல் வாகு வொடு சொல்வான்-அழகு பொருந்திய சரீரத்தையுடைய வெற்றியையுடைய வீரவாகு தேவருடன் கூறுவாராயினர், எ-று.

18. மண்டு கனல் வந்து-வளர்ந்தெரிகின்ற நெருப்பிடைத்தோன்றி, இவர் மகம் தனை அழித்து-இவர்கள் (செய்த) வேள்வியைக் கெடுத்து, அண்டமொடு பார் உலவி-ஆகாய உலகினும் பூமியிலும் திரிந்து, ஆர் உயிர்கள் தம்மை உண்டு திரி செச்சை தன்னை-நிறைந்த உயிர்கள் தம்மைக் கொன்று திரிகிற ஆட்டுக் கடாவை, ஒல்லை குறுகுற்று-விரைவில் சென்று, கொண்டு அணைதி என்று-(அடக்கிக்) கொண்டு வருவாயாக என்று, உமை குமாரன் உரை செய்தான்-பார்வதி திருக்குமாரராகிய வேற் கடவுள் அருளிச் செய்தார், எ-று.

## வேறு

19. குன்று எழு கதிர் போல் மேனி குமரவேள் இனைய கூற-உதயகிரிமலையிற் றோற்றுகின்ற பால சூரியனை ஒப்பப் பிரகாசம் பொருந்திய திருச் சரீரத்தையுடைய பால சுப்பிரமணியன் இவற்றைக் கூறி அருள, மன்றல் அம் தடந்தோள் வீரவாகு ஆம் தனி பேர் பெற்றோன்-வாசனை பொருந்திய அழகிய அகன்ற தோள்களையுடைய வீரவாகு என்கிற ஒப்பற்ற பெயர் பெற்றவன், நன்று என இசைந்து-நல்லதென்று சம்மதித்து, கந்தன் நாண் மலர் பாதம் போற்றி-முருகக் கடவுளுடைய அன்று அலர்ந்த மலர் போன்ற திரு அடிகளை நமஸ்கரித்து, கயிலை நீங்கி சென்றனன்-திருக் கயிலை மலையை நீங்கிப் போய், சின தகர் தேடல் உற்றான்-கோபத்தினையுடைய ஆட்டுக்கடாவைத் தேடத் தொடங்கினான், எ-று.

20. மண்டல நேமி சூழும் மா நிலம் முற்றும் நாடி கண்டிலன் ஆகி-வட்ட வடிவமான சமுத்திரத்தாற் சூழப் பெற்ற பெரிய பூவுலகம் முழுதும் தேடிக் காணப் பெறாதவர் ஆகி, ஏழ் பிலத்தினும் சென்று காண்கில்லான்-ஏழு பாதள வுலகங்களிலும் (கீழ் உலகம் அனைத்திலும் எ-படி) தேடியும் காணான் ஆகி, அண்டர் தம் பதங்கள் நாடி-தேவர்களது உலகங்களிலும் தேடி (மேல் உலகம் எல்லாவற்றிலும்) (அங்கும் காணப் பெறாராய்) அயன் பதம் முன்னதாக-பிரமதேவரது உலகத்திற்கு முன்பாக, தண் தளிர் செக்கர் மேனி தகர் செலும் தன்மை கண்டான்-இளந் தளிர் போன்ற சிவந்த வடிவத்தினையுடைய ஆட்டுக் கடாவானது செல்லும் தன்மையைக் கண்டார் (வீரவாகு தேவர்)எ-று.

21. வீரவாகு-, ஆடலம் தொழில் மேற் கொண்டு அனைவரும் இரிய செல்லும் மேடம் அஞ்சுற ஆர்த்து-போர்த் தொழிலை மேற் கொண்டு எல்லாரும் அஞ்சி யோடும்படி போகின்ற ஆட்டுக்கடா பயப்படும்படி ஆரவாரித்து, விரைந்து போய்-(அதனை) விரைவாய்க் கிட்டிச் சேர்ந்து, கோடு அவை பற்றி ஈர்த்து கொண்டு உராய் கயிலை நண்ணி-அக் கடாவினுடைய இரு கொம்புகளையும் பிடித்து இழுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுக் கயிலாசமலையைச் சேர்ந்து, ஏடு உறு நீப தண் தார் இளையவன் முன்னர் உய்த்தான்-இதழ் மிகுந்த குளிர்ந்த கடப்ப மாலையை அணிந்த முருகக் கடவுளின் முன் விடுத்தார், எ-று.

22. உய்த்தனன் வணங்கி நிற்ப-(கடாவை வேள்முன் விட்டு) நமஸ்கரித்து நிற்க, உளம் மகிழ்ந்து அருளி-மனமகிழ்ந்து, தேவர் மெய்தவர் தொகையை நோக்கி-தேவர்களதும் உண்மையான தவத்தையுடைய முனிவர்களதும் கூட்டத்தைப் பார்த்து, வழகம் எம் பால் மேவிற்று-(உம்மை வருத்திய) ஆட்டுக்கடா எம்மிடம் வந்து சேர்ந்தது. இனி எய்த்து வருந்துகில்லீர்-மனம் கலங்கி வருத்தம் அடையாதீர்கள், நீர் யாரும் புவனி ஏகி-நீங்கள் எல்லாரும் பூமியை அடைந்து, முதழல் கொடுமுன் செய்த வேள்வியை முடித்திர் என்ருன்-மூன்று வகையான அக்கினியைக் கொண்டும் (குறையாய் விட்டு வந்த) முன் செய்த யாகத்தைச் செய்து முடியுங்கள் என்று கூறி அருளினர் (முருக பிரான்) எ-று.

23. ஏர் தரு குமர புத்தேள் இ வகை இசைப்ப-அழகு மிகுந்த குமாக்கடவுளானவர் இவ் வார்த்தைகளைக் கூற, அன்னேர்-தேவரும் முனிவருமாகிய அவர்கள் (முருக பிரானை நோக்கி) கார் தரு கண்டத்து எந்தை-(நஞ்சுண்டமையால்) திரு நீல கண்டத்தை (மிடறு) உடைய சிவபிரானது, காதல-புத்திர, சிறியரேம் உய்யும் ஆற்ருல்-சிறியராகிய நாம் உய்ந்து போகுமாறு, வேள்வி தீயில் சேர் தரு தகரின் ஏற்றை ஊர்திபது ஆக கொண்டு-யாக அக்கினியில் தோற்றிய ஆட்டுக்கடாவை (தமது) வாகனமாக ஏற்றுக்கொண்டு, ஊர்ந்திடல் வேண்டும் என்ருர்-நடாத்தி அருளல் வேண்டும் என்று மன்றுடினார்கள், எ-று.

24. என்னலும்-என்று பிரார்த்தித்தலும், தகரை அற்றே யானம் ஆ கொள்வம்-(உங்களது விருப்பப்படி) ஆட்டுக்கடாவை எமது வாகனமாகக் கொள்ளுவோம், பார் மேல்-பூவுலகம் சென்று, நீவிர் முன்னிய மகத்தை முடித்திர் என்று அருள-நீங்கள் செய்ய நினைத்த யாகத்தை முடிப்பீர்களாக என்று அருளிச் செய்த அளவில், யார்க்கும் நல் நயம் ஆடல் செய்யும் நாரதன் முதலோர் யாரும்-எல்லார்க்கும் நன்மை பயக்கும் வார்த்தைகளைக் கூறுகின்ற நாரத முனிவர் முதலிய யாவரும், அன்னது ஓர் குமாரன் எந்தை அடி பணிந்து அருளால் போந்தார்-அந்த ஒப்பற்ற முருகக் கடவுளது (இணை) அடிகளை வணங்கி (அக் கடவுள்) விடை கொடுத்தபடி (பூமியை நோக்கிச்) சென்ருர்கள், எ-று.

25. நலவ இல் சீர் முனிவர் தேவர் நயப்ப-குற்றமற்ற சிறப்பினையுடைய முனிவர்களும் தேவர்களும் விரும்பும் வண்ணம், நாரதன் என்று உள்ளோன்-நாரதன் என்று சொல்லப்படுகிற முனிவன், புவிதனில் வந்து-பூமியிற் சென்று, முன்னர் வேள்வி முற்ற புரிந்தனன்-முன்பு செய்து குறையில் விட்டுச் சென்ற யாகத்தை முற்றுப் பெறுமாறு செய்தார். அவர் புரி தவத்தின் நீரால்-அம் முனிவரும் தேவரும் செய்த தவத்தின் மேம்பாட்டால், அன்று தொட்டு-, அமல மூர்த்தி-பாசமற்ற முருகபிரான், உவகையால் அனைய மேடம் ஊர்தியாக ஊர்ந்தனன்-மகிழ்வோடும் (கொல்லும் தன்மையுள்ள) அந்த ஆட்டுக்கடாவைத் தமது வாகனமாகக் கொண்டு அருளினர், எ-று.

———:o:———

# 3 சாவித்திரி வெண்பா

1. உலகில்-இவ்வுலகத்து, என்றும்-எஞ்ஞான்றும், இசை நன்கு நாட்ட-கீர்த்தியைச் செவ்வனே நிலை நிறுத்த, நயந்து-விரும்பி, ஐய நீவிர் யார்-ஐயரே நீர் யாவர், எங்கு நின்று இவண் வந்தீர்-எங்கே நின்று இவ்விடத்துக்கு வந்தீர், என் ஆர் உயிருக்கு ஆர் உயிர் ஆம்-எனது அரிய ஆன்மாவிற்குச் சிறந்த ஆன்மாவாய் உள்ள, ஆண்டகைதன்-ஆண் தகைமையினையுடைய எனது நாயகரின், ஓர் உயிரை-ஒப்பற்ற உயிரை, (ஆன்மாவை) என் கொண்டு செல்கின்றீர் என்றாள்-என்ன காரணத்தால் எடுத்துக்கொண்டு போகின்றீர்கள் என (சாவித்திரி) வினவினாள் எ-று.

கு-பு: அருமை-உயிர், ஆருயிர்.

2. கற்புக்கு அருங்கலமே-கற்பு நெறிக்குச் சிறந்த ஆபரணம் போல்வாளே, காமரு பூங்கொம்பே-அழகிய பூங்கொம்பு போல்வாளே, யான் தெற்குத் திசைக்கு இறைமை சேர் தருமன்-நான் தென் திசைக் கதிபனாகிய இயம தருமராசனாவேன், நற்குணமும் நற்செய்கையும் ஒருங்கே நன்கு அமைந்த-நற்குணங்களும் நற்செய்கைகளும் ஒருசேர நன்றாய் அமையப் பெற்ற, நின் கொழுநன் தனக்கு உரிய நாள் உலந்ததால்-உனது நாயகனுக்கு அமைவுற்ற ஆயுள் முடிந்தகாரணத்தினால், (கொண்டு செல்கின்றேன்) எ-று,

தனக்கு; தன்-கு;

3. கற்பின் பெருமையின்-உனது கற்பு நெறியின் சிறப்பினால், உன் கண்புலனில் நேர்பட்டேன்-உனது கட்புலனுக்குத் தெரியுமாறு எதிரிற் தோன்றினேன், இக் காட்சி அற்பம் அல-இவ்வாறு என்னைக் காணும் காட்சி எவர்க்கும் இலகுவில் கிடைப்பதல்ல, அன்றியும் கேள்-அதுவும் அன்றி வேறொன்றும் கூறுவேன் கேட்பாயாக, மல் புயத்த-மல் யுத்தம் செய்யும் புயங்களையுடைய, நின் கொழுநன் தன் தூய்மை நேர்மை குறித்து-உனது நாயகனது பரிசுத்தத்தையும் நேர்மையையும் மதித்து, யான் பிடித்தேன்-யான் (நேரில்வந்து) பிடித்தேன், வன்கணரை-(வினை)த் தறுகணர்களாய் உள்ளவர்களை, தூதர் கொணர்வார்-எனது தூதர்களே கைப்பற்றுவார்கள், எ-று.

மல்-திண்மையுமாம்.

4. மான் படு கண் நங்காய்-மானை யொத்த மருண்ட பார்வையினையுடைய நங்கையே, என்றும்-எஞ்ஞான்றும், உலகில் பிறந்தார் படுவர்-உலகில் பிறந்தவர்கள் இறந்தே படுவார்கள், என்னும் உண்மை அறிந்தும்-என்ற உண்மையினை அறிந்திருந்தும், நீ என் கவலை படுவை-நீ என் துன்பப்படுகின்றாய், துயர் ஒழிந்து-இனித் துன்பப் படுதலை விடுத்து, உன் நல் இருப்பைச் சேர்தி என்றான்-உனது நல்ல இருப்பிடத்தை அடைவாயாக, என்று கூறியபொழுது, மங்கை மறுத்து இது கூறும்-சாவித்திரியும் அதனை மறுத்து மேல்வருமிதனைக் கூறுவாளாயினள், எ-று.

5. மனை மாண்பில் ஒப்பு இலா மாது-இல்லாட்குரிய சிறந்த நற்குண நற்செய்கைகளில் தனக்கொருவரும் நிகரில்லாத அச் சாவித்திரியானவள், அல் உரு கொண்டு-இருண்ட (கரிய) வடிவத்துடன், இங்கு வந்த அம்மான்-இவ்விடத்திற் கெழுந்தருளி வந்த பெரியவரே, நாதன் பிரிந்தக்கால்-எனது நாயகர் என்னைவிட்டுப் பிரிந்த வழி, என் தனக்கு நல் இருப்பு ஏது-எனக்கு நல்ல இருப்பிடம் எவ்வாறுளதாகும் (உளதாகாது ஆதலால்) நீ மெல்ல எனையும் உடன்கொண்டு போந்தருள என்றுள்-தேவரீர் என்னையும் என் நாயகனுடனழைத்துக்கொண்டு சென்றருள்வீராக என (சாவித்திரி) வேண்டினாள், எ-று.

6. காலம் அறிந்து-அவரவர்க் கமைந்த கால வரையறையை யுணர்ந்து, உயிரை கோள் இழைக்கும் காரணத்தால்-ஆன்மாக்களை எடுக்கும் காரணத்தினால், காலன் எனும் அரிய காரணப் பேர்-காலன் என்று வழங்கும் அரிய காரணப் பெயரை, சால படைத்துளன்-(நான்) சிறப்பாகப் பெற்றுள்ளேன், பைம்தொடி-மாற்றுயர்ந்தவளையலை யணிந்த நங்கையே, நீ, காலம் கடக்கும் முன்-நீ, உனது காலவெல்லையைக் கடத்தற்கு முன்பே, நின் பிடித்தக்கால்-உன்னைக் கைப்பற்றியவிடத்து, அஃது இன்றே போம்-(காலன் என்னும்) அக் காரணப் பெயர் இன்றேடே போய்விடும், எ-று.

கு-பு:—ஏ-தேற்றம்—கால்-வினையெச்ச விகுதி.

7. ஐய-ஐயா! காணில்-ஆராய்ந்து பார்க்குமிடத்து, கணவன் மனைவி இவர் உயிர் உடம்பு ஆம்-நாயகனும் நாயகியுமாகிய இவர்கள் (முறையே) உயிரும் உடம்பும் ஆவர், கணவன் இறந்தால்-நாயகன் இறந்துபட்டால், மனைவி கட்டைப் பிணம்-(அவன்) நாயகி இழிவுள்ள பிணமாவள், அதனுக்கு என்ன வரம் வேண்டும்-அப் பிணத்திற்கு என்னவரந்தான் வேண்டும், ஏழை பிரியா வகை-அறிவிற் குறைந்தவளாய யான் (என் நாயகரைப்) பிரியாதிருக்கும் வகையை, பன்னல் நலம் என்றுள் பரிந்து-எனக்குக் கூறுதல் நன்மை தருவதாகும் என்று வருந்திவேண்டினாள், எ-று.

கு-பு:—கட்டை-குறைவு-ஈண்டிழிவின் மேற்று.

8. தருமன்-இயம தருமராசனானவன், எய்ந்து-அவள் கூற்றிற்கிசைந்து, நாகு அனமே-இளமையாகிய அன்னம் போல்வாளே, நான்-யான், நாள் உலந்தான் நல் உயிரைக் கவர்ந்தேன்-ஆயுள் முடிவடையப் பெற்ற உன் நாயகனுடைய உயிரைக் கைப்பற்றினேன், மீள விடுக்க விதியின்று-அதனை மீள விடுதற்கு யாதொரு விதியுமில்லை, அதை நீத்து-அந்த ஒன்றனையும் விடுத்து, நீ, என்ன வரம் வேண்டினும்-நீ, வேறெந்த வரத்தைக் கேட்க விரும்பினும், கேள்-கேட்குதி, யான் தருவன்-யான் அவ் வரத்தைத் தருவேன், சத்தியமே என்ன இசைத்தான்-இது சத்தியமேயாகும் எனக் கூறினான், எ-று.

கு-பு:-கேள் என்பதனை என்ன இசைத்தான் என்பதன் முன் கூட்டிப் பொருளுரைப்பினு மமையும்.

9. கோறல் தருமம் எனக் கொண்டான்-கொல்லுதலையே தன் தருமமாகக் கொண்ட இயம தருமராசன், குணவதியின் சேறல்தனை ஒழிப்பான்-குணத்திற் சிறந்தவளாய அச் சாவித்திரியின் தொடருகையைத் தடுக்குமாறு, அடுத்து செப்புவான்-தொடர்ந்து கூறுபவன், கூறு வினை வேறல் அரிது-விதந்து கூறும் இருவினைப் பயனையும் வெல்லுதல் (எவர்க்கும்) அரிதாகும் (ஆகையால்) என் பின் சென்று துயர் ஆறல் அரிது-என் பின்னே வந்து நீ, துன்பத்தினைத் தணித்துக்கொள்ளுதல் அரிதாகும், என்றான்-என்று கூறினான். எ-று.

கு-பு:-கொல் + தல், செல் + தல், வெல் + தல் என்பன முதல் நீண்டு கோறல், சேறல், வேறலென நின்றன. ஒழிப்பான் என்பது வானீற்று வினையெச்சம்.

10. கணவன் பிரிந்த பின்னர்-நாயகன் இறந்தபின், கைம்பெண்ணாய்-விதவையாய், ஈண்டு ஒரு கணமும் தரித்து நிற்றல் கற்போ-இவ்வுலகத்தில் ஒரு கணப்பொழுதேனும் உயிர் தரித்திருத்தல் கற்பிற்கியைந்ததாகுமோ? குணநிதி-குணநிதியே, நீ பின்னும் மறாது-நீர் பின்னரும் மறுத்தலையாது, பேணும் அவர் உயிரோடு-(என்றால்) பெருவிருப்பு வைக்கப்பெற்ற அவர் ஆன்மாவுடன், என்னையும் கொண்டேக வியைந்தருள்வாய் என்றாள்-என்னையும் உடன் கொண்டு செல்வதற்கு உடன்பட்டருளுதிர் என்றாள் (சாவித்திரி) எ-று.

11. மெல் இயலே-மெல்லிய இயல்பினை உடைய நங்கையே, கரு இடத்து உற்ற அன்றே-கருப்பத்திற் புகுந்த அந்நாளிலேயே, மருவு கணக்கிட்டு வைத்தது-தகுதி அமைந்த கணக்கிட்டு வைத்ததாய, காலம் முதல் யாவும்-ஆயுள் முதலியன எவற்றையும், மீறி நடத்தல் ஒருவரால் இயலாது-, தேர்ந்து-(இவ் வுண்மையை) உணர்ந்து, உனது ஊர் சேறி என்றான்-உனது ஊருக்குத் திரும்பிச் செல்வாயாக என்று கூறினான் (தருமன்) எ-று.

12. பேறு இளமை இன்பம் பிணி மூப்பு சாக்காடு என்று ஆறும்-பெறுபேறும், இளமையும், இன்பமும், பிணியும், மூப்பும், சாக்காடுமாகிய இவ் வாறும், கருவில் அமைந்தபடி-கருவில் அமைந்த வண்ணமே, நாறும் என்றாய்-ஒருவர்க்குளதாகும் என்று கூறினாய், கூறு விதிக்கு விலக்கு உண்டு அன்றோ-விதந்து பேசப்படுவதாகிய விதிக்கு விலக்கும் ஒன்றுளதன்றோ, கூற்றுவ-யம தருமராசனே, யான் கூறுவதைப் பின்னும் குறி-நான் சொல்லுவதைத் திரும்பவும் கவனித்துக் கேட்பீராக, எ-று.

13. வைவச்சுதனே-வைவச்சுதன் என்னும் நாமதேயத்தையுடையவனே-, அந்தகனே-இயம தர்ம ராசனே! தாரணியோர்-இப்பூமியிலுள்ளவர்கள், தந்தை நலம் அனைத்தும்-பிதாவின் குணவிசேடங்கள் அனைத்தும், மைந்தனுக்கு வந்துறும் என்பார்-அம் மைந்தனுக்கும் அமைவினைப் பொருந்தும் என்று சொல்லுவார்கள், (ஆகையினால்) என்னையும்-என்னையும், என் கணவன் தன்னொடு-எனது நாயகனோடுடன்

கொண்டு, உன் ஊர் போக்கு-நினது நகரத்திற்குச் செல்லுகை, உன்ஞல் ஏன் ஆகாது-உம்மால் ஏன் முடியாது, உரை-கூறியருளுதிர், எ-று.

14. இத வசனத்து ஈடு உயர்வு இல்லாள்-இனிமைபயக்கும் வார்த்தைகளைப் பேசுவதிற் றன்னை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சாவித்திரியானவள், மேலவனே-மேலோரே! யாருங் காணு உருவை-எவரேனும் காண்டற்கரிய உமத் திருவுருவத்தை, யான் கண்டிடப் பணித்தாய்-யான் காணுமாறு அருள் செய்தீர், (அதுபோல) யாரும் காணு உன் எழில் ஊர்-எவராவது காண்டற்கரிய உமது திருவுலகத்தை, யான் சேரும் விதம் அருளல் நிற்கு அரிதோ?-யான் வந்தடையுமாறு கிருபை பாலித்தல் உமக் கரிதாகுமோ, (கூறுதிர்) எ-று.

15. தன்னை விடமாட்டாளை-தன்னைத் தவறி விடமாட்டாளாய சாவித்திரியை மேன் மேல் மதித்து-மேன் மேலும் நன்கு மதித்து, நல் நுதலே-அழகிய நெற்றியை உடைய நங்கையே, மன்னும் எனது இயல் பின் மாறுபடக் கூறுதலின் பயன் என்ன-நிலை பேறுடைய எனது தகுதிக்கு மாறுபாடு உண்டாகும் வகையில் இவற்றைக் கூறுவதனல் ஆய பிரயோசனம் என்ன, இங்கிதை விட்டு-இது ஒன்றையும் விட்டு, என்ன வரம் கேட்டாலும்-வேறு எந்த வரத்தைக் கேட்டாலும் அதை யான் தர வல்லேன், கேள் என்ருன்-நீ விரும்பிய வரத்தைக் கேட்குதி யென்ருன் (இயம தர்ம ராசன்) எ-று.

16. தென் நாடு மன்ன-தென்றிசைக் கிறையாய இயம தருமராசனே, ஐயா-ஐயனே! ஏழுறுவேன்-மயக்கமடைந்தவளாகிய யான், அன்ஞனை உன்ஞெடு விட்டு-எனது நாயகரை உம்முடன் விட்டு, தனித்து இருந்து-தனிமையாக இருந்து, என் நாளை என் கழிப்பேன்-எனது வாழ் நாளை எவ்வாறு போக்குவேன் (போக்க மாட்டேன் ஆகையால்) என்னையும் கொடுபோய்-என்னையும் என் நாயகரோடுடன் கொண்டு சென்று, மன்னு தருமன் என்னும் நல் நாமம்-நிலைபேறுடைய தருமனெனக் கூறும் நல்ல பெயரை, நேர் நிறுத்தல் நன்று-செவ்வனே நிலை பெறச் செய்தல் நன்ருகும், எ-று.

> கு-பு:-தென்ஞட்டு மன்ன என்பதற்கு உமது தென்திசைக்கண்ணுள்ள நகரத்துப் பொருந்த எனப் பொருள் கூறினுமமையும்.

17. தென் திசைக் கோன்-தென் திசைக் கதிபனுகிய தரும இராசன், கிளர்ந்து-மனக் கிளர்ச்சியுற்று, ஏமம் உற நோக்கி-களிப்புறப் பார்த்து, குன்ருத மங்கிலியக் கோமளமே-தீர்க்க மாங்கல்ய வதியாய இளமைச் செவ்வியினை உடையாளே, பொன்ருத கீர்த்தியாய்-(என்றும்) குன்ருத கீர்த்தியை உடையவளே, பின்னும் ஓர் செய்ய வரம் கேள் என்ருன்-இன்னு மோர் சிறந்த வரம் கேள் (தருவல்) எனக் கூறினன் எ-று.

18. தூயோன்-பரிசுத்தராய இவர், ஓர்ந்து-நன்கு ஆராய்ந்து, கண் வேண்டினம்-(மாதுலரின் பார்வையற்ற) கண்பார்வை யுடைத்தாக

வேண்டும் எனக் கேட்டேன், அளித்தான்-(அவ் வரத்தை) தந்தார், காலாந் தரத்து இழந்த மண் வேண்ட-நெடுங் காலத்துக்கு முன் மாமனார் இழந்த இராச்சியத்தை வேண்ட, வழங்கினான்-தந்தார், எண் வேண்டும் சோதரரை நல்கினான்-தொகையின் மிக்க சகோதரரையும் தந்தார், உயிரை அன்றி-எனது நாயகரின் உயிர் ஒன்றையும் அல்லாமல், ஓத-(யான்) கேட்க, எதை இல்லை என்றான்-வேறு எதைத்தான் இல்லை என்று கூறினார், எ-று.

19. மானை மருட்டுங் கண் மாது-மானையும் மருட்டும் பார்வையினையுடைய சாவித்திரியானவள், மதித்து-(தன் நாயகனைப் பெற) யோசித்து, என் பொருட்டால் இன்று செய்வது ஒன்று உண்டு-எனக்காக நீவிர் இப்போது தர வேண்டிய வரமொன்றுளது, என்தன் பொன் குலம் விளங்க-எனது சிறந்த வமிசம் விளக்கமடையுமாறு, சந்த ஐம்பதிரட்டி மகவு-அழகிய நூறு மக்களை, எளியேன் பெற தா என்று இரந்தாள்-எளியவளாகிய யான் அடையுமாறு வரந் தருக என யாசித்தாள், எ-று.

20. பெயர்ந்து-(யமன்) மீளவும், தன்னை மறந்தவனாய், பெண்-அரியாய்-பெண்கள் நாயகமே, (அவ் வரத்தையும்) தந்தோம் தந்தோம், அயரேல்-அயர்ச்சி உறாதே, இன்னல் ஒழிந்து-துன்புறலை விட்டு, உன் ஊர் இனிது ஏகி-உனது ஊர்க்குச் சந்தோஷமாய்ச் சென்று, மன்னி இருந்து-நிலை பெற்றிருந்து, எண் அரிய மக்கள் பேறு எய்தி-அளவில்லாத பிள்ளைகளைப் பெற்று, வாழ்வாயாக என்றான், எ-று.

21. பின்னும்-பின்னரும், தனது பிறங்கு முகம் நோக்கி தனி நிற்பாள் தனை-தனது விளக்கமுறும் முகத்தைப் பார்த்த வண்ணமே தனித்து நிற்பவளாய அச் சாவித்திரியை, தருமன்-, நோக்கி-பார்த்து, பொன் அனையாய்-இலக்குமியை ஒத்தவளே, இன்னும் நீ முகம் புலர்ந்து நிற்பது எவன்-இன்னமும் நீ முகவாட்டமுற்று நிற்பதற்குக் காரணம் என்னை, உன் இருப்பை நோக்கி எழுக என்றான்-உனது இருப்பிடத்தை நோக்கிச் செல்வாயாக என்றான், எ-று.

22. நல் நய மெல் இன்மொழியாய்-நல்ல சாதுரியமும் மென்மையும் இனிமையும் அமைந்த சொற்களை வசனிக்கும் நங்கையே, சொன்ன உரையில் ஒன்றும் சோராமல் பலிக்கும்-யான் தந்த வரங்களில் ஒன்றேனும் தவறாது பலிதமாகும், இனி உன் தொல் நகரம் நன்கு சென்று-இனி உனது பழைய நகரத்தை மகிழ்வுடன் சென்று சேர்ந்து, அரிய செல்வ மகப் பேறு எய்தி-அருமையாகிய செல்வமாகும் மக்கட்பேற்றை அடைந்து, இனிது சீர் உறுக என்றான்-இன்பத்தோடும் சிறந்து வாழ்வாயாக என்று கூறினான், எ-று.

23. மா பெரியாய்-மிகப் பெரியவரே, (நீவிர்) என் உயிருக்கு இன் உயிர் ஆம்-எனது ஆன்மாவிற்கு இனிய ஆன்மாவாயுள்ள, என் கணவன் தன் உயிரை-எனது நாயகரது ஆன்மாவை, வன்பொடு கொண்டு ஏகுவையேல்-வலிமையுடன் கொண்டு செல்வையாயின், தொல்

நகரம் சென்று-நான் பழைய நகரத்திற்குப் போய், சுதரை பெறுவது எங்ஙன் என்று உரைத்தாள்-யான் மக்களைப் பெறுவது எவ்வாறுகும் எனக் கூறினள் (கூறியபொழுது) தென்புலத்தார் கோமான் திகைத்து-தென்திசைக் கரசனுகிய இயமனும் திகைப்புற்று, எ-று

24. மயிலே அருந்ததி-மயிலை ஒத்த சாயலையும், அருந்ததியை ஒத்த கற்பினையும் உடையவளே, மகப் பேறு தந்தோம்-மக்கட் பேற்றை தந்தோம், கணவன் உயிர் தாரோம்-நாயகனது உயிரைத் தாமாட்டோம், அந்தோ-ஐயோ, நந்தாவரனை நிறைவேற்ற எனில்-கேடற்ற உனது நாயகனைத் தந்து என் வரத்தை நிறைவேற்றவோம் என்று எண்ணினல், கடமை மாறும்-எனது கடமை அழியுமே, (ஆகையால்) திகைத்து திறம் அறியோம் என்முன்-செயற்பாலது இன்னதென்று அறியேனே எனத் திகைத்துக் கூறினன், எ-று.

25. ஆர் உயிரின் தாயே-அரிய ஆன்மாக்களுக்குத் தாயாய் உள்ளவரே, அறத்தின் பிறந்த அகமே-தருமத்திற்குப் பிறந்த இடமாய் உள்ளவரோ, பேர் அருளின் கண்ணே-மிக்க கிருபைக்குக் கண்ணுய் உள்ளவரே! பெருமானே-, நேர்-என் எதிரில், குன்றுத மங்கிலியக் கோமளமே என்ற உரை-தீர்க்க மங்கல்யவதியாய இளமைச் செவ்விபடைத்தவளே எனக் கூறிய கூற்றுனது, நன்றாக முற்ற வகைநாடு-நன்கிதாக நிறைவேறும் வண்ணம் அதற் கேற்ற முறையைக் கைப்பிடிப்பீராக, எ-று.

26. என்ற உரை கேட்டான்-என்று (சாவித்திரி கூறிய) வார்த்தைகளைக் கேட்ட இயமன், இவள் கூறும் இக் கூற்று-இவள் சொல்லும் இச் சொல், நன்று நமக்கு ஓர் கூற்று ஆய் நண்ணியதே-நன்கிதாக எமக்கும் ஓர் கூற்றுகப் பொருந்திற்றே, என்றும் அடங்காத நா உடையார்க்கு-எஞ்ஞான்றும் அடக்கம் அற்ற நாவை உடையவர்களுக்கு, அன்னர் வாய்ச் சொல்லே-அவர் வாயிற் தோன்றும் சொற்களே, மடங்கா பகை என்முன்-தணியாத பகையாய் முடியும் என்றுகூறினன், எ-று.

கூற்று-யமன், மற்று, அசை நிலை.

27. சொல் என்பது சிறிது-(நான் சொன்ன) சொல் மிகவும் எளியது, (ஆயின்) சொற் பெருமையோ பெரிது-அச் சொல்லால் குறிக்கும் விஷயமோ மிகவும் பெரியது. (சொல்லுவது எளிது சொன்னபடி செய்வது அரிது என்றபடி) தொல்லுலகில்-பழமையான உலகிடத்தே, இதற்கு-, ஈடு-இணையாக, சொல்ல ஒன்றும் இல்லை, வில்லும் சிலகால் வெலாது ஒழியும்-(ஒன்றைக் குறித்து விட்ட அம்பும், குறித்த பொருளைக் கிட்டாமல் தவறிச் செல்லும், (ஆனல்) மேலோர்கள் சொல்லும் சொல் தோற்றது உண்டோ-பெரியோர் சொன்ன சொல் தவறியது எங்கேனும் உண்டோ? சொல்-சொல்வாயாக, என்று கூறினன் யமதருமன், எ-று.

28. தீது அணையா-பாவ மாசணுகாத, மங்கிலிய செர்திருவே-மங்கிலியத்தையுடைய இலக்குமி போன்றவளே, ஆதலின்-(மேலோர்

சொல் தவறாது ) ஆதலால், நின்-உனது, காதலன் தன்-கணவனுடைய, ஆருயிரை விடுத்தேன் யான்-, ( உனக்கு ) ஓது சுதர் நூறு உறுவர்-சொல்லப்படுகின்ற பிள்ளைகள் நூறு பேர் ஆகுவர், சோதரரும் நூறு உறுவர்-உனக்கும் உடன்பிறப்பாளர் நூறு பேராகுவர், கண்ணும் மண்ணும் பெற்று-தா மிழந்த கண்ணையும் இராச்சியத்தையும் அடைந்து, மாதுலரும் பேறு உறுவர்-உனது மாமாவும் பெரும் பேறு எய்துவர், எ-று.

29. என்று-, அணங்குக்கு-சாவித்திரிக்கு, ஆசி பல ஈந்து-பல ஆசீர்வாதங்கள் செய்து ( வாழ்த்தி ) தருமன் மறைந்தான்-யமதரும ராசன் மறைந்தருளினான், உவந்தனளாய்-சந்தோஷம் மிகக் கொண்டவளாய், ஒன்றுவகை யேத்தி-தனது நாயகனது ஆத்துமா, அவர் சடலத்துள் வந்து சேரும் வண்ணம், தரும ராசனை வணங்கி, துன்றிய தன் நாதனை-இறந்த தனது நாயகனை, உய்த்திட்ட இடம் நன்கு அணுகி-தான் விட்டுவிட்டுப்போன இடத்தைக் கிட்டி, தன் மடியின் மீது அவனை வைத்து இருந்தாள்-( நாயகனைத் தூக்கி ) தன் மடியின் மேல் வைத்திருந்தாள், மின்-மின்னை ஒத்த சாவித்திரி என்றவாறு.

———:o:———

## 4 பெரிய புராணம்

### அப்பூதியடிகள் சரித்திரம்

1. நாவுக்கு மன்னர்-திருநாவுக்கரசு நாயனார், திருநல்லூரில் நம்பர் பால்-திருநல்லூரின் கண்ணே கோவில்கொண்டருளிய சிவபிரானிடத்தில், மேவுற்ற திருப்பணிகள்-அன்பினோடு செய்யக் கடவனவாகிய திருப்பணிகளை, மேவுற நாளும் செய்து-பொருந்துமாறு நாள்தொறுஞ் செய்து, தமிழ் பா உற்ற பல மாலை பாடி-தமிழ்ப் பாவால் இயன்ற பல பதிகங்களைப் பாடி, பணிந்து ஏத்தி-தாழ்ந்து துதி செய்து, தே உற்ற திருத்தொண்டு செய்து ஒழுகிச் செல்லும் நாள்-தெய்வத்தன்மை பொருந்திய சிறந்த தொண்டுகளை இடையறாது செய்துவரும் நாள்களில், எ-று.

மே-அன்பு. செய் தொழுகல்-இடையறாது செய்தல். பதிகம்-பத்துச் செய்யுள் கொண்டது.

2. கண் நுதலோன்-கண்ணையுடைய நெற்றியினராகிய சிவபெருமான், அமர்ந்து அருளும்-கோவில் கொண்டு வீற்றிருந்தருளுகின்ற, கருகாவூர் முதலாக-, திருவாரூர் திருப்பாலைத்துறை பிறவும் சென்று இறைஞ்சி-திருவாரூரையும் திருப்பாலைத்துறையையும் ஏனைய தலங்களையும் சென்று வணங்கி, பெருகு ஆர்வத் திருத்தொண்டு செய்து-தணியாத 'பேரன்பினோடு மேலான தொண்டுகளை இயற்றி, பெருந் திருநல்லூர்-பெருமை மிக்க திருநல்லூரை விட்டு, ஒருகாலும் பிரியாது-ஒரு பொழுதும் பிரியாதவராகி, உள் உருகிப் பணிகின்றார்-உள்ளங்கசிந்து வணங்குவாரானார், எ-று.

3. ஆளுடைய நாயகன் தன்-தம்மை ஆளுதலுடைய தலைவராகிய சிவபிரானது, அருள் பெற்று-திருவருளைப் பெற்று, அங்கு அகன்றுபோய்-அவ்விடத்தினின்றும் நீங்கிச் சென்று, வாளை பாய் புனல் பழன-வாளை மீன்கள் துள்ளிப் பாய்கின்ற நீரையுடைய வயல்கள் நிரம்பிய, திருப் பழன மருங்கு அணைந்து-திருப்பழனம் எனப்படுந் திருத்தலத்தின் எல்லையை யணுகி, காள விடம் உண்டு இருண்ட கண்டர்-கரிய நஞ்சினை உண்டு கறுத்த மிடற்றினரும், பணிக் கலன் பூண்டு நீள் இரவில் ஆடுவார்-பாம்பாகிய ஆபரணத்தை யணிந்து நள்ளிருளில் நடனஞ் செய்பவருமாகிய சிவபெருமானுடைய; கழல்-திருவடிகளை, நேர் வணங்கப் பெற்றார்-எதிரே வந்து வணங்கப் பெற்றார், எ.று-

4. அப்பதியைச் சூழ்ந்த திருப்பதியில்-அந்தத் திருப்பழனம் என்னும் பதியைச் சூழ்ந்திருக்கின்ற பல சிறந்த தலங்களினுமுள்ள, அரனார் மகிழும் ஒப்பரிய தானங்கள்-சிவபிரான் மகிழ்ந்து இருந்தருளும் ஒப்பற்ற கோவில்களை, உள்ளுருகிப் பணிந்து அணைவார்-உள்ளங் கசிந்து வணங்கிச் செல்கின்றவராகிய, மெய்ப் பொருள் தேர் நாவினுக்கு வேந்தர்-உண்மைப் பொருளை யறிந்த திருநாவுக்கரசு நாயனார், செப்பு அரும் சீர் அப்பூதி அடிகள் ஊர்-(அளவிட்டுச்) சொல்லுதற்கு அருமையான சிறப்பையுடைய அப்பூதியடிகளார் வாழ்கின்ற ஊராகிய, திங்களூர் மேவினார்-திங்களூரைச் சேர்ந்தார், எ-று.

5. அந்தணரில் மேம்பட்ட அப்பூதி அடிகளார்-அழகிய தண்ணளி நிரம்பிய பிராமணர்களுள் மேம்பாடுடையவராகிய அப்பூதி அடிகள் நாயனார், தம் தனயருடன்-தமது புதல்வர்களோடு, சாலை, கூவல், குளம், தரு, தண்ணீர்ப் பந்தல் பல-அன்னசத்திரம் முதலிய அறநிலையங்கள், கிணறு, குளம், நிழல் தரும் மரங்கள், தண்ணீர்ப் பந்தல் முதலாகிய பல பொருள்களையும், ஆண்ட அரசு எனும் பெயரால்-திருநாவுக்கரசு என்னுந் திருப் பெயரால், பண்ணினமை-அமைத்துக்கொண்ட தன்மையை, வந்து அணைந்த வாகீசர்-அங்கே வந்தடைந்த திருநாவுக்கரசு சுவாமிகள், கேட்டு-ஆங்கிருந்தார் சொல்லக் கேட்டு, அவர் மனை நண்ண-அவ் வப்பூதியடிகளாரின் வீட்டுக்கெழுந்தருள, எ-று.

> "சாதி குலம் பிறப் பென்னுஞ் சுழிப்பட்டு" த் தடுமாறுதலாதலின், "அந்தணிரின் மேம்பட்ட அப்பூதியடிகளார்" எனப் பட்டார்.

6. அவரும் மனம் மகிழ்ந்து-அப்பூதியடிகளும் உள்ளம் பூரித்து, மனைவியார், மைந்தர், பெரும் சுற்றமுடன்-இல்லாள், புதல்வர், மிக்க உறவினரென்பாரோடு, களிகூரத் தொழுது எழுந்து-இன்பம் பொங்குமாறு திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து, சூழ்ந்து-வலமாக வந்து, மொழிக் கொற்றவரை-திருநாவுக்கரசு நாயனாரை, அமுது செயக் குறை கொள்வார்-திருவமுது செய்யுமாறு குறையிரந்து வேண்டினராக, இறை கொள்ளப் பெற்ற-சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட, பெரும் தவத் தொண்டர்-பெரிய தவத்தினையுடையராகிய அத் திரு

...வுக்கரசு சுவாமிகளது. திருவுள்ளம்-உடன்பாட்டை (சம்மதத்தை) பெறப் பெற்றார்-பெறலாயினார், எ-று.

மற்று-அசை.

7. முன் காண் தகைமை இன்றியும்-முன்னே திருநாவுக்கரசுநாயனாரைக் கண்ணுற் பார்க்கும் பெரும் பேறு வாய்க்கப்பெறாதிருந்தும், கலந்த பெரும் கேண்மையினார்-(அவருடைய மேம்பாட்டைக் கேட்டு) உள்ளம் ஒன்றுபட்டதனாலுண்டாகிய பெரிய நண்பினையுடையாராம் அப்பூதியடிகள், பூண்ட பெரும் காதலுடன்-பொருந்திய பேரார்வத்தோடு, போனகமும் கறியமுதும் வேண்டுவன-சோறும் கறியமுதுமாக வேண்டியவைகளை, வெவ்வேறு விதங்கள் பெற-வேறு வேறு வகைகளாமாறு, ஆண்ட அரசு விருப்பினால் அமுதுசெய-தம்மை அடிமைக்கொண்ட திருநாவுக்கரசு நாயனார் விருப்பத்தோடு உண்டருளுமாறு, திரு அமுதாம்படி சமைத்து-சுவையினால் மேலான அமிழ்தமாகுமாறு சமைத்து, எ-று.

தகைமை-பெருமை, பெரும் பேறு என்னும் பொருட்டு. கலத்தல்-உள்ளம் ஒன்றுபடுதல், "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாங் கிழமைதரும்" என்னுங் குறட்பாவின் கருத்து, ஈண்டு ஒப்பிநோக்கற்பாலது.

8. அன்பு தரு ஞானத் திரு மறையோர்-அன்பு பெருகப்பெற்றுச் சிவஞானமுந் தலைழக்கப் பெற்ற வேதியராகிய அப்பூதியடிகள், திருநாவுக்கரசு அமுது செய்தருள-திருநாவுக்கரசு சுவாமிகள் உணவருந்தியருளும்படி, அவர் தம் பெரு நாமம்சாற்றிய அப்பிள்ளைதனை அழைத்து-அவரது ஒப்பற்ற பெயரிடப்பட்ட மூத்த திருநாவுக்கரசாகிய அம் மகனை அழைத்து, தண்டலையில்-தோட்டத்தில், வண் கதலிக் குருநாளக் குருத்து அரிந்து-வளப்பம் மிக்க வாழையினது நிறம் பொருந்தியதும் உட்டுளையுடையதுமான குருத்தினை யரிந்து, கொண்டு வரத் தனிவிட்டார்-கொண்டு வருமாறு தனியே போக்கினார், எ-று.

குரு-நிறம், நாளம்-உட்டுளையேயன்றித் தண்டுமாம். பசிய தண்டுடையதாய், முதிர்ந்த வெள்ளிய குருத்தென்பார், குரு நாளக் குருத்தென்றார். உட்டுளையில்லாக் குருத்து முற்றாமையால் இதழோடிதழ் ஒன்றி ஒடியுந் தன்மையுடைத்தென்க. விரிந்த இலையாயின் குருகெச்ச முதலியவற்றால் அழுக்கடைந்திருக்கவுங் கூடுமென்க.

9. ஆங்கு அவனும் அம் மருங்கு தாழாது விரைந்து எய்தி-அந்த மூத்த திருநாவுக்கரசு என்னும் புதல்வரும் அவ்விடத்தில் காலந்தாழ்த்தாமல் விரைவாகத்தோட்டத்தை யடைந்து, பூ கதலிக் குருத்து அரியப் புகும் அளவில்-பொலிவையுடைய வாழையின் குருத்தை யரியத் தொடங்கிய போதில், ஒரு நாகம் தீங்கு இழைக்க-ஒரு நச்சுப்பாம்பானது அவரைத் தீண்ட, அது பேணான்-அதனைப் பொருட்படுத்தாதவராகி, திரு அமுது செய்தருள-திருநாவுக்கரசு சுவாமிகள் உணவருந்தியருளுதற்காக, ஓங்கு கதலிக் குருத்துக் கொண்டு-நீண்ட வாழைக்குருத்

லை அரிந் தெடுத்துக்கொண்டு, ஒல்லை வந்து அணைந்தான்-விரைவில் வந்து சேர்ந்தார், எ-று.

அருள் பழுத்த உள்ளத்தினராகிய சேக்கிழார் பெருமான், பிறவுயிர்கள் இன்ன லடைவதைக் கேட்கச் சிறிதும் சகியாராதலின், நாகந் தீண்டிற்றென்று கூறாமல் "நாகந் தீங்கிழைக்க" என்றனர். இவ்வாறே எல்லா வரலாற்றினும் கொடுஞ் செயல்களை வேறோராற்றாற் கூறி நிற்பர். மெய்ப் பொருள் நாயனாரை முத்தி நாதன் குற்றியதை "நினைந்த அப்பரிசே செய்தான்" என்றும், ஏனாதிநாத நாயனாரை அதிசூரனென்பான் வெட்டியதை "முன்னின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்" என்றும் கூறுமாற்றை எடுத்துக் காட்டாக (உதாரணமாக)க் கண்டு கொள்க.

10. தீய விடம் தலைக் கொள்ளத் தெருமந்து-கொடிய பாம்பின் நஞ்சானது தலைக்கேறுதலால் மயங்கிச் சுழன்று, செழும் குருத்தைத் தாயார் கரத்தினில் நீட்டி-செழுமையான வாழைக் குருத்தைத் தன் தாயார் கையிற் கொடுத்து, தளர்ந்து-சோர்வடைந்து, தனைத் தழல் நாகம் மேயபடி உரை செய்யான்-தன்னைக் கொடிய நஞ்சையுடைய பாம்பு தீண்டிய விதத்தைச் சொல்லாதவராகி, விழக் கண்டு-நிலத்தில் விழ அதனைப் பெற்றோர் பார்த்து, கெட்டு ஒழிந்தோம்-ஆ! கெட்டுப்போயினோம்!!, தூயவர் இங்கு அமுது செய்யத் தொடங்கார் என்று-தூய்மையான உள்ளமுடையாராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் (இதனையறிந்தால்) இங்குத் திருவமுது கொள்ளமாட்டார் என்று (மனஞ் சோர்ந்து), அது மறைத்தார்-அப் பிணத்தை மறைத்துவைத்தார்கள், எ-று.

தழல்-தீ,-ஈண்டு நஞ்சை யுணர்த்திற்று. முற்றத் துறந்த பெரியார் தொடக்கினைக் கொள்ளா ரென்றல் அவர் அறிந்ததாகலின், பிணங் கிடக்கும் வீட்டில் உண்ணாரென்று கருதி வஞ்சித்தாரல்லர், தன்பொருட்டுக் குருத் தரியச் சென்றான் இறந்துபட்டனனே யென்னும் வருத்தத்தா லுண்ணாரென்று எண்ணினா ரென்க.

11. தம் புதல்வன் சவம் மறைத்து-தங்கள் மகனின் பிணத்தை மறைத்து வைத்து, தடுமாற்றம் இலர் ஆகி-கலக்கம் இல்லாதவர் ஆகி, எம் பெருமான்-எம் பெருமானே, வந்து அமுது செய வேண்டுமென இறைஞ்ச-எழுந்தருளித் திருவமுது செய்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்ள, உம்பர் பிரான் திருத்தொண்டர்-தேவர்கட்குத் தலைவராகிய சிவபெருமானுடைய திருவடியாராகிய திருநாவுக்கரசு சுவாமிகள், உள்ளத்துத் தடுமாற்றம்-அவர்களுடைய மனத்துளிருக்கும் வருத்தத்தை, நம்பர் திரு அருளாலே அறிந்து அருளி-சிவபிரான் திருவருளாலே அறியப்பெற்று, நவை தீர்ப்பார்-அவர்களுக்குற்ற குறையை நீக்கக் கருதியவராய், எ-று.

மகன் இறந்ததனாலுண்டாகிய துயரமானது உள்ளத்தைமிகவாட்டிற்றாயினும், அதனைப் புறத்தே காட்டிக்கொள்ளலாகாதெனத் தம்

மைத் திருத்திக்கொண்டார் என்பது தோன்ற " ஆகி " என்றார். நவை–துயரமுமாம்.

12. அன்று–அப்பொழுது, அவர்கள் மறைத்ததனுக்கு–அப்பூதியடிகளாரும் மனைவியாரும் தம் புதல்வர் இறந்ததை வெளிப்படுத்தாமல் மறைத்ததற்காக, அளவிறந்த கருணையராய்–அளவு படாத பேரருளுடையவராய், நறும் கொன்றை சடையார் தங் கோயிலின்முன் கொணர்வித்து–நன் மணம் வீசுகின்ற கொன்றைப் பூமாலையைச் சூடிய சடையை யுடையவராகிய சிவபிரானது திருக் கோயிலின் முன்னர் அப்பிணத்தைக் கொண்டுவரச் செய்து, பதிகம் ஒன்று கொலாம் என எடுத்து–திருப் பதிகமாகிய பத்துப் பாடல்களை " ஒன்று கொலாம் " எனத் தொடங்கி, உடையான் சீர் பாட–ஆன்மாக்களை யடிமையாக வுடைய சிவபெருமானின் மிக்க புகழினைப் பாடியருள, பின்றை–பின்பு, பிள்ளை விடம் போய் நீங்கி உணர்ந்து எழுந்திருந்தான்–அப் புதல்வராகிய மூத்த திருநாவுக்கரசு என்பவர் தலைக் கேறிய விஷமானது நீங்கப் பெற்று அறிவு தெளியப் பெற்று எழுந்திருந்தார், எ–று.

அன்று–அந்நாள், ஈண்டு அப்பொழு தென்னும் பொருட்டு.

13. அரும் தனையன் உயிர் பெற்ற அது கண்டும்–அருமையான புதல்வர் திரும்பவும் உயிர் பெற்ற அந் நற் செயலைக் கண்டும், அமுது செயாது இருந்ததற்குத் தளர்வு எய்தி–(திருநாவுக்கரசு நாயனார்)உணவுகொள்ளாமலிருந்ததற்காக மனச் சோர்வுகொண்டு, இடர் உழந்தார் துயர் நீங்க–வருந்தியவர்களாகிய அப்பூதியடிகளாரும் மனைவியாரும் கொண்ட துயரமானது நீங்குமாறு, வாகீசத் திருமுனிவர்–திருநாவுக்கரசு நாயனாராகிய சிறந்த தவத்தினர், வருந்தும் அவர் மனை புகுந்து–வருத்தங்கொண்டவர்களாகிய அவர்களின் வீட்டை யடைந்து, விருந்து அமுது செய்தருளி–அவர்க ளிட்ட விருந்துணவை யுண்டு, விருப்பினுடன் மேவும் நாள்–விருப்பத்தோடு அங்கு தங்கியிருக்கும் நாளில், எ–று.

விருந்து–புதுமை, ஈண்டுப் புதியவர்க்கிடும் உணவை யுணர்த்தி நின்றது, ஆகுபெயர். முனிவர்–உலக போகங்களெல்லாவற்றையும் வெறுத்தவர். முனிவு–வெறுப்பு. மைந்தன் உயிர் பெற்றதனுல் மகிழ்ச்சியடைய வேண்டியிருக்க, அவ்வாறின்றி வருந்தினர், பெரியா ருணவு கொள்ளாமை காரணமாக என்க.

14. திங்களூர் தனில் நின்றும் திரு மறையோர் பின் செல்ல–திருநாவுக்கரசு சுவாமிகள், திங்களூரிலிருந்து சிறந்த வேதியர்களாகிய அப்பூதியடிகள் முதலியோர் தம்மைப் பின்தொடர்ந்து வர, பைங்கண் விடைத் தனிப்பாகர் திருப்பழனப் பதி புகுந்து–பசுமையான கண்களையுடைய எருதின்மீ தூர்பவராகிய ஒப்பற்றவராகிய சிவபிரான் கோவில்கொண்டருளிய திருப்பழனம் என்னும் பதியை யடைந்து, தங்கு பெரும் காதலொடு–நிலைபேருன பேரார்வத்தோடு, தம் பெருமான் கழல் சார்ந்து–தம்மை அடிமைக்கொண்டருளிய தலைவராம் சிவபிரா

னின் திருவடியை யடைந்து, பொங்கிய அன்பொடு வணங்கி-மிகுந் தெழுகின்ற அன்பினோடு தொழுது, முன்னின்று போற்றிசைப்பார்-திருச் சந்நிதியின் முன்னின்று துதித் தேத்துவாராயினர், எ-று.

முன்னிற்றல்-எதிரே நிற்றல். தனிமை-இணையின்மை, கழல் ஆகு பெயர்.

15. மாலை புடை மதிக் கண்ணி-மாலைக்காலத்தே வீங்கித் தோன்றும் பிறையாகிய தலையிற் சூட்டும் மாலையை யணிந்த, புரிசடையார்-முறுக்குண்ட சடையை யுடையாராகிய சிவபிரானது, பொன் கழல் கீழ்-அழகிய அடிகளின் கீழ், அடைமாலைச் சீலம் உடை அப்பூதி அடிகள் தமை-அடையுந் தன்மை கைவரப்பெற்ற ஒழுக்கமுடையவராகிய அப்பூதியடிகளாரை, நடை மாணச் சிறப்பித்து-அவரது ஒழுக்கத்தை மாட்சிமைப்படச் சிறப்பித்துக் காட்டி, நன்மை புரி தீம் தமிழின் தொடை மாலை-நன்மையைத் தரும் இனிய தமிழினால் தொடுக்கப்பட்டதொரு மாலையாகிய, சொன் மாலை திருப்பதிகம் பாடினார்-"சொன்மாலை" என்னுந் தொடக்கத்தையுடைய திருப் பதிகத்தைப் பாடுவாராயினார், எ-று.

புடை-வினைத்தொகை. புடைத்த மதி, மாலைக் கண் மதி என்க. புடைத்தல்-பக்கங்கள் வீங்கல். கண்ணி-தலையிற் சூட்டப்படும் மாலை, பொன்-அழகு.

———:O:———

# 5 மகா பாரதம்

## பதினெட்டாம்போர்ச் சருக்கம்

1. ஐய-ஐயனே! மாதவன் ஏவலால் முந்து-இலக்குமிக்கு நாயகனாகிய கிருஷ்ணரின் ஏவுதலால் எதிர்ப்பட்ட, பூதம் முதுகிட-பூதமானது புறங்காட்டி யோட, அகன் பாசறை யாரையும் மாமுடி சிந்தச் செற்று-அகன்ற பாசறையின்கணுள்ள எவரையும் பெரிய முடியைத் தாங்குந் தலைகள் சிதறிப் போகுமாறு கொன்று, ஐந்து வீரர் தம் ஆவியும் கொண்டு வந்தனேன்-பஞ்ச பாண்டவர்களாகிய வீரருடைய உயிர்களையுங் கவர்ந்து வந்தேன், எ-று.

முடி-ஆகு பெயர். வந்தனேன் என்பதில் வா-பகுதி-, ஏன்-விகுதி அன்-சாரியை, த்-இடைநிலை, த்-சந்தி, தகர வொற்று மெலிந்ததும் பகுதி நெடில் குறுகியதும் விகாரம். கிருட்டிணர் ஏவிய பூதத்திற் கஞ்சிய அசுவத்தாமன், சிவனாரிடமிரந்து வாளொன்று பெற்று மறுநாட் பாசறையை நோக்கிச் செல்வானாயினன். சென்ற காலை, அவ் வாள் கண்டஞ்சிப் பூதம் புறங்காட்டி யோடிற்று. அர், ஓ என்பன அசை.

2. சொன்ன சிங்கத் துவசனை ஆதியா மன்னர் ஐவரும் மாண்டனர்-நினக்குப் பெரும் பகையாளனெனக் கூறிய சிங்கக் கொடியை யுடைய வீமன் முதலிய ஐந்து அரசர்களும் இறந்துபட்டுப் போயினர், அவர் சென்னி என்று-இதோ இவை அப் பஞ்சபாண்டவர்களுடைய

தலைகள் என்று, சிறுவர் தம் சென்னியை-அவர்களின் மக்களுடைய தலைகளை, முன்னர் வைத்தனன்-துரியோதனன் முன்னிலையில் வைத்தான், முனி மைந்தன்-தவத்தின் மேம்பட்ட துரோணன் புதல்வனாகிய அசுவத்தாமன், எ-று.

துரியோதனன் பிள்ளைமைக் காலந் தொட்டு வீமனோடு பகைகொண்டிருந்தவனாதலின்; உவப்பானெனக் கருதி. தருமன் ஆதியா என்று கூறாமல், "சிங்கத் துவசனை யாதியா" என்றான் சிறுவர் என்றது, திரௌபதி வயிற்றில் தருமன் முதலிய ஐவர்க்கும் தனித்தனி பிறந்த ஐந்து மக்களையும்: மற்று. ஆல் என்பன அசை.

3. வயா உறு சித்த மன்னவன்-(பஞ்சபாண்டவர் இறந்தனர் என்னும் உவகையால் அவர் தம் தலைகளைப் பார்த்தற்கு) மிக்க ஆவல் கொண்ட மனத்தினை யுடையனாகிய துரியோதனன், வைத்த சென்னியை நோக்கி-அசுவத்தாமன் தன் முன்னர் வைத்த தலைகளை உற்றுப் பார்த்து, தேறி-இவை அவர்கள் தலைக ளல்லவெனத் தெளிந்து, சிறார் முகம்-இச் சிறுவர் முகங்களானவை, தத்தம் அன்புடைத் தந்தையர் வாள் முகம் ஒத்த ஆகும்-தம் தம் அன்பு நிறைந்த தந்தையரின் ஒளி பொருந்திய முகங்களை நிகர்ப்பனவாகும், இஃது உண்மை என்று ஓதினான்-இதுவே உண்மையாகுமென்று சொன்னான். எ-று.

வயா-வேட்கைப் பெருக்கம்.

4. ஓதும் வேந்துக்கு ஒரு மொழியும் சொல்லான்-இவ்வாறு கூறுகின்றவனாகிய துரியோதனனுக்கு ஒரு மறுமொழியுஞ் சொல்லாதவனாகி, வேத பண்டிதன் நிற்க-வேதங்களிலே பாண்டித்தியமுடையவனாகிய அசுவத்தாமன் சும்மா நிற்க, அவ் வீரனை-வீரம் பொருந்திய அவ் வசுவத் தாமனைப் பார்த்து, பாதகஞ் செய்கை பார்ப்பன மாக்களுக்கு ஏதம் ஏதம்-பிறருக்குத் துரோகஞ் செய்தல், பிராமணர்களுக்கு மிகவும் கேட்டைத் தருவதாகும் கேட்டைத் தருவதாகும், இது செய்தவாறு என்-இப்படி நீ செய்தபடி யென்ன? எ-று.

இச் செயலின் கொடுமையையும், இயல்பாகவே பிராமணரிடத்துக் காணப்பட வேண்டிய இன்னருள் பங்கப்பட்டமையையும் கூறப் புகுந்தோன் "ஏதம் ஏதம்" என அடுக்கிக் கூறினான். அரோ-அசை. வேதபண்டிதன் கிருபாச்சாரிய னெனினும் பொருந்தும்.

5. தின்னு பாரதம் தோற்றிய நாள் முதல்-நெருங்கிய பாரதப் போரானது தொடங்கிய நாள் முதலாக, வாளியால்-அம்பு போக்கும் வன்மையால், மன்னர் ஓட மலைந்தனை-நின்னை எதிர்த்த அரசர்கள் புறங்காட்டி யோடுமாறு போர் செய்துவிட்டாய், சொன்ன பாலர் மகுடம் இன்று துணித்தது-முன் கூறிய இந்தச் சிறுவர்களின் முடித் தலைகளை நீ இன்று வெட்டியது, என்ன வீரியம்-என்ன வீரமோ, என் நினைந்து என் செய்தாய்-எதனை நினைந்து எதனைச் செய்துவிட்டாய், எ-று.

"பாரதம் தோற்றிய நாள் முதல் மன்னரோட மலைந்தனை" என்பதும் "என்ன வீரியம்" என்பதும் இகழ்ச்சி யுரைகள். வாளி, முடி

என்பன ஆகுபெயர்கள். சிறவலை வாளினுல் துணித்தான் என்பது வரலாருதலின், வாளியால் என்பது, மேலே கூட்டி யுரைக்கப்பட்டது. தருமனையும் தம்பியரையுங் கரவிற் கொன்று வருவேனெனக் கருதிச் சென்று, அவர் தம் மக்களை, அவரேயெனத் தெளிந்தாயாய்க் கொன்றனையே யென்பான், "என் நினைந்து என் செய்தாய்" என்றுன்.

6. வரு குலத்து ஒரு மாசு அறு மைந்தனே-நீ தோற்றிய பரத்துவாச குலத்திலே மற்றெவரும் ஒப்புக் கூற முடியாத குற்றமற்றவனுகிய வலியோனே, குரு குலத்தின் கொழுந்தினைக் கிள்ளினை-குருகுலமாகிய கொடியிலே தழைத்திருந்த (பஞ்ச பாண்டவரின் மைந்தர்களாகிய) இளந் தளிரினைக் கிள்ளி யெறிந்து விட்டாய், இரு குலத்தில் ஒரு குலத்திலும்-இரண்டு மரபில் ஒரு மரபிலாயினும், எமக்கும் அவர்க்கும்-எமக்காயினும் அன்றேல் அவர்க்காயினும், இங்கு உண்டு எனல் இல்லையால்-இப் பூவுலகத்தே சந்ததி யுண்டென்பது இல்லையாய்ப் போயிற்று, எ-று.

ஒரு-ஒப்பற்ற, மைந்து-வலிமை, இரு குல மென்றது திருதராட்டிரன் பாண்டு என்போரின் வழிகளை. ஆல்-அசை.

7. ஆற்றில் நீர் விளையாடிய நாள்முதல்-ஆற்றிலே நீந்துதல் முதலிய நீர் விளையாட்டயர்ந்த நாள் தொடக்கமாக, காற்றின் மைந்தனேடு எத்தனை கன்றினேன்-வாயு குமாரனுகிய வீமனேடு எத்தனை விதத்தில் கடுங் கோபஞ் சாதித்தேன், சாற்றின்-எடுத்துச் சொல்லின், ஐய-ஐயனே, என் வினை தான் என்னை சுட-யான் முன்னர்ச் செய்து கொண்ட கொடுஞ் செயல்களே (உருத்தெழுந்து வந்து) என்னைச் சுடுதலினுல், கூற்றின் வாய்ப் புகுந்தேற்கு-அத் தீவினையாகிய யமனின் வாயிடைப் புகுந்து தவித்துக்கொண்டிருப்பேனுக்கு, என்ன கூற்று-இனி வேறே யமன் எதற்காகவோ, எ-று.

"என் வினையே என்னைச் சுடுதலினுல் யமனின் வாய்க்குள் அகப்பட்டுத் தவித்துக்கொண்டிருப்பேனுக்கு இனி என்ன ஆண்மைப் பேச்சிருக்கின்றது" என்றுரைப்பினும் அமையும். இதற்கு, இரண்டாங் கூற்றைச் சொல்லென்று கொள்க.

பிள்ளைமைக் காலத்தே வீமனை வஞ்சனையாற் கொல்லக் கருதி நீரினுள்ளே கழுவை நிரைத்து வைத்தது முதலான கொடுஞ் செயல்களை ஈண்டுக் குறித்தனனென்க. தான் என்பது தேற்றப் பொருளுணர்த்திய தோரிடைச்சொல், ஏ- அசை.

8. பணை நெடும் கைப் பகட்டு வெம் சேனை சூழ்-பருத்த நெடிய துதிக்கையையுடைய ஆண் யானைகளாகிய கொடிய சேனைகளாற் சூழப்பெற்ற, சொல் இணை தரும் கிளைஞர்கள் யாரையும்-புகழ் சேர்ந்த சுற்றத்தார் யாவரையும், துணைவர் யாரையும்-துணையாய் நின்றோர், உடன் பிறந்தார் யாவரையும், தோற்று நின்றேன்-போரிலே (தோற்று) இழந்து தனித்தவனுனேன், எண்ணில் பார் மிசை எனக்கு இணையர் யார் உளர்-நினைத்துப் பார்த்தால் இப் பூமியில் எனக்கு நிகராவார் யாரிருக்கின்

ளர் (எ-று) பணைத்தல்-பருத்தல், சொல்-புகழ், இணைதரல்-சேர்தல், துணைவர் என்பது-நட்புடையாரையும், உடன்பிறந்தாரையும் குறித்து நின்றது.

9. என்று பன்மொழி கூறி-என்றிவ்வாறு பல வார்த்தைகளையுஞ் சொல்லிவிட்டு, இம் மைந்தரைக் கொன்று வந்த குமரனை-பஞ்சபாண்டவர்களின் பிள்ளைகளாகிய இவர்களைக் கொன்று வந்தவனாகிய அசுவத்தாமனைப் பார்த்து, போர் தொறும்-போர்களொவ்வொன்றிலும், நின்ற தீவினை நீங்கிட-நின்னைச் சார்ந்து நிற்கின்ற கொடுஞ் செயல்களாலாகிய பழி பாவங்கள் நீங்குமாறு, நீ தவம் ஒன்றி வாழ்க என்று உயர் விடை நல்கினான்-நீ தவஞ்செய்து வாழக் கடவாய் என மேம்பட்ட விடையை வழங்கினான், எ-று.

தவம் ஒன்றல்-தவத்தின் கண்ணே முயலுதல்.

10. நெஞ்சம் மாழ்குற நின்றவர்-உள்ளம் கலங்க ஆங்கு நின்றவர்களாகிய; வெம் சராசன வீரனும் மாமனும் போனபின்-கொடிய வில் வீரனாகிய அசுவத்தாமனும் அவன் மாமனாகிய கிருபாச்சாரியும் சென்ற பின்னர், கஞ்ச நாள் மலர்க் கண் புனல் சோர்தரும்-தாமரைப் பூப் போன்ற கண்களினின்றும் நீரைச் சொரிகின்ற, சஞ்சய ஆரியன் தன்னொடு கூறுவான்-சஞ்சய முனிவனாகிய புரோகிதனிடம் (துரியோதனன்) சொல்லத் தொடங்கினான், எ-று.

கஞ்சம்-நீரில் தோன்றுவது, கம்-நீர், நாள் மலர்-பகற் பொழுதில் அலரும் மலர்.

11. யாமொடு எந்தை இரக்கம் உறுவகை-தாயுந் தந்தையும் (யாம் இறந்ததற்காக) வருத்த மடையாதவாறு, ஆய இன் சொல்லினால் துயர் ஆற்றிட-பொருத்தமான இனிய சொற்களினால் அவரது துயரத்தை ஆற்றுதற்கு, நீ எழுந்தருள்-நீர் சென்றருளக் கடவீர், நின் மொழி வல்லபம்-உமது சொல்வன்மைக்கு, தூய சிந்தைச் சுரர்களும் வல்லரோ-சுத்தமான மனத்தையுடைய தேவர்களும் இணை நிற்கக் கூடிய வல்லமை யுடையரோ? எ-று.

12. கோன்-எங்கள் தந்தையாராகிய அரசர், யானும் எம்பியரும் இறந்தோம் எனும் மானபங்கம் மறந்து-யானும் என் தம்பிமாரும் மாண்டொழிந்தோம் என்னும் மானக்கேட்டை (அடியோடு) மறந்துவிட்டு, தன் நெஞ்சினுக்கு ஆன தம்பி அளித்தவர் தம்மொடும்-தமது மனத்துக்குகந்த தம்பியாகிய பாண்டு என்பார் பெற்றெடுத்த பஞ்சபாண்டவரோடுங் கூட, நிலம் புரக்கும்படி கூறுவாய்-பூமியை ஆளுகை செய்யுமாறு சொல்லக்கடவீர், எ-று.

13. உன்னில் ஆண்மைக்கு உவமை இல்லாதவன்-நினைத்துப் பார்க்குமளவில் வீரத்துக்குப் பிறரை ஒப்புச் சொல்ல முடியாதவனாகிய துரியோதனன், என்ன-என்றிவ்வாறு கூறி, அம் முனி தன் தாள் மலர் இணை-அந்தச் சஞ்சய முனிவரின் பாத தாமரைகளிரண்டையும், சென்னி

மீதும் விழியினும் சேர்த்திடா-தன் தலைமேலும் கண்களிலும் சேர்த்து, பொன் நிலத்தின் உணர்வொடும் போயினான்-வீரசுவர்க்கத்தின் நினைப்போடு உடலை விட்டுப் பிரிந்து போனான், எ-று.

———:O:———

# IV நீதித் திரட்டு

## 1 திருக் குறள்

1. அன்பின் வழியது-அன்பு முதலாக அதன் வழி நின்ற உடம்பே, உயிர் நிலை-உயிர் நின்ற உடம்பாகும், அஃது இல்லார்க்கு-அவ்வன்பு இல்லாதவர்களுக்குள்ள, உடம்பு-உடம்புகளானவை, என்பு-எலும்பை, தோல்-தோலினால், போர்த்த-போர்க்கப்பட்டனவாம் (உயிர் நின்ற உடம்புகள் ஆகா) எ-று.

2. தன் நெஞ்சம்-(ஒருவன்) தனது மனம், நடுவு-நடு நிலைமையில் இருந்து, ஒரீஇ-நீங்கி, அல்ல செயின்-பட்சபாதங்களைச் செய்ய நினைக்குமாயின், (அந் நினைவை) யான்-, கெடுவல்-கெடக்கடவேன், என்பது-என்று உணரும் முற்குறியாக, அறிக-அறியக்கடவன், எ-று.

3. கொல்லான்-(ஓர் உயிரையும்) கொல்லாதவனுமாய், புலாலை மறுத்தானை-புலாலையும் உண்ணாதவனை, எல்லா உயிரும்-எல்லாச் சீவ பிராணிகளும், கைகூப்பி தொழும்-கைகுவித்து வணங்கும், எ-று.

4. உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை-உயிர்களுக்கு அடக்கமாய் இருத்தலினும் பார்க்க மேலான வேறு செல்வம் இல்லை, (ஆதலால்) அடக்கத்தை பொருள் ஆக காக்க-அடங்கி இருத்தலை பெரும் உறுதிப் பொருளாக பாதுகாத்து வருக, எ-று.

5. பயன் ஈன்று-பொருளினால் பிறருக்கு நன்மையைக் கொடுத்து, பண்பின் தலைப் பிரியா-இனிய குணத்தினின்றும்நீங்காத, சொல்-சொற்களானவை (ஒருவனுக்கு) நயன் ஈன்று-இம்மைக்கு நீதியையும் உண்டாக்கி, நன்றி பயக்கும்-மறுமைக்கு அறத்தையும் தரும், எ-று.

6. ஒருவன் தன் நெஞ்சத்து-ஒருவன் தன் மனத்தின்கண், அழுக்காறு இலாத இயல்பு-பொறாமையாகிய குற்றம் இல்லாத தன்மையை, ஒழுக்கு ஆறு ஆக கொள்க-தனக்குச் சொல்லப்பட்ட ஒழுக்கத்தினது வழியாகக் கொள்ளக் கடவன், எ-று.

7. ஒருவற்கு-ஒருவனுக்கு. கேடு இல்-அழிவு இல்லாத, விழுச் செல்வம்-சிறப்பாகிய செல்வம் ஆவது, கல்வி-, மற்றையவை-அது நீங்கலாகிய மணியும் பொன்னும் முதலான செல்வங்கள், மாடு அல்ல-செல்வம் அல்ல, எ-று.

அழிவின்மையாவது-தாயத்தார், செல்வர், கள்வர், அரசர் முதலியோரால் கொள்ளப்படாமை.

8. கற்றிலன் ஆயினும் கேட்க-(உறுதி நூல்களைத்தான்) படியானாயினும் அவற்றின் பொருள்களைக் கற்றோர் சொல்லக் கேட்கக் கடவன், அஃது-அக் கேள்வியானது, ஒருவற்கு-ஒருவனுக்கு, ஒற்கத்தின்-தளர்ச்சிவந்த இடத்து, ஊன்று ஆம் துணை-பற்றுக்கோடாந் துணை ஆகலான், எ-று.

9. யா-(காக்க வேண்டுவன) யாவையும், காவார் ஆயினும்-காக்கமாட்டார் ஆயினும், நா-நா ஒன்றையும், காக்க-காத்துக் கொள்ளக் கடவர், காவாக்கால்-நாவைக் காத்துக்கொள்ளாது விட்டால், சொல் இழுக்குப்பட்டு-சொற் குற்றத்திலே அகப்பட்டு, சோகாப்பர்-தாமே துன்பப் படுவர், எ-று.

10. உதவி உதவி வரைத்தன்று-எதிர் செய்யும் உதவியானது முன் செய்த உதவி அளவினதன்று, உதவி செயப்பட்டார்-அவ்வுதவி செய்யப் பெற்றுக்கொண்டவரது, சால்பின் வரைத்து-தகுதி அளவினதாம், எ-று.

11. எ நன்றி கொன்றார்க்கும்-எவ்விதமான பெரிய தருமங்களைக் கெடுத்தவர்க்கும், உய்வு உண்டாம்-பாவத்தில் நீங்கும் வழி உண்டாம், செய் நன்றி-ஒருவன் செய்த உபகாரத்தை, கொன்ற மகற்கு-கெடுத்த மனிதனுக்கு, உய்வு இல்லை-அப் பாவத்தில் நீங்கும் வழி இல்லை, எ-று.

12. ஈன்றாள்-ஒருவன் தனது நற்றாயினது, பசி காண்பான் ஆயினும்-பசியை வறுமையால் காணுந் தன்மை உடையன் ஆயினும், (தன் தாயின் பசியை நோக்கி) சான்றோர் பழிக்கும் வினை-அறிவில் நிறைந்த பெரியோர் பழிக்கத் தக்க தொழில்களை, செய்யற்க-செய்யாதிருக்கக் கடவன், எ-று.

13. அனிச்சம்-அனிச்சம் பூவானது, மோப்பக் குழையும்-மணந்த இடத்தே வாடுந் தன்மையது, (ஆனால்) விருந்து-விருந்தினர் ஆவார், முகந் திரிந்து-முகம் வேறுபட்டு, நோக்க குழையும்-பார்க்க வாடுவர் என்றவாறு.

14. பணிதல்-பெருமை இல்லாது அடங்குதல், எல்லார்க்கும் நன்று ஆம்-யாவருக்கும் பொதுப்பட நன்றாகும், ஆயினும், அவருள்ளும்-அவ் வெல்லாருள்ளும், செல்வர்க்கே செல்வம் தகைத்து-செல்வர்களுக்கே வேறு ஒரு செல்வமாய்த் தோற்றும் தன்மையுடையது, என்றவாறு.

15. ஆற்றின்-கொடுக்கும் வழியினாலே, அளவு அறிந்து ஈக-தனக்குள்ள பொருளின் அளவைத் தெரிந்து, அதற்கேற்கக் கொடுக்கக்கடவர், அது-அக் கொடுத்தலானது, பொருள்-பொருளை, போற்றி வழங்கும் நெறி-காப்பாற்றிக்கொண்டு நடக்கும் வழியாம், எ-று.

16. வாய்மை எனப்படுவது-மெய்ம்மைஎன்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, யாது எனின்-யாதென்று வினாவினால், (அது பிறிதோர்

உயிர்க்கு ) யாது ஒன்றும்-சிறிது ஆயினும், தீமை சொலல்-தீமையைத் தராத சொற்களைச் சொல்லுதலாம், எ-று.

17. நட்டல்-ஒருவரோடு ஒருவர் நட்புச் செய்தல், நகுதல் பொருட்டு அன்று ( சிரிப்பதற்கு ஏற்றவை சொல்லி ) சிரிப்பதற்காக அல்ல, மிகுதிக் கண்-நண்பர்க்கு வேண்டாத செய்கை உண்டான இடத்து, மேற்சென்று இடித்தல் பொருட்டு-முற்பட்டுக் கண்டித்துப் புத்திசொல்லுதல் பொருட்டு, எ-று.

18. வாள் போல்-வெட்டுவோம் என்று வெளிப்பட்டு நிற்கும், வாள் போல, பகைவரை அஞ்சற்க-பகையாளிகளை அஞ்சாது இருக்கக் கடவர், ( அப்படி நில்லாமல் ) கேள் போல்-உறவினர் போல, மறைந்து நிற்கும், பகைவர்-பகைவரது, தொடர்பு-நட்பை, அஞ்சுக-பயப்படக் கடவர், எ-று.

19. வென்றிடினும்-தான் வெல்லும் வலிமை உடையனாயினும், சூதினை-சூதாடுதலை, வேண்டற்க-விரும்பாது இருக்கக் கடவன், ( வென்று பொருள் பெறுவார் உண்டென்றால் ) வென்றதும்-அவ் வென்ற பொருளும், தூண்டில் பொன்-இரையால் மறைந்த தூண்டில் இரும்பை, மீன் விழுங்கியற்று-மீன் விழுங்கியது போலும், எ-று.

20. (ஒருவன்) நலம் வேண்டின்-தனக்குப் புகழ் புண்ணியங்கள் வேண்டுவானாகில், நாண் உடைமை வேண்டும்-நாணம் உடையனாதலை, வேண்டக் கடவன், குலம் வேண்டின்-குலமுடைமையை விரும்புவானாயின், யார்க்கும்-வணங்கத் தக்க யாவரிடத்தும், பணிவு-வணங்குதலை, வேண்டுக-வேண்டக் கடவன். எ-று.

—:o:—

## 2 அறநெறிச்சாரம்

1. நறுந்தாமரையாளும்-வாசனை பொருந்திய தாமரையில் வீற்றிருக்கின்ற இலக்குமியும், சிறந்தார் பின் ஆயினும்-தான் தங்கியிருக்கக் கூடிய நல்லவரிடத்தாயினும், நல்வினைப்பின் அல்லால்-நல்லூழ்வினையைத் தொடர்ந்தல்லாமல், செல்லாள்-செல்லமாட்டாள், நல்வினை தான்-நல்லூழோ, ஏத்தும் மறை யொழுக்கம்-ஏத்தப்படுகின்ற வேதங்களிற் கூறப்படும் நல்லொழுக்கம், தானம் இயைவுழி-கொடை என்பவை ஒருவர்க்கு இயையுமிடத்து, ஒரு பொழுதும் நீத்தல் இல்-ஒருபொழுதும் விலகுதல் இல்லை, எ-று.

2. பிறர் எள்ளி உரைக்கும் இன்னாச் சொல்-பிறர் இகழ்ந்துரைக்கும் துன்பத்தைத் தரும் சொல், தன் னெஞ்சில் கொள்ளி வைத்தாற் போல் கொடிதெனினும்-தன் உள்ளத்தே நெருப்புக் கொள்ளியை வைத்தாற்போலக் கொடுமையாகச் சுடுவதாயினும், மெள்ள-மெல்ல, அறிவென்னும் நீரால் அவித் தொழுகலாற்றின்-அறிவெனப்படும் நீரினால் அதனை அவித்து ஒருவன் பொறையோடு வாழுதலைக் கடைப்பிடிப்

பானுயின், பிறிதெனினும் வேண்டா தவம்-இதனை விட வேருகத் தவமென்பதொன்று உண்டெனக் கூறினும் அஃது வேண்டப்படுவதன்று.
பொறையே யாவற்றினும் சிறந்த தவமா மென்பது.

3. மெய்ம்மை-உண்மை, பொறையுடைமை-பொறுமையுடைமை, மேன்மை-பெருந் தன்மை, தவம்-அடக்கம், செம்மை-நடுவு நிலைமை, ஒன்றின்மை-புறமாகிய செல்வங்களெவற்றினும் பற்று வையாமை, துறவுடைமை-ஐம் பொறிகளின் வழிச் செல்லாமை முதலிய அகப்பற்றின்மை, நன்மை-பிறர்க்கு நலம் புரிதல், திறம்பா விரதந் தரித்தலோடு-தவறுகாமல் விரதங் காத்தலோடு, இன்ன அறம் பத்தும்-இவை பத்துத் தருமங்களும், ஆன்ற குணம்-மாட்சிமைப்பட்ட நற்குணங்களாம், எ-று.

குணம்-இலக்கணம்.

4. தம் புண்-தமக்குண்டாய புண்ணை, கழுவி மருந் திடுவர்-, தாம்-அவர், பிறிதின் செம்புண்-பிறவற்றின் உடலி லிருந் தெடுக்கப்பட்ட சிவந்த புண்ணுகிய இறைச்சியை, வறுத்த வறை தின்பர்-வறுத்தெடுத்த வறையை யுண்பார், அந்தோ-ஐயோ, நடு நின்று உலகம் நயன் இல்லா மாந்தர்-நடுவு நிலையினின்று உலகத்தே நன்மை புரியாத மக்கள், செய்யும் வழக்கு வடு அன்ரே-செய்கின்ற வழக்கம் குற்றமுடையதன்ரே, எ-று.

வறை-வறுத்தல், வறுக்கப்பட்ட பொருளுக் காயிற்று.

5. இந்தியக் குஞ்சரத்தை-இந்திரியங்களாகிய யானைகளை, ஞானப் பெருங் கயிற்ருல்-ஞான மெனப்படும் பெரிய கயிற்றினுல், சிந்தனைத் தூண் சேர்த்திப் பூட்டிப் பந்திப்பார்-ஆராய்ச்சி யெனப்படுந் தூணிலே தொடுத்துப் பூட்டிக் கட்டி விடுபவரே, இம்மைப் புகழும்-இவ்வுலகத்துக்குரிய புகழிலேயும், இனிச் செல் கதிப் பயனும்-இனிச் சென்றடையும் சுவர்க்க வுலகத்துக்குரிய பயனிலேயும், தம்மைத் தலைப்படுத்துவார்-தம்மைக் கொண்டுபோய் விடுபவராவர், எ-று.

இந்திரியங்கள்-ஞானேந்திரியம், கன்மேந்திரியம், மனம் என்பன.
ஞானேந்திரியம்-மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.
கன்மேந்திரியம்-வாக்கு, கால், கை, குதம், குறி என்பன,
இந்திரியம்-பொறி.

——:O:——

## 3 நாலடியார்

1. 'எம்மை அறிந்திலிர்-எமது சிறப்பை (நீவிர்) அறிந்திரல்லீர், எம் போல்வார் இல்-எம்மைப் போன்றவர் (உலகத்தில்) இல்லை', என்று-, தம்மை தாம் கொள்வது-தம்மைத்தாமே சிறப்பித்துக்கொள்வது, கோள் அன்று-ஒரு பெருமை யாகாது, அறன் அறியும் சான்ருேர்-தருமங்களை அறிந்த மேன் மக்களால், தம்மை அரியர் ஆ நோக்கி-

தம்மை (உலகத்தில் பிறர்க்கு) அருமையான குணங்களையுடையவராகப் பார்த்து, பெரியர் ஆ கொள்வது-பெரியோர்களாக அங்கீகரித்து மதிக்கப்படுவதே, கோள்-(ஒருவர்க்குப்) பெருமையாம்.

இதனால் பெரியோர் தம்மைத்தாமே நன்கு மதித்துக் கொள்ளாரென்பதும், பெரியோரால் மதிக்கப்படுவதே பெருமையென்பதுங் கூறப்பட்டன. 'எம்' தன்மைப் பன்மை. அறிந்திலீர்-முன்னிலைப் பன்மை எதிர்மறை யிறந்தகால முற்று. கொள்வது, எழுவாய்; கோள், பயனிலை.

2. கண்டல்-தாழையை, திரை-அலைகள், அலைக்கும்-அலையச்செய்கின்ற, கானல்-கரைச் சோலையையுடைய, அம்-அழகிய, தண்-குளிர்ந்த, சேர்ப்ப-கடல்துறையையுடைய பாண்டியனே! இசையாது எனினும்-முடியாதாயினும், இயற்றி-விடாது முயன்று செய்து, ஓர் ஆற்றல்-ஒரு வகையாலும், அசையாது-தளராமல், நிற்பது-நிலைத்து நிற்பது, ஆண்மை ஆம்-ஆண் தன்மையாம், இசையும் கால்-முயற்சி கைகூடுவதானால், பெண்டிரும்-பெண்களும், வாழாரோ-(ஆடவர் போல) வாழமாட்டார்களோ?

மற்று-அசை, அம்-உரிச்சொல். ஆண்மை-எழுவாய், நிற்பதாம்-பயனிலை.

3. ஊர் அங்கணம் நீர்-ஊரிலுள்ள சலதாரையினது நீரானது, உரவு நீர் சேர்ந்தக்கால்-சிறப்புப்பொருந்திய நீரைச் சேர்ந்தால், பேரும் பிறிது ஆகி-(அதற்குப்) பெயரும் வேறாகி, தீர்த்தம் ஆம்-(அது) புண்ணிய தீர்த்தமாய் விடும், (அதுபோலவே) குலம் மாட்சி இல்லாரும்-குலத்தின் பெருமை இல்லாதவர்களும், நலம் மாட்சி நல்லாரைசார்ந்து-நற்குணங்களையுடைய உயர் குடிப் பிறந்தோரைச்சேர்ந்து, குன்றுபோல் நிற்பர்-மலைபோலும் பெருமையுடையராய் நிற்பர், எ-று.

'ஒரும்' என்பது அசைநிலை, குலமாட்சியில்லார்-எழுவாய், நிற்பர்-பயனிலை.

4. நல்ல குலம் என்றும்-உயர்ந்த குடியென்றும், தீய குலம் என்றும்-தாழ்ந்த குடியெனவும், சொல் அளவு அல்லால்-சொல்லளவல்லாது, பொருள் இல்லை-யாதொரு பொருளுமில்லை, தொல் சிறப்பின்-பழமையான சிறப்பையுடைய, ஒள் பொருள் ஒன்றோ-சுத்தமான செல்வமொன்று மாத்திரத்தாலோ, தவம்-தவமும், கல்வி-கல்வியும், ஆள்வினை-முயற்சியும், என்ற இவற்றான்-என்று சொல்லிய இவைகளினால், குலம் ஆகும்-குலம் மேன்மையடையும், எ-று.

குலம்-எழுவாய், ஆகும்-பயனிலை, ஒன்றோ-இடைச்சொல்.

5. எஞ்ஞான்றும்-எப்பொழுதும், பனையின் மேல்-பனைமரத்தின் மேல், வற்றிய ஓலை-உலர்ந்துள்ள ஓலைகள், கலகலக்கும்-கலகலவென்று சப்திக்கும், பசு ஓலைக்கு-பசிய ஓலைக்கு, ஒலி இல்லை-ஓசையில்லையாம், (அதுபோல) கற்று-படித்து, அறிந்த-உணர்ந்த, நாவினார்-நாவினையுடைய பெரியார், தம் சோர்வு அஞ்சி-(சொல்லும் சொற்களில்)

தமக்கு ஏதாவது பிழை நேரிடுமோ வென்று பயந்து, சொல்லார்-(விஷயங்களை மிகுதியாகச்) சொல்லமாட்டார்கள், மற்றையவராவார்-கல்லாதவர், பகர்வர்-ஆராயாது சொல்வர், எ-று.

நாவினார்-எழுவாய், சொல்லார்-பயனிலை. மற்றையவராவார்-எழுவாய், பகர்வர்-பயனிலை. மற்றையர்-இடைச்சொற் பகுதியடியாகப் பிறந்த பலர்பாற் பெயர்.

—:o:—

## 4 சோமேசர் முதுமொழி வெண்பா

1. சோமேசா-, தீயனவே சொல்லும் சிசுபாலன் முன்பு-கெட்ட வார்த்தைகளைப் பேசுகின்ற சிசுபாலன் முன்னர்; கண்ணன் தூயது அலா சொல் உரையான்-கிருட்டிணன் தூய்மை உடைய அல்லாத சொற்களை உரைக்கமாட்டான், ஆயின்-ஆராய்ந்து பார்க்குங்கால், வழுக்கியும் தீய வாயால் சொலல்-மறந்துந் தீயசொற்களைத் தம் வாயாற் சொல்லுந் தொழில்கள், ஒழுக்கமுடையவர்க்கு ஒல்லா-ஒழுக்கமுடையவர்க்கு முடியா, எ-று.

சோம ஈசர்-சந்திரனைச் சூடிய இறைவர்.

2. சோமேசா-, சுட்டிய சீர்-நன்கு மதிக்கப்படும் சீரினையுடைய, மெய்ப்பொருளார்-மெய்ப்பொருளனார், ஒட்டலன் செய் தீமைக்கு ஒருது-தம் பகைவனை முத்திநாதன் செய்த தீய செயலுக்காக அவனைத் தண்டியாது, நமர் என்று உரைத்தார்-" தத்தா நம்மவரிவர் " எனக் கூறியருளினார், முட்ட-தாக்கமாக, ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்-தமக்குத் தீங்கு செய்தவனை யொறுத்தார்க்கு உண்டாவது அவ்வொருநாளை யின்பமே, பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்-அதனைப் பொறுத்தார்க்கு உலக மழியுமளவும் புகழுண்டாம், எ-று.

சுட்டுதல்-நன்கு மதிக்கப்படுதல்.

3. சோமேசா-, சேக்கிழார்-, தூக்கி-ஆராய்ந்து பார்த்து, சிந்தாமணிப் பயிற்சி தீதெனவே உபதேசித்தார்-சிந்தாமணியைப் பயிலுதல் கேட்டைத் தருவதாமெனப் போதித்தார், நோக்கில்-ஆராயில், பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல்-பயனில்லாத சொற்களைப் பல்கா லுஞ் சொல்லுவானை மகனென்று சொல்லற்க, மக்கட் பதடி எனல்-மக்களுட் பதரென்று சொல்லுக, எ-று.

4. சோமேசா-, அன்பு துள்ளும் சிறுத்தொண்டர்-அன்பு ததும்புகின்ற சிறுத்தொண்ட நாயனார், பிள்ளை-தன் மகனாகிய சீராளன் (தம்மால் அறுக்கப்பட்டிறந்தா னென்பதை அறிந்தவராயிருந்தும்), உடன் உண்ண-துறவியாய் வந்த சிவபிரானோடு கூட விருந் துண்ணுமாறு, பேசி அழைத்தார்-அவன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார், உள்ளுங்கால்-நினைக்குமிடத்து, புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்-பிறர்க்குக் குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின், பொய்ம்மையும் வாய்

மையிடத்த-பொய்ம்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின் பால வாம், எ-று.

5. சோமேசா-, தொல்லை நெறி வாகீசர்-பழைமையான சிவ நெறியி லொழுகியவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள், பல்லவர் கோன் வந்து பணியக் கருணை செய்தார்-பல்லவ ராசன். தான் (சுவாமிகளுக்கு) முன்னர்ச் செய்த கொடுமைகளை யெல்லாம் நினைந்து கழிவிரக்கங் கொண்டவனாகித் தன்னை ஆட்கொண் டருள வேண்டு மென்று வந்து பணிந்த காலத்தே, அவர், அவனுக்கு அருள்புரிந்தருளினர், கொல்ல-கொல்வதற்காக, இணர் எரி தோய்வு அன்ன இன்னா செயினும்-பல சுடரை யுடையதாகிய பேரெரி வந்து தோய்ந்தாற் போன்ற துன்ப மாயினவற்றை ஒருவன் செய்தானாயினும், வெகுளாமை புணரின் நன்று-கோபியாதிருத்தல் ஒருவனுக்குக் கூடுமாயின் அது நன்று, எ-று.

—:o:—

## 5 பழமொழி

1. உணற்கு இனிய இன் நீர்-உண்ணுதற்கினிய நன்னீர், பிறிது உழி இல் என்னும்-(தானுள்ள இடம் தவிர) வேறிடத்தில் இல்லையென் றெண்ணும், கிணறு அகத்து தேரைபோல்-கிணற்றினுள்ளே வாழுகின்ற தவளையைப் போல், ஆகார்-ஒருவர் ஒழுகாது, கணக்கினை-நூலொன்றி னையே, முற்ற-முடியும்படி, பகலும்-நாள்தோறும், முனியாது-வெறுக் காமல், இனிது ஓதி-இனிதாக ஓதி, கற்றலின்-கற்றலைக்காட்டிலும், கேட்டலே-பல நூற் பொருளைக் கேட்டறிதலே, நன்று-நன்றாம்; என்றவாறு.

ஒரு நூலையே கற்று அடைதலான புலமையினும் பல நூல்களைக் கற்றறிந்தவர் கூறக் கேட்டு அடைதலான புலமையே சிறந்தது என்பதாம். கேட்டல்-எழுவாய், நன்று-பயனிலை.

2. உரை முடிவு காணான் இளமையோன்-உரைத்துக்கொண்ட வழக்கினது வார்த்தை முடிவினைக் கண்டறியக் கூடாதவனை பாலி யன், என்ற-என் றிகழ்ந்த, நரை முது மக்கள்-நரைமயிருள்ள முதி யோர், உவப்ப-உவக்கும் வகை, நரைமுடித்து-நரைமயிரை முடித்து வந்து, சொல்லால்-வழக் குரைத்தவர்களுடைய சொற்களைக் கொண்டே ஆராய்ந்தறிந்து, முறை செய்தான்-முறைசெய்தான், சோழன்-கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழன், குலவிச்சை-தத்தம் குலத்துக்கு ரிய வித்தைகள், கல்லாமல் பாகம்படும்-கற்பதற்கு முன்னே செம்பாக மாக உளவாம், எ-று.

3. நெறி மடல் பூ தாழை நீடு நீர் சேர்ப்ப-நெறித்தலான மடல் களையுடைய அழகிய தாழைகள் பொருந்திய கடற்சேர்ப்பனே! முல் லைக்கு தேரும்-சக்கரத்தில் சிக்கிய முல்லைக் கொடிக்குத் தன் தேரை யும், மயிலுக்கு போர்வையும்-குளிரால் ஒடுங்கி நின்ற மயிலுக்கு அரு மையான தன் போர்வையையும், தொல்லை-முன்னாளில், அளித்தாரை-

கொடுத்தாரை, கேட்டறிதும்-கேட்டறிவோம், (ஆதலால்), சொல்லின்-சொல்லுமிடத்தில், அறிமடமும்-அறிந்தும் அறியார் போன்றிருத்தலும், சான்றோர்க்கு அணி-சான்றோர்க்கு அழகேயாம், எ-று.

4. கழுமலத்தில் யாத்த களிறும்-கழுமலம் என்னும் ஊரின்கண்ணே கட்டியிருந்த யானையும், கருவூர்-கருவூரின் கண்ணேயிருந்த, விழுமியோன் மேல்-சிறப்புடையவனான கரிகால் வளவனிடம், சென்றதனால்-சென்று தன்மேல் எடுத்துக் கொண்டுபோய் அரசிற் குரிமை செய்ததாதலால், விழுமிய-விழுமிய பொருள்களை, வேண்டினும் வேண்டாவிடினும்-விரும்பினும் விரும்பாவிட்டாலும், உறற்பால-வந்து அடைதற்குரியனவாய இன்பங்களுந் துன்பங்களும், தீண்டா விடுதல்-அடையாமல் விடுவது, அரிது-இல்லை, எ-று.

5. பொலம் தார் இராமன்-பொன் மாலையையுடைய இராமனை, தான் துணையாக போந்து-தனக்குத் துணையாகக் கருதிப்போந்து, இலங்கை கிழவற்கு இளையான்-இலங்கைக்குரியவனாகிய இராவணனுக்கிளையானான விபீஷணன், இலங்கைக்கே போந்து இறையாயதும் பெற்றான்-இலங்கைக்கே மீட்டும் அரசனாகும் பதவியையும் பெற்றான், (ஆதலால்), பெரியாரை சார்ந்து-பெரியரா யிருப்பாரைச் சார்ந்தால், கெழு இலார் இல்-அந்தச் சார்பினாலே பயன் பெறாதவர் இல்லை, எ-று.

——:O:——

## 6 தண்டலையார் சதகம்

1. முக்கணர்-மூன்று கண்களையுடைய சிவபிரானா ரெழுந்தருளிய, தண்டலை நாட்டில்-தண்டலை யென்னும் நாட்டிலே, கற்புடை மங்கையர் மகிமை மொழியப்போமோ-கற்புள்ள பெண்களின் சிறப்பை எடுத்துச் சொல்ல முடியுமோ, பண்டு-முன்னாளில், ஒக்கும் எரி குளிரவைத்தாள் ஒருத்தி-நிறைந்த நெருப்பினைக் குளிரும்படி செய்தாள் ஒரு பெண், வில் வேடனை எரித்தாள் ஒருத்தி-வில்லேந்திய வேடனொருவன், தன்னை மானபங்கஞ்செய்ய வந்தபோது, அவனை நீறாக்கினாள் ஒரு பெண், மூவர் பக்கம் உற அமுதளித்தாள் ஒருத்தி-விருத்தகுமாரராய் வந்த அரன் அரி அயன் என்னும் மூவரும் தன்னருகடைய அவரைப் பாலராக்கித் தன் பாலாகிய அமுதத்தை அருந்தக் கொடுத்தாள் ஒரு பெண், எழு பரி தடுத்தாள் ஒருத்தி-சூரியனாருந் தேரினை யிழுத்துச் செல்லும் ஏழு குதிரைகளையும் ஓடவிடாமல் தடுத்தாள் ஒரு பெண், கொங்கணவா கொக்கெனவே நினைந்தனையோ என்று ஒருத்தி கூறினாள்-கொங்கண முனியே நின் கோபத்திற் கிரையாகி அழிந்த கொக்கென என்னை நினைத்தாயோ என்று ஒரு பெண் சொன்னாள், என்றவாறு.

இராவண சம்மாரம் முடிந்த காலத்தே, தான் கற்பிற் சிறிதும் வழுவாதவளென்பதை யுலகுக்குக் காட்டுதற்காகச் சீதாபிராட்டி சுடர்

விட்டெரியுந் தீயிற் குளித்தெழுந்ததையும், காட்டிலே தனித்தவராய்நின்ற தமயந்தியம்மையார், தன் கற்பைக் கெடுக்கவந்த வேடனைத் தன் சொல்லால் எரித்ததையும், நிருவாணியாயிருந்து உணவளிக்க வேண்டுமென மும்மூர்த்திகளாற் கேட்கப்பட்ட அநசூயையம்மையார், அவர்களைப் பாலராக்கி யமுதளித்ததையும், பொழுதெழுவதன்முன் தன் கணவனிறப்பாரென்றதையறிந்து நளாயினிதேவியார் சூரியனைச் செல்லவிடாது தடுத்ததையும், தன்மேற் சருகை யுதிர்த்த கொக்கைக் கோபங்கொண்டு சாம்பராகவெனச் சபித்த கொங்கணமுனிவன் உணவுக்கிரந்துநிற்கையில், சிறிது காலந் தாழ்ப்ப, உள்ளத்தே சினந்தானாக அதனை யுள்ளிருந்த கற்புடைச் செல்வியொருத்தி உள்ளக்கண்ணாலறிந்து கேட்டதையுங் குறித்தன. தண்டலை-சோலை, ஈண்டுக் காரணக்குறி. ஈற்றிற் கூறப்பட்டார், வாசுகியம்மையா ரென்பர் சிலர்.

2. இச் செய்யுள் வெளிப்படையானது. மன்றில் நடம்புரிவார்-சிதம்பரத்தில் கூத்தியற்றுஞ் சிவபிரான், குஞ்சரம்-யானை.

3. மேட்டுக்கே விரைத்த விரை-மேட்டு நிலத்திலே விதைக்கப்பட்ட வித்தும் (நில ஈரமின்மையாலும், பறவைகளாற் கொள்ளப்படலாலும் அழியும்), வீணருக்கு செய்த நன்றி-ஒருவகையிலும் பயன்படாத கீழோர்க்குச் செய்த நன்றியும், மேயும் பட்டி மாட்டுக்கு கொடுத்த விலை-பல்லிடங்களிலும் மேய்ந்து திரியும் கட்டாக்காலியான மாட்டுக்குக் கொடுத்த விலைப் பணமும், பரத்தையர்க்குத் தேடி இட்ட வண்மை எல்லாம்-வேசியராகிய பொதுப் பெண்டிர்க்குத் தேடிக்கொடுத்த கொடையுமாகிய இவை யாவும், பாட்டுக்கு அருள் புரியும் தண்டலையார் வீதி தோறும்-பாட்டைப் பாடுபவர்க்கு அருளைச் செய்கின்ற தண்டலையாருடைய தெருக்கள் தோறும், பரப்பிடாமல்-, காட்டுக்கு எறித்த நிலா-காட்டிலே ஒளியைப் பரப்பிய நிலாவையும், கான் அதுக்கு பெய்த மழை கடுக்கும்-காடாகிய அதிலே பெய்த மழையையும் ஒக்கும், காண்-அறிவீராக, எ-று.

4. தாய் மகள் அருமை அறிவாள்-தாயானவள் மகளின் அருமையை அறிவாள், நீள் நெறி தண்டலை நாதர் அவர்-நீண்ட வீதிகளையுடைய தண்டலையி லுறைகின்ற சிவனாராகிய அவர், எம் அருமை தந்தையாய் அறிவார்-எம்முடைய (தமிழ்ப் பாட்டின்) அருமையைத் தந்தையாய் நின்று அறிய வுறுவார், பரவையிடம் தூது சென்றது அறிந்திடாரோ-(அன்றியும்) தமிழ்ப் பாடலின் சுவைக்காகப் பரவையென்னும் பெண்ணிடத்துத் தாம் தூதுவனாய்ச் சென்றதையும் அறியமாட்டாரோ, பேய் அறிவார் முழு மூடர்-பேயா லறியப்பட்டவராகிய முழு மூடர்கள், தமிழ் அருமை அறிவாரோ-, பேசுவாரோ-அத்தமிழின் சிறப்பை எடுத்துக் கூறும் மாட்சியுடையாரோ, ஒரு சந்திச் சட்டி பானையின் அந்த நியாயம் நாய் அறியாது-விரதத்துக்குரிய சட்டி பானை யிவை என்னுந் தகுதியை நாயறியாது, எ-று.

நாயறியாது விரதத்துக்குரிய சட்டி பானை யிவை யென்பதை, அது போல் பேயாற் பற்றப்படுகின்றவராகிய முழு மூடர் தமிழி னருமை

யை யறியார். மகளி னருமையைத் தா யறிவாள். அதுபோலத் தமிழ்ப் புலமையுடையராம் எம்மைத் தமிழ்ப் பாடலுக்காய்த் தூது சென்ற சிவ பிரா னறிவர் என்பதாம். மூடர் அறிவின்மையால் தொட்டதற்கும் பேய் பேய் என அழுங்குவராதலின் பேயறிவார் முழு மூடர் என்றார். நியாயம்-பொருந்துமாறு, ஒருசந்தி-ஒரு நேர உணவு, விரதம்.

5. வாதிலே அயன் தேடும் தண்டலை நீள் நெறியாரே-தானே பெரியோனென்னும் வாதத்தினாலே பிரமனானவன் அன்னமாகி முடியைத் தேடி நின்ற (நீண்ட வீதியையுடைய) தண்டலையினுள்ளாரே, காதிலே திருவேடம்-காதிலே அணியப்பட்டிருப்பது இறைவன் திருவேடமாகிய உருத்திராக்க குண்டலம், கையிலே செபமாலை-, கழுத்தின் மார்பின் மீதிலே தாழ் வடங்கள்-கழுத்தின் மேலும் மார்பின் மேலும் தாழ்ந்த உருத்திராக்க வடங்கள், மனதிலே கரவடம் ஆம் வேடம் ஆமோ-மனதிலே வஞ்சகம் ஆமாறு கொண்ட இவ் வேடம் பொருந்துவதாமோ, மனிதர் காணும் போதிலே மவுனம்-மனிதர் பார்க்கின்ற பகற்காலத்திலே வாய் பேசாதிருப்பது, இராப்போதிலே ருத்ராக்ஷப் பூனை தானே-இரவு காலங்களில் கூடாவொழுக்கமுடைமையால் புலாலுண்ணுதேனெனத் தன்னைக் கூறிக்கொண்ட உருத்திராக்கமணிந்த பூனைக் கொப்பானவராவது தானே, எ-று.

# V வீரச் சுவை

## கலிங்கத்துப் பரணி

1. மொய்த்து இலங்கிய தாரகை வானின்-நெருங்கி விளங்கிய நட்சத்திரக் கூட்டங்களையுடைய ஆகாயத்தின், நீள் முகட்டு எழுந்த முழு மதிக்கு-நீண்ட முகட்டில் (உச்சியில்) கிளம்பிய பூரண சந்திரனுக்கு, ஒப்பென-இணையென்று சொல்லும்படி, நெய்த்து இலங்கிய நித்திலப் பந்தரின்-கசிந்து விளங்கிய முத்துப் பந்தலின் கீழ், ஒன்று வெண்குடை நின்று நிழற்ற-ஒப்பற்றதாகிய வெள்ளிய குடை நின்று நிழலைச் செய்ய என்றவாறு.

> நெய்த்தல்-வழுவழுப்புடையதாதல். தாரகைகள் முத்துக்களுக்கும், திங்கள் குடைக்கும் உவமையாயின.

2. மேல் கவித்த மதிக்குடையின் புடை-மேலே கவித்தலைச் செய்து நிற்கும் சந்திரன் போன்ற (வெள்ளிய வட்ட வடிவான) குடையின் பக்கங்களிலே, வீசுகின்ற வெண் சாமரை-வீசுகின்ற இரண்டு வெண் சாமரைகளும், தன்-அச் சந்திரனின், திருப் பாற் கடல் திரை ஓர் இரண்

டுவந்து-மேன்மைதங்கிய பாற்கடலின் இரண்டு திரைகள் போந்து, ஆங்கு-அவ்வத்தாணி மண்டபத்தே, இருபாலும் பணி செய்வ போல-இரு பக்கங்களிலும் ஏவிய வேலைகளைச் செய்வன போன்றவாக, எ-று.

சந்திரன் பாற் கடலிற் றோன்றினனாதலின் தன்திருப் பாற் கடல் என்றார். திரு என்பதற்கு இலக்குமி எனினும் பொருந்தும். சந்திரனி னிரு பக்கங்களிலும் திரைகள் பணி செய்வன போல வென்க.

3-ம், 4-ம், 5-ம், 6-ம் செய்யுட்களில் பல தேயத் தரசர்கள், திறை செலுத்தற்கு வந்து கூடினர் கூறப்படுகின்றார். தென்னர்-பாண்டியர், வில்லவர்-சேரர், யாதவர்-யதுகுலத்தவர், மிலேச்சர்-சரசுவதி யாற்றின் வடதேசத்தார், கூவகம் சாவகம் சேதிபம் முதலியன நாடுகளின் பெயர்கள்.

7. நம் படைஞர்-எம் படையி லுள்ளீர், எளியன் என்றிடினும்-(எமக்குத் திறை செலுத்ாதவனான அனந்த பத்மன்) தம்மால் வெல்லப்படற்கு இலேசானவ னென்னப்படினும், வலிய குன்று அரணம் இடிய-அவனது வலிய மலையாகிய மதில் இடிந்தொழியுமாறு, கடிது சென்று-(இங்கிருந்து) விரைந்து போய், அளி அலம்பு மத மலைகள்-வண்டுக் கூட்டங்கள் ஒலிக்கின்ற மதம் பொருந்திய யானைகளை, கொண்டு அணைமின்-திரட்டிக்கொண்டு அக் கோட்டையை அணைவீர்களாக, அவனையும் கொணர்மின்-அவனையுஞ் சிறையாகப் பிடித்துக் கொணர்வீர்களாக, எனலும்-என்று அபயன் சொன்னவுடனே, எ-று.

உம்மை-எச்சவும்மை. படைஞர்-அண்மை விளி.

8. இறை மொழிந்த அளவில்-அபயன் கூறியவுடனே, மறை மொழிந்தபடி-வேதத்தில் கூறியபடி, மரபில் வந்த-கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த வமிசத்தில் தோன்றிய, குல திலகன்-குடும்பத்திற்கோர் திலகம் போன்றவனாகிய, வண்டை நகர் அரசன்-வண்டை மன்னனாகிய கருணாகரத் தொண்டைமான், கலிங்கம் அவை ஏழும்-கலிங்கத்தின் பிரிவுகளாகிய அவ் வேழு நாடுகளையும், எறிவென்-அழிப்பேன், என்று கழல் தொழுதனன்-என்று அபயனது வீரக் கழல் பொருந்திய அடிகளை வணங்கினான், எ-று.

அவை-பண்டறி சுட்டு; கழல்-ஆகு பெயர்.

9. கடையில்-ஊழிக்காலத்தில், புடை பெயர் கடல் ஒத்து-தன் எல்லையை விட்டுப் புறம்போதரும் பெரு வெள்ளக் கடலைப் போன்று, அரசர் கலங்கும் பரிசு-வேற்றரசர் பார்த்து உள்ளங் கலங்குமாறு, கலிங்கம் புக்கு-கருணாகரத் தொண்டமானைப் பின்பற்றிச் சென்ற படைகள் கலிங்க நாட்டினுட் புகுந்து, பதிகளை-நகரங்கள் யாவையும், அடைய-முற்றுக (ஒருங்கே), அழிய-அழிந்து போகுமாறு, படர் எரி கொளுவி-பரவுகின்ற தீயை மூட்டி, சூறை கொள் பொழுதத்தே-கொள்ளையிடும் பொழுதிலே, எ-று.

ஊழி-உலக முடிவு, படர்தல்-செல்லல், ஈண்டுப் பரவுதலென்னும் பொருட்டு. பதிகள்-ஊர்களுமாம். குடிகளை நலித்துப் பொருள் பறித்தமை ஈண்டுச் சூறையெனப்பட்டது. சூறைகொண்டபின்னர்த் தீ மூட்டினரெனக் கொள்ளலும் பொருந்தும். இதற்குச் சூறைகொண்டு படரெரி கொளுவும் பொழுதத்தே யென்க.

10. படை-சோழன் படைகள், பகை யென்றே-யாம் அனந்தபத்மனுக்குப் பகையாயினோம் என்று, இனி வளைகின்றன-இப்பொழுது இந் நாட்டைச் சூழாநின்றன (முற்றுகையிடுகின்றன), மதில் இடிகின்றன-மதில்கள் இடிந் தொழிகின்றன, பதி எரிகின்றன-நகரங்கள் எரிந்தழிகின்றன, புகை எழுகின்றன-புகைப் படலங்கள் மேலோங்குகின்றன, பொழில் எல்லாம் மடிகின்றன-சோலைகள் யாவும் கருகிக் கேடடைகின்றன, குடிகெடுகின்றனம்-யாம் குடி கெட்டுப்போகின்றோம், என்றவாறு.

இனி-இப்பொழுது, குடியிருப்பெல்லாம் சூறையாடப்பட்டும் தீக்கொளுவப்பட்டும், அழிக்கப்படுகின்றமையின் குடி கெடுகின்றனம் என்றார்.

11. எமதரசே-நங்க ளரசனே! உலகுக்கு ஒரு முதல் அபயற்கு-உலகினுக்கு ஒப்பற்ற தலைவனாகிய அபயனுக்கு, திறை இடும் உரை தப்பியது-கப்பங் கட்டுவதாகக் கூறிய உடன்படிக்கை பிழைத்துவிட்டது, வரு படை-வருகின்ற சேனை, அவன் விடு படை என்று-அவ் வபயனென்னுஞ் சோழ வரசன் அனுப்பிய படையே யென்று கூறிய, எம் பல கற்பனைகளை-எம்முடைய பல உறுதி யுரைகளை, நினைவுற்றிலை-நினைத்தாயில்லை, எ-று.

உரை-ஆகுபெயர், மற்று-அசை, கூறிய என்பது சொல் லெச்சம். இனி, இச் செய்யுள் அடுத்த செய்யுளோடு முடிவதாக (குளகமாக)க் கொண்டு தப்பியது, நினைவுற்றிலை என்னும் முற்றுத் தொடர்களை இருந்தவாறே முடித்துப், படையென்று குழறியுமெனக் கொண்டு கூட்டி யுரைப்பினு மமையும்.

12. சனபதி அடியில்-அரசனாகிய அனந்த பத்ம னடிகளில், அடைய-ஒருங்கே, உரை குழறியும்-சொல் தடுமாறியும், உடல் பதறியும்-உடம்பு நடுங்கியும், அரையில் துகில் விழ-இடையிலே உடுத்திய சீலை உரிந்து விழுமாறு, ஒருவர்க் கொருவர் முன்-ஒருவ ரொருவரின் முன், முறையிட்டுப் புக விழு பொழுதத்தே-முறையிட்டுக்கொண்டு புகுந்து வீழ்ந்து வணங்கிய பொழுதிலே, எ-று.

இல் இரண்டுஞ் சாரியைகள். புக விழல்-புகுந்து விழுதல்.

13. என்று இவை உரைத்தலும்-என்று இச் சொற்களைச் சொல்லுதலும், எனக்கு எதிர் உரைக்க-எனக்கு மாறு பேசுதற்கு, இமையோர்களும் நடுங்குவர்-தேவர்களேனும் நடுங்குவார்கள், புயக் குன்று இவை-தோள்களென்னும் மலைகளாகிய இவை, செருத்தொழில் பெறுத-போர்த் தொழில் பெறுமையால், நெடு நாள் மெலிவு கொண்டபடி-

பல நாட்களாக மெலிவடைந்தமையை, கண்டிலையோ-கண்டதுமில்லையோ, எ-று.

உம்மைக ளிரண்டும் எச்சப் பொருளன. புயக் குன்று-தொகையுருவகம்.

14. பிழைக்க உரை செய்தனை-பிழை விரவுமாறு கூறினாய், எனக்கு உறுதி பிழைத்தனை-ஆதலின் எனக்கு உறுதி கூறுதலிற் பிழைத்துவிட்டாய், பேசுவது வாசி கெடவோ-பேசுவது மூச்சு அவலமாய்ப் போகவோ, முழைக்கண் வாள் இள அரி முகத்து-குகையினிடத்தே ஒளி பொருந்திய இளஞ் சிங்கத்தின் முன்னர், களிறு-யானையானது, எளிதென-இஃது இளையதாயிருக்கின்றமையால் வெல்லுதற் கிலேசானதென்று, எதிர் கிட்டி-எதிர்ப்பட்டு, முட்டி வருமோ (முட்டவருமோ) முட்டுதற்கு வருமோ, எ-று.

உறுதியர் மந்திரிகளாதலின், உறுதி யென்பது மந்திராலோசனையெனக் கொள்ளல் சாலப் பொருந்தும். வாசி கெடவோ என்பதற்கு நியாயந் தப்பியோ என் றுரைப்பினு மமையும். முட்டி, முட்டவெனத் திரிக்க. முழைக்கண் என்றமையால், தன்னுடு மலையாணுடைத் தென்பதையும், இளஞ் சிங்க மென்றதனால் படை குடி முதலியவற்றில் தான் சிறுமையுடையானென்பதையும் அனந்த பத்மன் குறித்தான் என்க.

15. என்னுடைய தோள் வலியும்-என் தோள்களின் வல்லமையையும், என்னுடைய வாள் வலியும்........, யாதும் அறியாது, மற்றெதனையும் அறியாமலே, நின்னுடைய பேதைமையினால்-உன் அறியாமையினால். பிறர் போல் உரை செய்தாய்-அன்னியர் போலக் கூறினாய், இது-இப் பகையை, நினைப்பளவில்-நினைப்பதன் முன்னரே, வெல்ல அரிதோ-வென்றிட முடியாதோ, எ-று.

நினைப்பளவில் என்றது, மிகச் சுருங்கிய காலவெல்லையைக் குறித்து நின்றது.

16. எடும் எடும் எடும் என-தொடங்குங்கள், தொட...தொ... என்று கூற, எடுத்தது-தொடங்கியதாகிய, ஓர் இகல் ஒலி-ஒப்பற்ற போரின் கண் எழுந்த ஓசையானது, கடல் ஒலி இகக்க-கடலினது ஓசையைக் கடந்தொலிக்க, விடு விடு விடு பரி கரிக் குழாம்-விடுதற் கேற்ற வி...வி... குதிரைக் கூட்டம் யானைக் கூட்டங்களை, விடும் விடும் எனும் ஒலி மிகைக்க-விடக்கடவீர்...வி... என்னும் ஓசையானது மேம்பட, எ-று.

இகத்தல்-கடத்தல், எடுத்தல்-படையெடுத்தல்.

17. செரு இடை-அப் போரிலே, வெருவர-அஞ்சுமாறு, வரிசிலை-வரியப்பட்ட வில்லை, தெறித்த-அதைத்தலா லெழுந்த, விசைபடு நாண்-வேகமுடைய அம்புகளானவை, திசை முகம்-திக்குகளாகிய முகங்களை, வெடிக்க-பிளத்தலைச் செய்ய, இளையவர்-இளமை பொருந்திய வீரர்கள்; தெழித்தது ஓர் தெழி-உரப்பியதாகிய ஒப்பற்ற அதட்டலானது, உலகுகள் செவிடு எடுக்க-உலகங்களைச் செவிடுபடும்படி செய்ய, எ-று.

தெழித்தல்-பேரிரைச்சலிட்டதட்டுதல், தெறித்தல்-தாக்கிமீளல், ஆவது வளைவு நிமிர்தல், எடுத்தல்-கொள்ளல், உலகு-ஆகுபெயர்.

18. விளைகனல்-முற்றிய நெருப்பானது, விழிகளின் மூளைக்க-வீரரின் கண்களினின்று தோற்ற, மின்னல் ஒளி-மின்னலாகிய ஒளி, கனல் இடை பிறக்க-(அக் கண்களினின் றுண்டாகிய) தீயிலே உண்டாக, வளை சிலை உரும் என இடிக்க-வளைந்த விற்கள் இடியேறெனுமாறு ஒலிக்க, வடிகணை-வடிக்கப்பட்ட அம்புகள், நெடு மழை சிறக்க-மிக்க மழைபோல் மிகுதிப்பட, எ-று.

மினல்-குறுக்கல் விகாரம், சிறத்தல்-மிகுதல்.

19. இவை மருப் பொடு மருப்பு எதிர் பொருப்பு என-இவைகள் கொம்போடு கொம்பு பொருதலைச் செய்யும் மலைகளாமென, மதக் கரி பொரும்-மதம் பொருந்திய யானைகள் போரைச் செய்யா நிற்கும், அவ்வாறு போர் செய்கையில், மருப்பினிடையே-கொம்புகளி னிடையே, நெருப்பொடு நெருப் பெதிர்-தீ யொடு தீ யெதிர்தலால். சுடர்ப்பொறி-ஒளி பொருந்திய பொறிகள், தெறித்து எழ-சிந்தி யுயர, நிழல் கொடி-நிழலைச் செய்கின்ற (எடுக்கப்பட்ட) கொடிகள், தழல் கதுவ-தீயாற் பற்றப்பட, எ-று.

20. நிழற் கொடி தழல் கதுவலில்-நிழலைச் செய்யும் அக் கொடிகள் நெருப்பாற் பற்றப்படலால், கடிது ஒளித்தவை-விரைவில் மறைந்தனவாகிய அக் கொடிகளுக்குப் பதிலாக, நினைப்பவர் நினைப்பதன் முன்னே-மனத்தினால் ஒன்றை நினைக்கத் தொடங்கினோர் அவ்வாறு நினைப்பதற்குள்ளே, அனைத்தினும் புதுக்கொடி நிரைத்தென-அனைத்திடங்களிலும் புதிய கொடிகள் நிரைக்கப்பட்டனவென்று கூறுமாறு, அழல் படு புகைக் கொடி எடுத்தன-தீயினின்றுந் தோன்றிய புகையாலாகிய கொடிகள் எடுக்கப்பட்டன, எ-று.

நினைப்பதற்குள்ளே என்றது மிக நுண்ணிய கால வெல்லையைக் குறித்தது. "நினைக்கப் படைக்கச் செய்தான்" என்னும் வழக்கும் நோக்குக. கொடி நின்ற விசும்பிடத்தே புகை மண்டிற்றெனக் கொள்க.

21. வெம் கயத்தின் மத்தகத்தின் வீழும் முத்து-கடிய யானைகளின் மத்தகங்களின் மேலே உதிர்கின்ற முத்துக்கள், வீரமா மங்கையர்க்கு-(போரிலே இறந்துபட்ட வீரர்களை மணக்கின்றவர்களாகிய) வீரசுவர்க்கத்துள்ள அழகிய மகளிர்க்கு, மங்கலப்பொரி சொரிந்தது ஒக்கும்-(அரம்பை மாதர்), சோபனப் பொரி சொரிந்ததை நிகர்ப்பனவாகும், எ-று.

போரிலே இறந்த வீரர்கள் வீரசுவர்க்கம் புகுவா ரென்றல் மரபாகலின், (அவ் வீரசுவர்க்கத்துள்ள தெய்வப் பெண்டிர்), ஆங்குற்ற வீரர்களை மணக்கும் மங்கையரை வாழ்த்துமுகத்தால் நெற்பொரி சிந்துகின்றமை உவமையாகக் கொள்ளப்பட்டது. ஆலத்தி

யெடுத்தல் முதலியன பெண்டிர் செயல்களாதலின், ஈண்டும் நெற்பொரி சொரிவார் பெண்டிரெனக் கொள்ளப்பட்டது.

22. கவந்தம் ஆட-தலைக்குறைப்பிணம் எழுந்தாட, தம் முன்பு-அவற்றின் எதிரே, களிப்பொடு ஆடும்பேயினம்-இன்பத்தோ டாடுகின்ற பேய்க் கூட்டங்களானவை, நிவந்த ஆடல் ஆட்டுவிக்கும்-மேம்பட்ட ஆடலை யாட்டுவிக்கும், நித்தகாரர் ஒக்கும்-கூத்தாட்டிகளை நிகர்க்கும், என்றவாறு.

> கவந்தத்தின் வரலாறு "தோளும் தலையும் துணிந்து வேறாகிய சிலைத் தோள் மறவர் உடற்பொறை அடுக்கத்து எறி பிணம் இடறிய குறை யுடற் கவந்தம், பறைக்கண் பேய் மகள் பாணிக்கு ஆட" எனச் சிலப்பதிகாரத்துக் கூறப்பட்டது. இதற்குத் துணிக்கப்பட்டுத் தோளுந் தலையும் வேறாகிய-வில்லைத் தாங்கிய தோளினையுடைய வீரர்தம்-உடற் பாரங்களி னடுக்கத்தே எறியப்பட்ட பிணங்களை இடறிக்கொண் டெழுந்த குறை யுடலை யுடைய கவந்தமானது, பறையாகிய முரசின் கண் போன்ற கண்களை யுடைய பேய்மகள் இடுந் தாளத்திற் கேற்பக் கூத்தாட என்று பொருள் செய்துகொள்க. "அநேக மாயிரம் பேர்படக் கவந்த மொன்றாடும்" என்பது பாரதம். பொறை-பாரம், அடுக்கம்-ஒன்றின்மே லொன்றாய் அடுக்கிக் கிடப்பது. நிர்த்தம், நித்த மென்றாயது.

23. வாரணக்கை-யானைகளின் துதிக்கைகளை, வாளில் வெட்டி-வாளால் வெட்டி, தோளில் இட்ட மைந்தர்-(அகக் களிப்பினால்)தோளில் தாங்கிய வீரர்கள், தோளில் இட்டு நீர் விடும் துருத்தியாளர் ஒப்பர்-தோளின் மேல் வைத்து நீரை விசிறுகின்ற நீர்த் துருத்திக்காரர்களைப் போல்பவரானார், எ-று.

இல்-வேற்றுமை யுருபு மயக்கம்.

24. நேர் முனையில்-எதிர்ந்த போரில், பிடித்த பகழிகள்-தாங்கிய அம்புகள் யாவும், நேர் எழ-வரிசையாக எழுதலினால் (அம்பொன்றுந் தம் அம்புறை தூணியில் இல்லையாய்ப் போக, வில் மாத்திரமுடையராய் நின்றோர்) வில் சுழற்றும் அளவினில்-வில்லைச் சுழற்றுகின்ற அளவில், மார்பு இடையில் குளித்த பகழியை-பகைவரால் எய்யப்பட்டுத் தம் மார்புகளிற் புதைந்திருக்கும் அம்புகளை (க் கண்டு அவற்றைப் பிடுங்கி), வார் சிலையில் தொடுத்து விடுவர்-நீண்ட விற்களில் தொடுத்து விடுவாரானார், எ-று.

> "சின மிகுதியால் வேலிடை போந்த தறிகில னென்பதூஉம், பின்னும் போர்மேல் விருப்பின னென்பதூஉம் பெறப்பட்டன" என்னும் பரிமேலழகருரை ஈண்டு நோக்கற்பாலது. நேர்தல்-எதிர்தல், நேர்-வரிசை, வார்-நீண்ட.

25. ஓட ஒருவர் ஒருவரின் முந்தினர்-புறங்காட்டி யோடுதலில் ஒருவர்க் கொருவர் முற்பட்டவர்களாகிய கலிங்க வீரர், உடலின் நிழ

லினை-தம்மைப் பிரியாதே உடன் செல்கின்ற தம் உடம்பின் நிழலைக் கண்டு, அருவர் அருவர் எனு இறைஞ்சினர்-அரவர் அரவர் (தமிழர், தமிழர்) என்று வணங்கியவர்களாய், அபயம் அபயம் எனு நடுங்கி-நமக்கு யாம் அடைக்கலம் அடைக்கலம் என்று நடுங்கி, ஓட அஞ்சினர்-மேல் ஓடிப் போதற்குப் பயந்து நின்றார்கள், எ-று.

முந்தினர்-வினையா லணையும் பெயர், இறைஞ்சினர்-முற்றெச்சம், அஞ்சினர்-முற்று. இனி, தம் நிழல் ஓடக் கண்டு, சோழ வீரருடைய உருவங்களென எண்ணி அஞ்சினராய், அரவரே! அரவரே! நமக்கு அபயம் அபயம் என நடுங்கி இறைஞ்சினர் என முடிப்பினும் பொருந்தும். இதற்கு, அஞ்சினர் என்பதை முற்றெச்சமாகவும் இறைஞ்சினர் என்பதை முற்றாகவும் கொள்க அருவர்-அண்மை விளி.

26. ஆங்கு-அப் போரில், வரைக்கலிங்கம் தமைச் சேர-மலைகளையுடைய எழு கலிங்கத்தையுஞ் சேர விரும்பி, அரைக் கலிங்கம் உரிப்புண்ட கலிங்கர்-இடுப்பிலிருந்த சீலை யுரியப்பெற்ற கலிங்க வீரர், மாசை ஏற்றி-அச் சீலைகளுக்கு நிறத்தை யூட்டி, வன் தூறு பறித்து-வலிய பற்றைபோல் வளர்ந்த தம் தலைமயிரை அரிந்து, மயிர்க் குறையும் வாங்கி-குறைமயிரையும் வழித்து முண்டிதராகி, எல்லாம் அமணர் எனப் பிழைத்தாரும் அநேகர்-எல்லாத் தன்மையாலும் யாம் அமணரேம் எனத் தப்பியுய்ந்தாரும் பலராவர், எ-று.

உம்-எச்சவும்மை, கலிங்க ரெல்லாம் பிழைத்தாரும் அநேகர் என்பது பொருட் பொருத்தமுறத் தழுவாமையால், எல்லாம் என்பது பிரித் தெடுத்துப் பொருள் கூறப்பட்டது.

27. ஆங்கே அநேகர்-அங்குப் பலர், வெஞ்சிலை நாண் முந் நூலாக மடித்திட்டு-கொடிய வில்லின் நாணாகிய கயிற்றை முப்புரி நூலாக மடித்து அணிந்துகொண்டு, வேடத்தால் குறையாது-பிராமண வேடத்தில் சிறிதும் குறைவில்லாதவர்களாகி, கங்கை ஆடப் போந்து விதியால் அகப்பட்டோம்-கங்கைக்குத் தீர்த்தமாடுதற்காக வந்து எம்மூழினாலே இப் போர் முகத்தில் அகப்பட்டுக்கொண்டோம், காத்து ஓம்புக என்று-பாதுகாத்தருளுக என்று, அபிதாவிட்டு உயிர் பிழைத்தார்-அபயமிட்டு உயிர் தப்பினார்கள், எ-று.

வேண்டுதற் பொருளில் வந்த ஓம்புக என்னும் வியங்கோள் முற்று, ஓம்பு எனக் கடைக் குறைந்து நின்றது.

28. ஆங்கே அநேகர்-அங்குப் பலர், குறியாக- (புத்தர்களுக்குரிய) அடையாளமாக, குருதி நீர்க் கோடி ஆடை கொண்டு உடுத்துப் போர்த்து-இரத்தம் தோய்ந்த புதிய சீலைகளை யெடுத்து அரையில் உடுத்துக் கொண்டும் மேலே போர்த்துக்கொண்டும், குஞ்சி முண்டித்து-மயிரை வழித்து முண்டிதம் செய்து கொண்டும், உடை கண்டால் சாக்கியரை அறியீரோ என்று-உடையைப் பார்த்த மாத்திரத்தில் பௌத்தர்களைத் தெரிந்துகொள்ளமாட்டீர்களா என்று, அப்பிரபண்ணிய மிடுவார்-அபயமிடுவாராயினர்," எ-று.

கோடி யாடை—போருக்கென்றே புதிதாகத் தரித்துக் கொண்டதும் நீரில் தலைவக்கப்பெறாததுமான ஆடை.

29. ஆங்கே..., கிலேக் கலிங்கர்—முன்னர் வில்லே யேந்தியவர்களாய் (இது போது தோல்வியடைந்து) நின்ற கலிங்கர்களுள்ளே, தங்கள் ஆனே மணியினைத் தாளம் பிடித்துப் பாடி—தங்கள் மடிந்துவீழ்ந்த யானைகளின் கழுத்திற் கட்டப்பட்ட மணிகளை எடுத்துத் தாளமாகப் பிடித்து அடித்துப் பாடிக்கொண்டு, தெலுங்கரேம்—தெலுங்கர்களாகிய யாங்கள், சேனே மடி களங் கண்டு திகைத்து நின்றேம் என்று—சேனைகள் அழிந்த (இரத்த வெள்ளம் நிரம்பிய) போர்க்களத்தைக் கண்டு மயங்கி நிற்கின்றேம் எனக் கூறி, அநேகர் அடிப்பாணர் எனப் பிழைத்தார்—பலர், அடிமைகளாகிய பாணர்கள் தாமெனத் தம்மைக் காட்டி உயிர் தப்பினுர்கள், எ—று.

செவ்வனே தமிழ் பேசுகின்ருரில்லே, ஆதலின் கலிங்கப் படையைச் சேர்ந்தா ரிவரென்று ஐயங்கொள்வாரெனக்கருதி, யாம் தெலுங்கப்பாணர்கள் எனக் கூறினர். " என்று, என " என்னும் இரண்டிடைச் சொற்களேயுங் கருதி இவ்வாறு பிரித்துப் பொருள்கொள்ளப்பட்டது.

30. ஆங்கு..., இவர்கள் மேல் இனி யொருவர் பிழைத்தாரில்லே—சமணரென்றும் பிராமணரென்றும் பௌத்தரென்றும் பாணரென்றுங் காட்டித் தப்பிக்கொண்ட இவர்களே விட வேறெவரும் உயிர்கொண்டு தப்பினுரில்லே, சூரர்—சோழவீர ராயினுர், எழு கலிங்கத்து ஓவியர்கள் சுவர்கள் மேல் எழுதி வைத்த உடல்அன்றி—ஏழு பிரிவினேயுடைய கலிங்க தேயத்துச் சித்திரகாரர்கள், அந் நாட்டிலுள்ள பல சுவர்களிலேயும் தீட்டிவிட்ட உடம்புகளின் வடிவங்களே எஞ்சவிட்டனரேயன்றி, உடல்கள் எல்லாம் தொட்டு ஈர்த்துப் பிடித்து அறுத்தார்—காணப்பட்ட உயிருடைய உருவங்களாகிய உடம்புகளேயெல்லாம் தொட்டும் இழுத்தும் பிடித்தும் அறுத் தெறிந்தார்கள், எ—று.

31. வண்டையர் கோன் தொண்டைமான்—வண்டையர் கோனெனப்படும் கருணுகரத் தொண்டைமான் என்போன், கடற் கலிங்கம் எறிந்து—கட லலே வீசும் கலிங்க தேயத்தை அழித்து, சயத் தம்பம் நாட்டி—வெற்றிக் கறிகுறியான கொடிமரத்தை அக் கலிங்க நாட்டில் நிறுத்தி, கட கரியும் வயமாவும் தனமும் கொண்டு—வெற்றிப் பொருள்களாக, மதம் பொருந்திய யானைகளும் வெற்றி பொருந்திய குதிரைகளும் பொன்னும் மணியு முதலிய திரவியங்களுந் திரட்டி யுடன்கொண்டு பெயர்ந்து, சுடர்க் கதிர் வாள் அபயன் அருளினேடும் அடி சூடினன்—விளங்கும் கிரணங்களேயுடைய வாளே யேந்தியவனுகிய அபயகுலோத்துங்கனுடைய அருளேப் பெற்றவனுகி, அவன் அடியிணைகளேத் தன் தலேமீது சூடினன், எ—று.

—:o:—

# VI ஏரெழுபது

## 1 புவியெழுபது

1. பெற்ற தாயரும் பெறுவித்த தந்தையும்-......, சேயும்-பிள்ளைகளும், மற்ற யாவரும்-ஏனைய எல்லாரும், மக்கள் என்று ஒரு பெயர் வகிப்பர்-பொதுப்பட மக்களென்கிற ஒரே பெயரைத் தாங்கி நிற்கின்றனர், சொற்ற மக்களுக்கு-மேலே கூறிய மக்களுக்கு, ஒரு திருத் தாயினைச் சொல்லின்-ஒப்பற்ற சிறந்த தாயார் யாராகுமென்பதனைக் கூறப் புகுந்தால், உற்ற பூ மகள் அன்றியும் வேறு எவர் உண்டு-பொருந்திய பூமாதேவியே யன்றி வேறு யார்தான் உளர், எ-று.

ஆல்-அசை.

2. கனம் தனால்-மேகத்தினாலே, குளிர் நிழல் செய்து-குளிர்ந்த நிழலைச் செய்தும், பனித் துளி கனால-பனித்துளிகள் நிறையச் செய்தும், மனந்தனால் நினைப்பரும் பெரும் கடலையும் வளைந்தும்-மனத்தால் நினைக்க முடியாத ஆழமும் பரப்புமுடைய சமுத்திரத்தால் அலங்கரிக்கப் பெற்றும், இனம்தனால் உயர் நதிகள் உத்தரியமென்று இயைத்தும்-குலத்திற் சிறந்த யாறுகளைத் தன் மேலாடையாகத் தரித்தும், அனந்தன் ஆயிரம் தலைமிசை அமர்பவள் அவள்-ஆதிசேடனுடைய ஆயிரந் தலைகளின் மேலும் வீற்றிருப்பவள் அப் பூமாதேவியே, எ-று.

> வற்றுதல் பெருக்கெடுத் தோடும் நதிகளை இனந் தனு லுயர் நதிகளென்றார். "குல நதிகள் குல கிரிக" ளென ஆன்றோர் கூற்றும் நோக்குக.

3. இந்திரன் முதல் இமையவர் செல்வமும் அமுதம்-தெய்வேந்திரன் முதலிய தேவர்களுடைய செல்வமாகிய சங்க நிதி பதும நிதி, காமதேனு, கற்பக தரு என்பனவும் சாவா மருந்தாகிய அமுதமும், கந்தரம் கறுத்தவன் சடைக்கு அணிந்ததும்-நஞ்சை யுண்டமையாற் கழுத்துக் கறுத்தவராகிய சிவபிரானார் தனது சடாபாரத்தின் கண்ணே தரித்தருளிய பிறைச் சந்திரனும், கறை தீர் மந்திரம் புகல் பரஞ்சுடர் மார்பு ஒளிர்வதும்-குற்றமில்லாத திருமந்திரமாகிய கீதையைச் சொல்லியருளிய மேலான ஒளிப் பொருளாகிய விஷ்ணுமூர்த்தியின் மார்பிலே விளங்கித் தோன்றும் கவுத்துவ மணியுமாகிய இவற்றின், அந்தரம் தெரிவுறின்-பெருமையை ஆராயப் புகுந்தால், இவள் துகில் முடித்தனவாம்-இப் பூமாதேவியானவள், பாற்கடலாகிய தன் ஆடையிலே முடித்தவைகளாகும், எ-று.

திருமாலின் மார்பிற் குடியிருக்கும் இலக்குமியும் பாற்கடலிலே யே தோற்றினள்.

4. பார் மகட்குள பசி யிருள் கடி பான்மைக் கதிர்-பூமாதேவி யிடத்தே பொருந்தியுள்ள பசிப் பிணியாகிய இருளைப் போக்கடிக்குந் தன்மையையுடைய கிரணமானது, தாரகைக்கு உள கதிர்களுக்கு இலை-நட்சத்திரக் கூட்டங்களி னிடத்துள்ள கிரணங்களுக்குமில்லை, சசியன் சேரம் விட்டு ஒளிர் கதிர்களுக்கு இலை-சந்திரனின் ஒரு நாளைக் கொரு நாள் ஏற்றமுந் தாழ்வுமாகப் பிரகாசிக்கும் கிரணங்களுக்கு மில்லை, ஒளி நிறைந்த சூரியற்கு உள கதிர்களுக்கு இலை-மிக்க ஒளியையுடைய சூரிய னுக்குள்ள கிரணங்களுக்குமில்லை, சுடர்க்கு இலை-ஏனைய ஒளி தரும் பொருள்கட்கு மில்லை, எ-று.

5. தலைமச் சேய் என்று எண்ணிலர்-தம்மைப் (பூமாதேவியின்) பிள்ளைகளென்று கருதமாட்டார், தம காவலில் செறி மண்-தங்கள் காவ லினுள்ளே செறிந்திருக்கின்ற புவியானது, தா யென் றெண்ணிலர்-, தராபதி தாம் எனும் செருக்கின் மேய வேந்தரை-புவியின் தலைவர்கள் தாமே யென்கிற அகங்காரத்தோடு பொருந்திய அரசரை, மூ எழு தலை முறை வேர்கட்கு-இருபத்தொரு தலைமுறை வரையும் வேரோடு பிடுங்கி விட்டு, ஆய காவலை மறையவர்க்கு அளித்தனன் அமலன்-அப்பூமிக் குரிய காவலை வேதியர்க்குக் கொடுத்தான் இறைவன், எ-று.

6. இயவுள்-ஸ்ரீ ராமபிரானாகிய தேவன், பழுத்த பேர் அருள் பார் மகள் பயந்த பல் உயிருள்-முற்றிய பெரிய அருளை யுடையளாகிய பூமி தேவி பெற்றெடுத்த பல உயிர்களுக்குள்ளேயும், ஒழுக்கம் அல்லது விழுப்பம் வேறு இல்லென உணர்த்தி-நல்லொழுக்கமேயன்றி மேம்பாடு தருவது பிறிதில்லை யென்பதை விளக்கி, அழுக்கு வேடுவர்-தூய்மை யற்ற வேடர்களாகிய குகன் முதலியோர், குரக்கினம்-சுக்கிரீவன் அனு மன் முதலிய வானரர், அரக்கர் என்பவரோடு-விபீடணன் முதலிய இராட்சதர் என்பவர்களோடு, இழுக்கில்லாது உடன் பிறப்பெனக் கலந் தனன்-தாழ்வு கருதாமலே (கூடப் பிறந்த) சகோதரர் எனக் கலந் துற வாடினன், எ-று.

7. இரப்பர் இன்மையின் ஈபவர் இல்லையாம் விசும்பு-இரப்பவர்க ளில்லாமையால் ஈவோரும் இல்லாமையையுடைய வானுலகத்துள்ளார் தம் இயற்கையானது, மரத்தின் பாவை செல்வதும் வருவதும் அனைத்து எனல் போல்-மரத்தாற் செய்யப்பட்ட உயிரற்ற பாவையானது போத லயும் மீளுதலையும் போன்றதாகும் என்பது போல, மகித்தாய்-பூமி யாகிய அன்னை, தரத்தி னோர் பழிப்புக்கு இலக்கு ஆகிலள்-மேலோர் கூறும் பழிச் சொல்லுக்கு இலக்காக மாட்டாள், தான வரத்தினால் புகழ் மணி முடி புனைபவள்-கொடையுடைமை யென்னும் வரத்தினாலே புகழப்படுகின்ற இரத்தினங்கள் அழுத்தப் பெற்ற முடியை யணிந் திருப் பவளாயினாள், எ-று.

வானுலகத்தே இரப்பாரு மீவாரு மின்மையால், அன்பும் அருளும் ஒருவர்க் கொருவர் இன்றியமையாமையும் விளங்குதற் கேது வில்லையாம் என்றபடி. "இரப்பாரை யில்லாயி னீர்ங்கண் மா ஞாலம் மரப் பாவை சென்றுவந்தற்று" என்பதும், "ஈவாருங் கொள்வாரு மில்லாதவானத்து வாழ்வாரே வன்கணவர்" என்பதும் நோக்கற்பாலன.

8. தரைமகள்-பூமி தேவியானவள், எளியரைக் காப்பது வேண்டி வீரம் தந்தனள்-வறியோர், திக்கற்றோர் என்போரைக் காப்பாற்றுதலை விரும்பி வலிமையை யளித்தாள், இடுக்கணுக்கு அழிவின்மை தெரியத் திரம் தந்தனள்-துன்பம் வந்த காலத்து மனந் தளராதிருத்தலை யறிந்து கொள்ளும்பொருட்டுத் துணிவைத் தந்தாள், பயனுற நெறியினில் முயல நேரம் தந்தனள்-பயனை யடைதற்காக நல்ல வழியிலே முயற்சிசெய்யு மாறு நேரத்தை ஈந்தாள், குலம் மிகத் தழையத் தாரம் தந்தனள்-மக்கட் கூட்டம் மிகவும் விருத்தியாதலை விரும்பி மனைவியை யளித்தாள், என்றவாறு.

எளிமை-இரங்கப்படத் தக்க தன்மை, தனிமையுமாம். தாரம்-மனைவியே யன்றி, விவாகமுமாம்.

9. நாவாய் நடுக் கடல் புகுந்து-கப்பலானது நடுக் கடலிலே செல்லா நின்று, இருள் படு காலையும் அடுத்தது இத் திசையெனத் தெளிவுறவும்-இருள் நிரம்பிய இராக்காலத்திலுங் கூட யான் செல்வது இன்ன திசையிற்றான் என்று தெளிந்து கொள்ளவும், ஆகாயத்து எடுத்து இயக்கிய பல்வகை யானமும்-வான் வெளியில் எடுத்தியக்கப்படும் பலவகைப் பட்ட விமானங்களும், இதுதான் மடுத்த திக்கெனத் தெரியவும் புரிபவள் மகித்தாய்-இதுதான் மீண்ட திசையென்று தெரிந்துகொள்ளவுஞ் செய்பவள், பூமியாகிய தாயாகும், எ-று.

10. பிள்ளை பெற்ற தாய் திரு மார்பிடை மிதிக்குறில்-பிள்ளையானது, பெற்றெடுத்த தாயாரின் சிறந்த நெஞ்சிலே மிதிக்குமாயின், குற்றம் ஆய்கிலள்-அதனைக் குற்றமெனத் தெளியாள், குதுகலிப்பு உறவள்-அகக் களிப்புக் கொள்வாள், அக் குணம் போல்-அத் தன்மை போல, சுற்றமான பல் சீவரும் அடிகொடு துவைக்க-உறவுடைய பல உயிர்க் கூட்டங்களும் தம் பாதங்களினால் உழக்க, நற்றமாக உள் மகிழ்ந்து-நன்றுமென மனம் பூரித்து, இவர்த் தாங்குவள் நம் மோய்-இவ்வுயிர்க் கூட்டத்தைச் சுமந்து நிற்பள் பூமியாகிய எம் தாய், எ-று.

அமிழ்தனைய பாலுண்ணற் களிக்கு மிடமாதலின் திரு மார்பு என்றார்.

## 2 ஏரெழுபது

1. குடை ஆளும் முடி வேந்தர்-குடை நீழலிலிருந்து அரசுபுரியும் முடை யுடை யரசர், கொலை யானை தேர் புரவி ஆள் படையும் இவை நான்கும்-கொல்லுந் தொழிலையுடைய யானையுந் தேரும் குதிரையும் காலாட் படையுமாகிய இவை நான்கும், படைத்து உடையராலென்-பெற்றுடையவராயினு மென், மடை வாளை வரும் பொன்னி வள நாடர் தங்கள்-நீரோடையினின்றும் வாளைமீன்கள் வந்து சேர்கின்ற காவிரி யாற்றினல் வளப்பம் மிகுந்து விளங்கும் நாட்டினை யுடையராம் வேளாளரின்; அலப்படை வாளைக் கொண்டன்றிப் பகை யறுக்கமாட்டார்-கலப்பைப் படையாகிய வாளைக் கொண்டல்லாமல் பகைவரை அழிக்க மாட்டார், எ-று.

மடை-நீர் பாயும் வழி.

2. நான் மறையோர்கள் வளர்க்கின்ற வேள்விகளும்-நான்கு வேதங்களையும் ஓதி யுணர்ந்த பிராமணர்கள் வளர்க்கின்ற வேள்விகளும், ஆழியால் உலகு அளிக்கும் அடல் வேந்தர் பெருந் திருவும்-ஆணையாகிய சக்கரத்தினலே உலகத்தைக் காப்பாற்றுகின்ற வலி பொருந்திய அரசருடைய பெரிய செல்வமும், ஊழி பெயரினும் பெயரா-யுகம் பிறழ்ந்தாலும் பிறழாத, உரையுடைய பெருக்காளர் மேழியால் விளைவதலால்-சொல்லுறுதி யுடையவர்களாகிய வேளாளரின் கலப்பையினல் உண்டாவதன்றி, வேறொன்றால் விளையாவே-மற்றெதனலும் உண்டாக மாட்டா, எ-று.

வாழி-அசை, அம்மேழி வாழ்க எனக் கொள்ளினுமாம். ஊழி-உலகழியுங் காலம். பெருக்கு-வெள்ளம். பழையனூர் நீலிகதையை இச் செய்யுள் நினைவுறுத்துகின்றது.

3. உரை ஏற்ற செம்கதிரோன்-யாவராலும் போற்றப்படும் புகழ்மொழி நிரம்பிய சிவந்த கிரணங்களையுடைய சூரியனது, ஒளி நெடும் தேர் பூண்ட நுகம்-ஒளி பொருந்திய நெடிய தேரிற் பூட்டப்பட்ட நுகமானது, திரை ஏற்ற கடல் உலகில் செறி இருளை மாற்றுவது-திரையையுடைய கடலாற் சூழப்பட்ட உலகிற் செறிந்துள்ள இருளை நீக்கும் பான்மையது, காராளர் உழும் நுகம்-வேளாளர் உழுகின்ற கலப்பையிற் பூட்டப்பட்ட நுகமானது, விரை ஏற்ற இரு நிலத்தோர்-வித்துக்களை முளைக்குமாறு ஏற்று நிற்கின்ற பெரிய பூமியின்கண் ணுள்ள மாந்தர், வெறுமை யொடு வீழாமே கரை யேற்றும் நுகமன்றோ-வறுமையாகிய பிணிக் கடலுள் வீழ்ந் துழலாமல் செல்வ மென்னுங் கரையிலே சேர்த்துவிடுகின்ற நுகமல்லவோ, எ-று.

விரை-வாசனையுமாம்.

4. தடுத்த நெடுவரையாலும்-( போவார் போக்கைத் தடுத்துக் ) குறுக்கிட்டுக் கிடக்கும் நீண்ட மலையாலும், தட வரைகள் எட்டாலும்-விசாலித்த மலைக ளெட்டினலும், உடுத்த திரைக் கடலாலும்-ஆடை

யாக உடுக்கப்பட்ட திரையை யுடைய கடலாலும், உலகின் நிலை வலி யாமோ-பூமியினது நிலைபேறு உறுதியுடையதாமோ?, புகழ் எடுத்த பெருக்காளர்-புகழைத் தாங்கிய வேளாளரது, எழும் நுகத்தோடு இணைப்பகடு தொடுத்த தொடை நெகிழாதேல்-எடுக்கப்பட்ட நுகத் தோடு இரண் டெருதுகள் தொடுக்கப்பெற்ற தொடர்ச்சியானது பிரி யாதிருக்குமாயின், உலகு தொடை நெகிழாது-உலகத்திலுள்ள உயிர்க ளின் தொடர்ச்சியானது விட்டு நீங்காது, எ-று.

உலகு தொடை நெகிழாமை-வாழையடி வாழை யெனத் தொடர்ந்து வரும் முறைமை மாறாமை. வரைக ளெட்டாவன-மாலியவான், கந்தமாதனம், நிசதம், ஏம கூடம், இமம், நீலம், சுவேதம், சிருங்கம் என்பன. இணை-சோடு. தடுத்த நெடுவரையென்றது மேருமலையை யெனினும் பொருந்தும்.

5. வேத நூல் முதலாக விளங்குகின்ற கலை அனைத்தும்-வேதம் முதலாக உலகத்தே விளங்குகின்ற கல்வியின் பகுதிகள் யாவையும், ஓதுவார் எல்லாரும் உழுவார் தம் தலைக் கடைக்கே-கற்போர் யாவரும் உழவு தொழிலாளரின் தலை வாயிலுக்கே உணவுப் பொருள் வேண்டிச் செல்லற்குரியர், கோதை வேல் மன்னவர் தம் குடை வளமும் கொழு வளமே-மாலையையும் வேலையுமுடைய அரசருடைய (பகையும் பிணியும் பசியுமின்றிக் குடிகளைக் காத்தற் கறிகுறியாக எடுக்கப்பட்ட) குடையின் மாட்சி தானும் கலப்பை நுனியி லிடப்பட்ட இரும்பாகிய கொழுவினு லுண்டான மாட்சியே, ஆதலால்......, இவர் பெருமை யார் உரைக்க வல்லார்-இவ் வுழவரின் பெருமையை யார் தாம் எடுத்துச் சொல்ல வல்லவர்கள், எ-று.

தலைக்கடை-முதல் வாயில், " நீரின்றமையா யாக்கைக் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோ " ராதலின், " எல்லாரும் உழுவார் தந் தலைக் கடைக்கே " என்றார்.

6. வெம் கோபக் கலி கடந்த வேளாளர்-கொடிய சினம் பொருந்திய வறுமையை வென்றவரான வேளாளர்கள், விளை வயலுள்-விளைவைச் செய்கின்ற (பயிர் செய்கின்ற) வயலினுள், பைங்கோல முடி திருத்த-பசுமையான அழகிய தலை(கொழுமையான நெல்மணி நிறைந்து முற்றிச்) செம்மை பெறுதலால், பார் வேந்தர் முடி திருந்தும்-பூமியை யாள்கின்ற அரசரின் கிரீடங்கள் செம்மைபெற்று விளங்கும், பொங்கு ஓதைக் கடல் தானைப் போர் வேந்தர்-கொதித்துக் கிளர்ந் தெழுகின்ற பேரொலியையுடைய கடல்போலும் சேனையையும் போர்த் தொழிலையுமுடைய அரசரானோர், நடத்து பெரும் செங்கோலை நடத்துங்கோல்-நடத்துகின்ற பெரிய நீதியின் முறைமையினை நடைபெறுமாறு செய்கின்ற கோலாயிருப்பது, ஏர் அடிக்கும் சிறு கோலே-உழுமாட்டையடிக்கின்ற தாற்றுக்கோலேயாம், எ-று.

தன்னை யடைந்தாரை இரக்கமின்றி வாட்டுதலின், வெங்கோபக் கலி யென்றார். கோப மென்பதற்கு வெறுப் பெனப் பொருள்

கொண்டு வெறுக்கப்படத்தக்க வறுமை யென்று கொள்ளினும் பொருந்தும். செவ்விய கோல் போறலிற் செங்கோ லெனப்பட்டது என்றும், கோலினாகிய ஏமத்தைக் கோலென்று கூறினார் என்றுங் கூறினர் பரிமேலழகியார். கடத்தல்-வெல்லல், வினை-வினைத்தொகை, ஏகாரம்-தேற்றம், ஏர்-உழவுமாடு.

7. வானம் மழை பொழிந்தாலும் வளம் படுவ தெவராலே-வானமானது மழையைச் சொரிந்தாலும் உலகத்தார் மாட்சியடைவது யாவராலே? ஞான மறையவர் வேள்வி நலம் பெறுவது எவராலே-அறிவால் மேம்பட்ட வேதியர்கள் வளர்க்கின்ற யாகம் சிறப்படைவது யாவராலே? சேனை கொடு பொரு மன்னர் செருக்களத்தில்-சேனைகொண்டு சண்டை செய்கின்ற அரசர் அணியும் போர்க்களத்தின் கண், செகுத்த மத யானை வலி எவராலே-பகைவரை யழிக்கின்ற மதம்பொருந்திய யானையின் வல்லமை நிலைபெறுவது யாவராலே, இவர் எருதின் வலியாலே-இவ் வேளாளரின் உழவெருத்தின் வல்லமையினாலேயே, என்றவாறு.

மன்னராயினார், செருக் களத்தின்கண் அழிக்கின்ற யானையெனக் கொள்ளினும் பொருந்தும். அவ்வாறு கூறின், யானையது வலிமைக் கிழிவுண்டாயிற்றாமென்க. எவராலே எனும் உயர்திணைப் பாற்பட்ட வினா, எருத்தின் வலியாலே என அஃறிணை விடை கொண்டது சிறப்பு நோக்கி. வானம் ஆகுபெயராய் மேகத்தை யுணர்த்திற்று.

8. கண் நுதலோன் தனது திருக்கண்டத்தில் படிந்த கறை-நெற்றிக் கண்ணை யுடையவராகிய சிவபிரானது சிறந்த கழுத்திலே செறிந்திருக்கின்ற நஞ்சாகிய கறுப்பு, விண்ணவரை அமுது ஊட்டி விளங்குகின்ற கறை யென்பர்-தேவர்களை அமுதம் உண்ணுமாறு செய்து விளங்குங் களங்கமென்று சொல்லுவார்கள், மண்ணவரை அமுது ஊட்டி-பூமியிலுள்ளாரைச் சோறாகிய அமுதம் உண்ணுமாறு செய்து, வான் உலகம் காப்பதுவும்-வானுலகத்துள்ளவர்களாகிய தேவர்களை அவியுணவு பூசனை முதலியவற்றைக் கொடுக்கச் செய்து காப்பாற்றுவதும், எண்ணரும் சீர்ப் பெருக்காளர் எருது சுவல் இடும் கறையே-அளவிடற்கரிய சிறப்பினரான வேளாளருடைய உழவெருத்தினது தோள்மீது இடப்பட்ட களங்கமேயாம், எ-று.

எருது சுவலிடுகறை-நுகத்தடி கழுத்திற் பலகா லழுத்தப்பட்டதனாலுண்டான அடையாளம்.

9. கார் நடக்கும் படி நடக்குங் காராளர் தம்முடைய-மழைபெய்கின்ற முறைமையை யறிந்து, அதற் கேற்பத் தந் தொழிலைச் செய்கின்ற வேளாளருடைய, ஏர் நடக்குமெனில்-கலப்பையானது உழுதலைச்செய்யுமாயின், புகழ் சால் இயல் இசை நாடகம் நடக்கும்-புகழ் நிரம்பிய இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் குறைபாடின்றி இயங்கிக்

கொண்டிருக்கும், சீர் நடக்கும்-உலகில் செல்வமும் செறிந்து விளங்கும், திறல் நடக்கும்-அரசர்க்கு வல்லமையும் நிலைத்து நிற்கும், திரு அறத்தின் செயல் நடக்கும்-மேம்பட்ட தருமச் செயலாகிய கொடையும் மலிந்து விளங்கும், பார் நடக்கும்-உலகத்துள்ளார் பகையும் பிணியும் பசியுமின்றி நல் வழியிலே சென்றுகொண்டிருப்பர், படை நடக்கும்-மன்னர் சேனைகள் உண்டு கொழுக்கின்றமையால் செருக்குற்றுப் போரைச் செய்ய முற்பட்டு நிற்கும், பசி நடக்க மாட்டாது-உலகத்திலே பசியென்பது எக்காலத்தும் தலைகாட்டமாட்டாது, எ-று.

காராளர் என்பதன் கருத்தை விளக்கக் கருதிக் "கார் நடக்கும்படி நடக்கும்" எனச் சேர்த்துக் கூறினர்.

10. உழவர் உழும் உழவாலே-வேளாளர் உழுகின்ற உழவுதொழிலாலே, அலகு இல்லா மறை விளங்கும்-குற்றமற்ற வேதமானது விளங்கும், அந்தணர் ஆகுதி விளங்கும்-பிராமணர் செய்கின்ற அக்கினி காரியம் விளங்கும், பல கலையாம் தொகை விளங்கும்-பல்வேறு வகைப்பட்ட கல்வியின் பகுதிகள் யாவும் விளக்கமடையும், பாவலர் தம் பா விளங்கும்-பாவியற்றுதலில் வல்லவரான புலமையாளருடைய பாக்கள் சிறக்கும், மலர் குலாம் திரு விளங்கும்-(மக்கள் செழிப்புடையராகத்) தாமரைப்பூவிற் பொலிந்து தோற்றும் இலக்குமி சிறப்புறுவாள், மழைவிளங்கும்-மழை மாறுது பெய்யும், மனு விளங்கும்-மனுவின் நீதி விளக்கமடையும், உலகெலாம் ஒளி விளங்கும்-உலகெங்கணும் (கொடைச்சிறப்புடைமையால்) புகழ் விளங்கித் தோன்றும், எ-று.

---:O:---

# VII வருணனைக் கவிகள்

1. காய் மாண்ட தெங்கின்-காய்களின் குலைகளினுல் மாட்சிமையடைந்த தென்னையினது, பழம் வீழ-நெற்றுக்கள் உதிர்ந்து வீழுதலாலே, கமுகின் நெற்றி பூமாண்ட தீ தேன்தொடை-கமுகினுடைய நுனியிலே பொலிவுமாட்சிமைப்பட்ட தேன் போல இனிய நீரையுடைய தாற்றை, கீறி-பிளந்து, வருக்கை போழ்ந்து-பலாப்பழத்தைக் குடைந்து, தேமாங்கனி சிதறி-மாவின் இனிய கனிகளைச் சிதறி, வாழை பழங்கள் சிந்தும்-வாழையது பழங்களைச் சிந்தப் பெறும், இசையால் திசைபோய-திக்கெல்லாம் சூழப்பெற்ற பரவிய புகழையுடைய, ஏமாங்கதம் என்று உண்டு-ஏமாங்கதம் என்று சொல்லப்பட்ட ஓர் நாடுஉண்டு, எ-று.

ஏ-அசைநிலை.

2. வீரர்-ராமலட்சுமணர்கள், புவியினுக்கு அணியாய்-பூமிக்கு அலங்காரமாய், ஆன்ற பொருள் தந்து-மிகுந்த வஸ்துக்களைக் கொடுத்து,

புலத்திற்று ஆகி-பக்கத்தே விளைநிலங்களை யுடையதாகி, அவி அகம் துறைகள் தாங்கி-உள்ளிடந்தோறும் நீர்த்துறைகளை யுடையதாகி, ஐந்திணை நெறி அளாவி-ஐவகை நிலத்தின் வழி கலந்து, சவி உற தெளிந்து-கண் ஒளி ஊடுசெல்லுமாறு தெளிவடைந்து, தண்ணென்று-குளிர்ந்து, ஒழுக்கமும் தழுவி-ஒழுகுதலையும் பொருந்தி, சான்றோர் கவி என-அறிஞர்களால் செய்யப்பட்ட பாட்டுக்களைப்போல, கிடந்த-இருந்த கோதாவிரியினை-கோதாவிரி நதியை, கண்டார்கள், எ-று.

அவி-நீர். செய்யுட்காயின், பூமிக்கெல்லாம் அலங்காரமாய்நிறைந்த வளங்களைத் தந்து அறிவினிடத்தே நிகழுவதாகி, அமுதம்போன்ற அகப் பொருளின் பலபகுதிகளைத் தாங்கி, மற்றும் ஐவகை ஒழுக்கங்களையுந் தழுவி விளக்கமும் தெளிவு முள்ளதாய்த் தண்மையான சொன்னடையுள்ள தென்க. இவற்றின் விளக்கத்தைப் பிறிதோரிடத்திற் காண்க.

3. இதுவோ மாருதம்-இதோ! காற்றானது, குணதிசை-கிழக்குத் திசையின் கண்ணே, கொழுங் கொடி முல்லையின் கொழுமலர் அணவிக் கூர்ந்தது-செழுமையான முல்லைக் கொடியினுள்ள அழகிய பூக்களை யளைந்துகொண்டு மிகுத்து வாராநின்றது, மலர் அணைப் பள்ளிகொள் அன்னம்-தாமரைப்பூவாகிய படுக்கையில் துயில்கொள்ளும் அன்னங்கள், ஈர்ம்பனி நனைந்த தம் இருஞ் சிறகு உதறி எழுந்தன-குளிர்ந்த பனியால் நனைந்த தம் பெரிய சிறகுகளை யுதறிக்கொண்டு எழாநின்றன, விழுங்கிய-விழுங்குதற்கு, முதலையின்-, பிலம் புரை பேழ்வாய்-குகைபோன்ற பெரிய வாயினுள்ள, வெள் எயிறு உற-வெண்மையான பற்கள் (காலில்) அழுந்துதலும், அதன் விடத்தினுக்கு அனுங்கி அழுங்கிய-அதன் கொடுமையான நஞ்சினுக் காற்றாது வருந்திப் புலம்பிய, ஆனையின் அருந்துயர் கெடுத்த அரங்கத்து அம்மா-கஜேந்திராழ்வான் எனப்படும் யானையின் பொறுத்தற்கரிய துன்பத்தைக் கெடுத்தருளிய திருவரங்கத்திற் பள்ளி கொள்ளும் அம்மா, பள்ளி எழுந்தருளாய்-துயிலுணர்ந்து எழுந்தருளக் கடவாய், எ-று.

திருமாலைத் தாயென உபசரித்து, அம்மா என அழைத்தார்.
அணவல்-அணுகுதல், புல்லுதல். யானை, ஆதிமூலமே என்றழைத்தகாலை, அடைந்தருள்புரிந்தமையை "ஆதி நாயகனே அஞ்சலென் றினியுன் அபய மீங் தென்னை யாளெனுமால்" என்று கஜேந்திர மோட்சங் கூறும்.

4. கதிர் செய்-பிரகாசத்தைச்செய்கின்ற, நித்திலம்-முத்துக்களை, கறங்கு-ஒலிக்கின்ற, தெண்டிரை-தெளிந்த அலைகளாலாகிய, கரத்து-கைகளால், எறியும்-வீசுகின்ற, முதிர்-முதிர்ந்த, பனிக்கடல்-குளிர்ச்சியையுடைய கடலினது, முகட்டினில்-உச்சியில், முளைத்து-தோன்றி, ஒளிர்-விளங்குகின்ற, திங்கள்-நிலாவானது, விதியின்-விதியினால், மாலையாம்-மாலைக் காலமாகிய, துணைவியை-மனையாட்டியை, வீங்கு-மிகுந்த,

இருள்-இருளாகிய, தலைவன்-நாயகன், வதுவை ஆற்றுவான்-மணம் செய்யும் பொருட்டு, வைத்த-வைக்கப் பெற்ற, பொற் குடம் என-பொன்னால் செய்த குடத்தைப் போல, வயங்கும்-விளங்கும், எ-று.

5. பொழிலே-சோலையே, நறிய பைம் பொழிலே-வாசனையையுடைய பசுமையான சோலையே, தாமரை வாவியாம் பாங்கியோடு ஆவலிற் பயில்வோய்-தாமரைத் தடாகமென்னும் தோழியுடன் விருப்போடு பழகுவோய், முகில் மணி மகுட மா மொய் குன்ற மீது-முகிலாகிய இரத்தினக் கிரீடத்தையுடைய பெரிய நெருங்கிய மலையின்மேல், தளர்ந்த மாக்கள்-காமவேட்கையால் தளர்வடைந்த மாந்தர், உளம் களிகூர்ந்து உறை சோலை அம் செல்வியே-மனங் களிப்புக்கொண்டு தங்கியிருக்கின்ற சோலையாகிய அழகிய செல்வியே, திறு மதன் படைக்கலச் சாலையே-நெருங்குகின்ற மன்மதனின் ஆயுதங்கள் வைக்கப்பட்டிருக்குங் களஞ்சிய சாலையே, மஞ்ஞையின் தனி நட அரங்கே-மயிலின் ஒப்பற்ற நடனத்துக்குரிய நாடக வரங்கே, தமியராய் எதிர்ப்படும்-தனித்தவர்களாய் எதிர்ப்படுகின்ற, தலை மக்கள் தம்மை-தலைவன் தலைவியரை, இமைஅளவாம் பொழுதில்-ஒரு கணப் பொழுதில், இனிதாக-இனிமையுண்டாக, அன்பு கொளுத்துறும்-அன்பு மூளுமாறு செய்கின்ற, அழகு சால் இடனே-அழகு நிரம்பிய இடமே. மருட்டும் குழாத்தினை-மயக்கத்தைத்தரும் பெண்டிர் முதலிய கூட்டத்தினை, வெறுத்து இயல் மாந்தர்கள்-வெறுத்தொழுகுகின்ற துறவுடையாராகிய மனிதர்கள், இம்பர் எய்திய-இவ்வுலகத்தே அடைகின்ற, இன்ப உலகே-இன்பத்துக் குறைவிடமான உலகமே, களிப்பு உறு போழ்து-இன்ப மடைகின்ற காலத்து, கழியும் அமைதியாய்-அந் நிலையில்லா இன்பமானது கழியுமாறு செய்யும் அமைதியையுடைய இடமே, நின் நிழல் உலவி-நினது நிழலிலே உலாவி, நிகர் மலர் கொய்தல்-இணையான மலர்களைக் கொய்வது, தனிமையோ-தனிமையைத் தருவதோ? குறைவு இலா மகிழ்வே-குறைதலில்லாத மகிழ்ச்சியையே தருவதாகும், எ-று.

மலை மீதுள்ள சோலை யென்க. களிப்புறுங் காலத்து அமைதியைக் கழியச் செய்யுமிடம் என்றுமாம். அரங்கு-நாடக மேடை.

—:o:—

# VIII தனிச் செய்யுட்கள்

1. உற்றுழி உதவியும்-தன் ஆசிரியற்கு ஓரூறுபாடுற்றவிடத்து அதைத் தீர்த்தற்கு வந்துதவியும், உறு பொருள் கொடுத்தும்-மிக்க பொருளைக் கொடுத்தும், பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே-வழிபாட்டு நிலைமையை வெறுது கற்றல் ஒருவற்கு அழகிது, ( அதற்கு என்னை காரணமெனின் ), பிறப்பு ஓரன்ன உடன் வயிறு உள்ளும்-பிறப்பு ஒருதன்மை

யாகிய ஒரு வயிற்றுப் பிறந்தோருள்ளும், சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்-கல்வி விசேடத்தால் தாயும் மனம் வேறுபடும், ஒரு குடி பிறந்த பல்லோர் உள்ளும்-ஒரு குடியின்கட் பிறந்த பலருள்ளும், மூத்தோன் வருக என்னாது-மூத்தோன் வருகவென்னாது, அவருள் அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்-அவருள் அறிவுடையோன் சென்ற நெறியே அரசனும் செல்லும், வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்-வேறுபாடு தெரியப்பட்ட நாற்குலத்துள்ளும், கீழ் பால் ஒருவன் கற்பின்-கீழ்க்குலத்துள் ஒருவன் கற்பின், மேல் பால் ஒருவனும் அவன் கண் படும்-மேற் குலத்து ளொருவனும் இவன் கீழ்க்குலத்தா னென்று பாராது கல்விப் பொருட்டு அவனிடத்தே சென்று வழிபடுவனுதலான்

2. வாரும் நீர் யார் என்ன-இங்கு வாரும் நீவிர் யார் என்று என்னை வினவ, வித்துவான் என்னவும்-(நான்) வித்துவான் என்று சொல்லவும், மதி மோசம் வந்தது என்று-புத்தி மோசம் வந்துவிட்டதென்று, வாய் குளறி மெய் எலாம் மிக நடுக்குற்று-வாய் கொன்னித்து சரீரம் மிக நடுங்கி, நீர் வந்த காரியம் ஏது என-நீவிர் வந்த காரியந்தான் யாதோ என்று என்னைக் கேட்ச, நான், சீருலாவிய காம தேனு-சிறப்பு மிகுந்த காமதேனு என்னும் பசுவுக்கும், தாருவே என-கற்பகத் தருவுக்கு நிகர்த்த கொடையானே யென்றும், சிந்தாமணிக்கு நிகரே என-தேவமணிக்கு ஒத்தவனே யென்றும், செப்பு வசனத்து அரிச்சந்திரனே எனலும்-சொன்ன சொற் தவறுமைக்கு அரிச்சந்திரனை நிகர்த்தவனே யென்றும், சொல்லுதலும்'', சினந்து இரு கண் சிவந்து-கோப மிகுதியால் இரு கண்களுஞ் சிவந்து, ''யாரை நீ மாடு கல் மரம் என்று சொன்னது-நீ யாரை மாடென்றும் கல்லென்றும் மரமென்றும் சொன்னுய், அலால்-அன்றியும், அரிச்சந்திரன் என்று-அரிச்சந்திரன் என்று, அடாத சொல் சொன்னையே-அடாத வார்த்தைகளைச் சொன்னுயே,யார்க்கு அடிமை ஆகினேன்-நா னுருக்கு அடிமையாகினேன், ஆர் கையில் பெண்டு விற்றேன்-யாருக்கு எனது மனைவியை விற்றேன், தீருமோ இந்த வசை-நீங்குமோ நீ சொன்ன இவ் வசையானது'', என்று உரை செய்-என்று சொல்லுகின்ற, வெகு கொடிய தீயரை பாடி நொந்தேன்-மிகக் கொடியவர்களாகிய கெட்டவர்களைப் பாடி மனவருத்தமுற்றேன், திரு மன்று நடு நின்று நடம் ஒன்று புரிகின்ற-திருமன்றத்தின் நடுவிலே நின்று நடனம் செய்கின்ற, தென் தில்லை நடராஜனே-தென் தில்லையில் எழுந்தருளியிருக்கும் நடராசப் பெருமானே.

3. அரும் பாலகா-அருமையாகிய பாலகனே, முன்னம்-முன்னே, பூ மணம் போல்-பூவும் மணமும் போலவும், சொல் பொருள் போல்-சொல்லும் பொருளும் போலவும், ஆகம் உயிர் போல்-உடலும் உயிரும் போலவும், கரும்பு சுவை போல்-கரும்பும் சுவையும் போலவும், எள்ளும் எண்ணெயும்போல்-எள்ளு மெண்ணெயும் போலவும், ஒத்த-என்னோடு ஒற்றுமைப்பட்டிருந்த, காதலரை-பிராணநாயகரை, நல் அன்னம்-அழகிய அன்னப் பறவையானது, பெரும் பாலில்-மிகுதியாகிய பாலினின்றும், கங்காசலத்தை-கங்கைநீரை, பிரிப்பது போல்-பிரித்தல்

போல, சுரும்பு என-வண்டு போலவும், ஆம் புலவர் என-கல்விப் புலவர் போலவும், யமன் என-யமன் போலவும், ஆலை என-ஆலைபோலவும், செக்கு என-செக்குப் போலவும், (பிரிப்பதற்கு) தோன்றினை-பிறந்தாய்.

வண்டு, பூவினின்று தேனையும், புலவன், தான் கற்ற நூல்களிலிருந்து நல்லனவற்றையும், யமனுவான், உடலினின்றுஉயிரையும், ஆலை, கரும்பினின்று சாற்றையும், செக்கு, எள்ளினின்று நெய்யையும் பிரித்ததுபோல என விரித்துக்கொள்க.

4. பாணி-பாடிநியானவள், பாணு-பாணனே! இம்பர் வான் எல்லை இராமனையே பாடி-இவ்வுலகமும் அவ்வுலகமும் தன் புகழுக்கு எல்லைகளாகவுடைய இராமன் என்பவனைப் பாடி, நீ என் கொணர்ந்தாய் என்றாள்-நீ யென்ன பொருள் கொண்டு வந்தாய் என்று என்னை நோக்கி வினுவினுள், (அதற்கு விடையாக நான்) வம்பது ஆம் களபம் என்றேன்-புதுமையாகிய களபம் என்று சொன்னேன், (அதற்கு அவள்), பூசும் என்றாள்-பூசுவீர் என்று சொன்னுள், மாதங்கம் என்றேன்-மாதங்கம் என்று சொன்னேன், நாம் வாழ்ந்தோம் என்றாள்-நாம் வாழ்ந்தோம் என்று சொன்னுள், பம்பு சீர் வேழம் என்றேன்-மிகச் சிறப்பினையுடைய வேழமென்று சொன்னேன், தின்னும் என்றாள்-தின்னுவீர் என்றாள், பகடு என்றேன்-பகடு என்று சொன்னேன், பழனம் தன்னை உழும் என்றாள்-வயலை உழுவீரென்றாள், கம்பமா என்றேன்-கம்பமா என்று சொன்னேன், நல் களி ஆம் என்றாள்-நல்ல களி கிளறலாம் என்றாள், கைம்மா என்றேன்-கைம்மா என்று சொன்னேன் (பொருள் தெரியாமையால் ( சும்மா கலங்கி நின்றாள்-சும்மா கலங்கி நின்றாள்.

( களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா, கைம்மா முதலியன யானைக்குப் பரியாய நாமங்கள். களபம்-கலவைச்சந்தனம், மாதங்கம்-உயர்ந்த பொன், வேழம்-கரும்பு, பகடு-எருமைக்கடா, கம்பமா-கம்பை யரைத்துச் செய்த மா. )

5. பதுமத்தான்-தாமரை மலரை யிடமாகவுடைய பிரமன், புவியில்-இவ்வுலகத்தில், கல்லை மண்ணை-கல்லையும் மண்ணையும், காய்ச்சி குடிக்க-காய்ச்சிக் குடிக்கும்படி, கற்பித்தானு-ஏற்படுத்தினுனு, இல்லை-அப்படியன்றி, எனக்கு பொன்னை கொடுத்து இரட்சித்தானு-எனக்குப் பணத்தைக் கொடுத்துக் காப்பாற்றினுனு, அல்லை சொல்லி-துன்பத்தைச் சொல்லி, ஆரை நோவ-யாரை நொந்துகொள்ள, ஐயோ-அந்தோ, எங்கும்-(போகத் தகாத ) எவ்விடத்திலும் போய், பல்லைத் திறக்கப்பண்ணினுன்-பல்லைத் திறந்து கெஞ்சும்படி சிருட்டித்துவிட்டான்.

# IX பிரபந்தப் பாடல்

1. பொய்யா வளமைதரும்-என்றும் பொய்த்தலில்லாத வளப்பத்தைக் கொடுக்கின்ற, பெருமைப் பொருநைத் துறையில் நீராட்டி-பெருமையையுடைய பொருநை யாற்றங்கரையில் உன்னை நீராடச்செய்து, பூட்டுங் கலங்கள் வகை வகையே பூட்டி-அணிய வேண்டிய அணிகலன்களை விதம் விதமாக அணிந்து, எடுத்து மெய்யால் அணைத்துப் பாலூட்டி-எடுத்து மார்போ டணைத்துப் பாலை யுண்ணச் செய்து, மறுகுதனில் விட்டாரவரை வெறுமல்-தெருவிலே விளையாடுமாறு கொணர்ந்து விட்டோராகிய அப் பெண்டிரை வெறுக்காமல், உனை வெறுக்க-, வேறு கடன் உண்டோ-வேறு காரணமுண்டோ, விரும்பிப் பரலைக் கொழித்து எடுத்து-விருப்பங்கொண்டு பருக்கைக் கற்களை மண்ணினின்றுங் கொழித்தெடுத்து, கையால் இழைத்த சிற்றிலை-யாம் எம் கைகளாற் செய்த சிறு வீட்டை, காலால் அழிக்கை கடன் அல காண்-நின் சாவினால் அழித்துவிடுதல் முறைமையன்று காண், காப்பான் அழிக்கத் தொடங்கில்-எம்மைக் காப்பாற்ற வேண்டியவனாகிய நீ அழிக்கத் தொடங்கினால், எங்கள் கவலை இனி எவரோடு உரைப்போம்-எங்கள் மனவருத்தத்தை இனி யாரிடம் சொல்லிக்கொள்ளுவோம், ஐயா-, உனது வழியடிமை அடியேம் சிற்றில் சிதையேல்-தலைமுறை தலைமுறையாக அடிமைத்தொழில் கைக்கொண் டொழுகும் உமது அடியாராகிய எம்முடைய சிறு வீட்டை அழித்துவிடாதீர், அலை முத்து எறியும் திருச் செந்தூர் அரசே-அலைகள் முத்துக்களைக் கொணர்ந்து ஒதுக்குகின்ற திருச் செந்தூரை இடமாகக் கொண்ட அரசனே, சிற்றில் அழியேல், எ-று.

2. விழுந்த கொழும் வள்ளிக் கொடியின் கிழங்கு கல்லி எடுப்போம்-நிலத்தினுள் விழுந்த ( கீழ் நோக்கி வளர்ந்து சென்ற ) செழுமையையுடைய வள்ளிக் கொடியின் கிழங்கைத் தோண்டி யெடுப்போம், குறிஞ்சி மலர்-குறிஞ்சிப் பூக்களை, தெரிந்து முல்லைக் கொடியில் வைத்துத் தொடுப்போம்-, பழம் பிழிந்த கொழும் சாறும் தேறலும் வாய் மடுப்போம்-பழங்களைப் பிழிந் தெடுத்த செழுமையான சாற்றையும் தேனையும் உண்போம், பசுந் தழையும் மரவுரியும் இசைந்திட உடுப்போம்-பசுமையான இலைகளையும் மரப்பட்டைகளையும் பொருந்துமாறு உடுத்துக்கொள்வோம், விருந்தி அருந்தச் செழுந்தினையும் நறுந்தேனும் கொடுப்போம்-விருந்தாக வந்த புதியவர் உண்ணுதற்குச் செழுமையான தினைமாவையும் வாசனையையுடைய தேனையுங் கொடுப்போம், சின வேங்கைப் புலித்தோலின் பாயலில் கண்படுப்போம்-சினம்பொருந்திய வேங்கைப்புலியின் தோலாகிய படுக்கையில் நித்திரை செய்வோம், எழுந்து-படுக்கையைவிட்டெழுந்து, கயற் கணிகாலில் விழுந்து-கயல்மீனின் கண்

கள்போலுங் கண்களையுடையாளாகிய பார்பதியின் பாதங்களில் விழுந்து வணங்கி, வினை கெடுப்போம்-எமது பாசவினையைப் போக்கடித்துக்கொள்வோம், அம்மே-அம்மா, எங்கள் குறக்குடிக்கு அடுத்த இயல்பு இதுகாண்-எம் குறக்குலத்தாருக்குரிய தன்மை இதுதான் அறிவாயாக, எ-று.

3. அம்மா உனது-, அங்கைத் தலத்துத் தனரேகை-உள்ளங்கையிலிருக்கும் தனரேகையானது, அளவில் செல்வம் தரும்-அளவில்லாத செல்வத்தை உனக்குக் கொடுக்கும், செங்கைத் துடி-உனது சிவந்த கையினிடத்துள்ள உடுக்கைக் குறியாகிய ரேகை, மதுரை ஈசர் செம்பொன் புயத்தில் சேர்க்குமாம்-மதுரை வெள்ளியம்பலத்திலுள்ள சொக்கேசரின் செம்மையான பொன் போல்ற தோள்களில் உன்னைச் சேர்த்துவிடுமாம், புத்திர ரேகை இங்கு இப்படி எவர்க்கும் இலை-புத்திர ரேகையானது இக் கையில் இவ்வாறிருப்பது போல வேறு யாருக்கேனும் இருந்ததில்லை, தோளில் இப்படி தங்கும் மறு அங்கயற் கண் அம்மை தன்னோடு இருக்கத் தரும்-உன் தோளில் இவ்வாறு அமைந்திருக்கும் மறுவானது அழகிய கயற்கண்ணியாகிய பார்பதியோடு நீ யிருக்குமாறு பெரும் பேற்றைக் கொடுக்கும், எ-று.

"என்னெண்ணப்படி கூறவில்லைப் பெரியோர் கொள்கையிது" வென்பாள், "சேர்க்குமாம்" என்றாள்.

4. உருமாறி-உடலாகிய உருவம் மாறி, பல பிறப்பும் பிறந்தும் செத்தும்-, ஊசல் ஆடுவது அடியேன் ஒழியும் வண்ணம்-ஊஞ்சலாடிக் கொண்டிருக்குஞ் செயலை அடிமையாகிய யான் ஒழித்துவிடுமாறு, கருமாயத்து என் நெஞ்சை-இருளென்னும் அஞ்ஞானமாகிய மயக்கத்தையுடைய எனது உள்ளத்தை, பலகை ஆக்கி-, கருணை எனும் பாசத்தைக் கயிறுப் பூட்டி-நினது அருள் எனப்படும் பிணிப்பினைக் கயிறாகப்பூட்டி, மருதுளவு மாலை அசைய ஆடீர் ஊசல்-அழகிய துளசி மாலை அசையுமாறு ஊஞ்சல் ஆடுவீராக, மணி மகரக் குழை-இரத்தினங்கள் அழுத்தப் பெற்ற சுறு வடிவான, குண்டலங்கள், (காதுகளில்) அசைய ஆடீர் ஊசல்-, திரு மாது புவி மாதோடு-இலக்குமி பூமி தேவி என்பவரோடு, ஆடீர் ஊசல்-, திரு அரங்க ராசரே-சிறந்த அரங்கத்துப் பள்ளிகொள்கின்ற அரசரே ஊஞ்சல் ஆடுவீராக, எ-று.

ஒழியும் வண்ணம் என்றும், கருமாயத் தென்னெஞ்சென்றும் திருத்திக் கொள்க. பாசம்-அன்புமாம்.

5. அரவின் நடித்தானும்-காளிங்கன் என்னும் பாம்பின்மேல் நடனம் செய்தவனும், உர வில் ஒடித்தானும்-வலிய வில்லினை முறித்தவனும், அடவி கடந்தானும்-வனத்தைக் கடந்தவனும், புடவி இடந்தானும்-பூமியைப் பன்றி வடிவுகொண்டு பிளந்தவனும், குரவை பிணைத்தானும்-மகளிர், தனக்காகக் குரவைக் கூத்தைப் பிணைந் தாடச் செய்த

வனும், பரவை யணைத்தானும்-பாற்கடலை அணையாக்கியவனும், கோசலை பெற்றானும்-கௌசலா தேவியாற் பெற்றெடுக்கப்பட்டவனும், வீசு அலை உற்றானும்-வீசுகின்ற அலைகளையுடைய (சேதுவாகிய) கடலை யடைந்தவனும், முரனை அறுத்தானும்-முர னென்னும் அரக்கனைப் பிளந்து வீழ்த்தியவனும், கரனை ஒறுத்தானும்-கரனை வதைத்தவனும், முத்தியளித்தானும்-தன்னை யடைந்தார்க்கு வீட்டைக் கொடுத்தவனும், அத்தி விளித்தானும்-முதலையாற் பற்றப்பட்ட யானையால் ஆதிமூலமே யென அழைக்கப்பட்டவனும், பரம பதத்தானும்-மோட்சத்துக்குக் காரணனாயிருப்பவனும், சரம இதத்தானும்-முடிந்த இன்பப் பொருளா யிருப்பவனும், வடப் பாயலானும்-ஆலிலையைப் படுக்கையாகக் கொண்டவனும், கோயில் இடத்தானே-திருவரங்கத்தை இடமாகக்கொண்ட திருமாலே, என்றவாறு.

சரமம்-முடிவு, வடம்-ஆலமரம், ஈண்டுச் சினையை யுணர்த்திற்று. பரமபதம்-மோட்சம்.

# தமிழ் வியாசங்கள் உரை

எண் பக்க எண்

## சுகாதார தருப்பணம்

பக்கம் 12. சாதல்,... நன்ருல், விளியாத அரு நோயில் சாதல் நன்று-மாருத கொடிய நோயுடையராயிருத்தலினும் இறந்துபோதல் நல்லது.

பக். 14. புறந்தூய்மை-உடம்பின் புறச் சுத்தம், நீரால் அமையும்-நீரினுல் ஆகும்.

பக். 15. உண்ணுங்கால்-சாப்பிடும்போது, நீர் சுருக்கி-நீரைச் சூடாக்கி, மோர் பெருக்கி-மோருடன் அதிக நீரைக் கலந்து, நெய் யுருக்கி-உறைந்த நெய்யை நன்ருக உருக்கி, உண்பவர்தம்-, பேர் உரைக்கில்-, பிணி போகும், எ-று.

பக். 16. காலைக் குளிக்கு-காலைநேரத்தில் குளிக்கும் குளிப்புக்கு, கடும்பசி உண்டாம் நோய் போம்-, மாலைக் குளிக்கு-மாலையிற் குளிக்கும் குளிப்புக்கு, அவைகள்-, மத்திபம்-ஓரளவு அகலும்.

மத்திபம்-இடை, நடு.

பக். 17. சிலம்பம் முதல்-சிலம்பஞ் சுழற்றுதல் முதலாக, மல் யுத்தம்-மற் சண்டை செய்தலீருன பல்வகை விளையாட்டுக்களையும், தேசி-ஆடலையும், நடை-நடத்தலையும், கொள்ளின்-எந்நாளும் கைக் கொள்ளின், பலம் பரவும்-வலிமையுண்டாகும், மெய் இறுகும்-உடல் இறுக்கமடையும், பன்ன-சொல்லுமிடத்து. துலங்கு பசி உண்டாம்-மிகுந்த பசி யுண்டாகும், கபம் வாதமோடு-, வலி சூலையும் போம்-வலிப்பும் சூலை நோயும் ஓடும்.

கபம்-சுவாசப்பையை வருத்தும் கோழைநோய், சூலை-வயிற்றில் வளரும் கட்டி. தேசி நடை யென்பதற்குக் குதிரைபோன்று நிமிர்ந்து ஒய்யாரமாய் நடத்த லெனினும் பொருந்தும்.

பக். 19. தெரியான் தீ அளவு அன்றி பெரிது உண்ணின்-தன் சரீர சுபாவமும் அதற்கேற்ற உணவும் காலமும் ஆராயானுகி வேண் டிய உணவை வேண்டிய காலத்து, தீ அளவு அன்றி-வயிற்றுத் தீயள வல்லாமல், பெரிது உண்ணின்-ஒருவன் மிக உண்ணுமாயின் நோய்-, அளவின்றி படும் அளவில்லாமல் வளரும், எ-று.

ஒருவன், அருந்தியது-முன் உண்ணப்பட்டது, அற்றது-சீரணித்த படியை, போற்றி-குறிகளாலே தெளிய அறிந்து, உணின்-(பின்னே )

உண்பானாயின், யாக்கைக்கு-உடம்புக்கு, மருந்தென வேண்டாவாம்-மருந்து வேறு வேண்டியதில்லை, எ-று.

ஞாலந்தான் வந்தி... உண்ணோம் என்றது, உலகம் முழுதுமே எமக்குரியதாகக் கையகத்தே வந்து பொருந்துவதாயினும், பசியெடுத்தால் அல்லது சாப்பிடோம், எ-று.

உண்பது... உண்ணோம்-உண்ண வேண்டியவற்றை, ஒரு நாளில் இரண்டுவேளையேயன்றி, மூன்று வேளை உண்ணமாட்டோம், எ-று.

பக். 20. ஊண்பாக்கு... ஆகாது-ஊண் உண்டவுடன் பாக்கு உண்ணப்பட வேண்டியதன்றி, மற்றைய வேளைகளில் வீணாக உண்ணப்படும் பாக்கு உடலுக்குப் பொருந்தாத தாகும் எ-று. பாக்கு-ஈண்டு வெற்றிலையோடு கூடிய பாக்கு.

எஞ்ஞான்றும்... கள்ளுண்பவர்-எக்காலத்தும் அறிவில்லாமல் கள்ளுண்பவர், நஞ்சுண்பவரேயாவர், எ-று.

குக்ஷிபாதை-பசிப் பிணி.

பக். 21. பகல் வளரார்-பகலில் உறங்கார், சேமம்-சிறைச்சாலை, சாமம்-நடு இரவு, அனந்தல்-உறக்கம், கூற்றத்தின் வாய் வீழ்ந்த-யமனின் வாயிலகப்பட்ட, அனந்தல் ஆற்ற உடையாய்-நித்திரையை மிகவும் உடையாய்.

பக். 23. யாண்டு பலவாக-சென்ற வருடங்கள் பலவாயிருக்க, நரை யில வாகுதல்-நரையில்லையாகுதல், யாங்காகியர் என வினவுதிராயின்-எப்படி யாயினீரெனக் கேட்பீராயின், மாண்ட என் மனைவியொடு-எனது நற்குணங்கள் அமைந்தமனையாளோடு, மக்களும் நிரம்பினர்-பிள்ளைகளும் அறிவு நிரம்பியவர்கள், என் இளையரும்-எனது ஏவலாளரும், யான் கண் டனையர்-யான் கருதிய அதனையே கருதுவர், வேந்தனும்-அரசனும், அல்லவை செய்யான் காக்கும்-முறையற்ற காரியங்களைச் செய்யாதவனாய் காப்பான், யான் வாழும் ஊர்-எனது ஊரினிடத்து, அதன் தலை-அதற்குமேல், ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர்-கல்வியால் நிறைந்து பணிய வேண்டுவார்க்குப் பணிந்து ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையுடைய சான்றோர் பலருளர், எ-று.

பக். 24. மருத்துவன், நோய் நாடி-பிணியாளியினுடைய நோயை அதன் குறிகளினால் அறிந்து, நோய் முதல்நாடி-பின்பு அந்நோய் வந்த காரணத்தை ஆராய்ந்து, அது தணிக்கும் வாய்நாடி-பின் அது தீர்க்கும் உபாயத்தினை அறிந்து, வாய்ப்பச் செயல்-அதனைப் பிழைபடாமல் செய்யக்கடவன், எ-று.

——:O:——

# செல்வம்

பக். 31. ஈட்டலும் துன்பம்-பொருளைத் தேடுவதும் துன்பம்தருவது, ஈட்டிய ஒள் பொருளை-தேடிய ஒளியைத் தர வல்ல பொருளை, காத்தலும்-கள்ளர் முதலியோர் அபகரியாமல் பாதுகாத்தலும், ஆங்கு-அக் காக்குங் காலங்களில், கடும் துன்பம்-மிக்க துன்பத்தைத் தருவது, காத்தல் குறைபடின் துன்பம்-முன் காக்கப்பட்டபொருள் தன்னளவில் குறைந்தாலும் துன்பம் தருவது, கெடின் துன்பம்-முழுமையும் அழிந்தால் அவ் வழிவும் துன்பந்தருவது, (ஆதலால்) பொருள்-செல்வப்பொருள், துன்பத்துக்கு உறைபதி-துன்பங்கள் தங்குமிடமாம், எ-று. மற்று இரண்டும் அசைநிலை, ஐ, சாரியை.

நம்மை விட்டு-(பொருள் உள்ள) உம்மைவிடுத்து, செல்வம் என்று உறுவதற்கும்-செல்லுவோம் என்றுசொல்லிக்கொண்டே வந்தடைகின்ற பொருளுக்கும், செல்வம் என்று உறுபேர் நன்று-செல்வம் என்று ஆன்றோரால் இடப் பெற்ற பெயர் தகுதியானதே, எ-று.

பொருவறு பந்தம் எல்லாம் புணர்த்திடும்-இணையற்ற உலகத் தொடர்புகளையெல்லாம் சேர்த்துவிடும், தெய்வ சிந்தை ஒருவ-கடவுளிடத்து எண்ணம் இல்லாது போக, மேலிட்டு நிற்கும்-தான் தலைமைப்பாடெய்தி நிற்கும், உறக்கமும் இறக்கச் செய்யும்-நித்திரையுமில்லாது போகச் செய்யும், கருவினுள் புகுத்தும்-பிறவிகளிலே செலுத்தும் இன்ன கரிசு கண்டதனால் அன்றே-இவ்வகைப்பட்ட குற்றங்களைக் கண்டதனாலல்லவா, புலமை சான்றோர்-அறிவு நிரம்பியோர், இரு நிலத்திடை-பெரிய உலகத்தே, வெறுக்கை என்மனார்-வெறுக்கப்படுவதெனச் (செல்வத்திற்கு) ப் பெயரிட்டார், எ-று.

முறைதவிர் கொடுங்கோல் மன்னர் முனிவிற்கு-நீதி திறம்பிய கொடுங்கோலரசர் கோபத்திற்கு, நனியும் அச்சம்-மிகவும் பயம், கறைகெழு களவு செய்வார் கரத்திற்கும்-குற்றம் பொருந்திய களவுதொழிலினைச் செய்வார் கைகளுக்கும், அழற்கும்-நெருப்பிற்கும், அச்சம்-; மறைவு அறு தாய மாக்கள்-மறைவில்லாத சுற்றத்தார், வௌவுவர்-பிடுங்கிக்கொள்வார், என்றும் அச்சம்-, அறை பொருள் பெற்றாரல்லர்-சொல்லப்படும் பொருளினைப் பெற்றுக்கொண்டாரல்லர், அச்சமே பெற்றார் போலும், எ-று.

பக். 32. வடுவிலா-குற்ற மற்ற, வையத்து-பூமியில், மன்னிய மூன்றில்-மாந்தர்க்கு நிலைபேறுடையனவாகக் கூறப்பட்ட அறம் பொருள் இன்பம் என்ற மூன்றனுள், நடுவணது எய்த-நடுவிலே கூறப்பட்ட செல்வப் பொருளை ஒருவன் அடைந்தால், இருதலையும் எய்தும்-, அறமும் இன்பமுமாகிய இரு திறப்பட்டவையும் சித்திக்கும், எ-று.

தெய்வத்தால் ஆகாது எனினும்-செய்த தொழில் தெய்வச் செயலால் கருதிய பயனைத் தராதொழியினும், முயற்சி-முயற்சியானது, மெய்

வருந்தக் கூலி தரும்-தனக்கிடமாகிய சரீரம் வருந்தியவருத்தத்தின் கூலி அளவு தரும், எ-று.

பக். 33. உழந் துண்டல்-வருந்தி முயன் றுண்ணுதல், வருவாய்-சம்பாத்தியம், கால்-நாலிலொன்று.

பக். 34. ஆகு ஆறு-ஒருவனுக்குப் பொருள் வருகின்றவழியானது அளவு இட்டிது ஆயினும்-அளவினால் சிறிதாய் இருந்தாலும், கேடு இல்லை-, போகு ஆறு-போகின்ற வழி, (அளவினால்) அகலாக் கடை-அதனில் அதிகப்படாமல் இருக்குமாயின், எ-று.

பக். 37. கடம் கொண்டும் செய்வார் கடன்-கடன்பட்டாயினும் செய்ய வேண்டிய கடமையைச் செய்தே தீர்ப்பர்.

பக். 39. வருமுன்னர்-குற்றம் வருவதற்கு முன்பே, காவாதான்-அது வாராது காத்துக்கொள்ளாத ஒருவனது, வாழ்க்கை-வாழ்க்கையானது, அது வந்தால், எரிமுன்னர்-நெருப்புமுன் நின்ற, வைத்துறுபோல-வைக்கோலின் கூட்டம் போல, கெடும்-, எ-று.

பக், 41. உண்ணான்-ஒருவன் நல்லுணவுகளை உண்ணாமலும், ஒளி நிறான்-மதிப்பை நிலைக்கச் செய்யாமலும், ஓங்கு-பெருகுகின்ற, புகழ்-புகழை, செய்யான்-செய்துகொள்ளாமலும், துன் அருகேளிர்-பெறுதற் கரிய உறவினரது, துயர் களையான்-வறுமைத் துன்பத்தை நீக்காமலும், வழங்கான்-இரப்பவர்க்குக் கொடாமலும், கொன்னே-வீணாக, பொருள் காத்து இருப்பானேல்-செல்வப் பொருளைக் காத்திருப்பானாயின், அஆ-ஐயோ, இழந்தான் என்று எண்ணப்படும்-அவன் பொருளை இழந்துவிட்டான் என்று பெரியோரால் மதிக்கப்படும், எ-று.

ஈட்டி உய்க்கும்-தேனைத் தேடிக்கூட்டில்சேர்க்கும், தேனீ கரி-தேனீக்கள் சாட்சியாம், எ-று.

நடு ஊருள்-ஊரின் மத்தியில், நச்சுமரம் பழுத்தற்று-நச்சுத் தன்மை பொருந்திய பழங்களைத் தரும் மரம் பழுத்தாற் போலும், எ-று.

ஊரம்பலம்-ஊரா ரெல்லாருந் தங்கியிருக்கும் பொதுவிடம்.

பக். 43. மாறு ஈவார்க்கு ஈதல்-ஈவார்க்கு மாறு ஈதல் என மாற்றுக. மாறீதல்-பிரதியுபகாரஞ் செய்தல், பொலி கடன்-மிக்க கடமை.

பக். 45. இரவு-இரத்தல்.

—:o:—

## நட்பு

பக். 51, முகம் நக-கண்ட இடத்து முகம் மாத்திரமே மலரும் வகை, நட்பது-சிநேகிப்பது, நட்பு அன்று-, நெஞ்சத்து அகம் நக-அன்பால் உள்ளம் மலர, நட்பது நட்பு-சிநேகிப்பதே சிநேகமாம், எ-று.

இவர் எமக்கு-இவர் நமக்கு, இனையர்-இவ்வளவு அன்பினர், யாம்-நாம், இன்னம் என்று-இவர்க்கு இவ்வளவு அன்பினேம் என்று, புனையினும்-ஒருவரை ஒருவர் சிறப்பிக்கினும், நட்பு-, புல் என்னும்-சிறிதாய்த் தோற்றும்.

பக். 52. நுண் உணர்வினரொடு-கூர்மையாகிய கல்வி அறிவினையுடையாரோடு, கூடி-நட்புக் கொண்டு, நுகர்வு உடைமை-அவரால் கூறப்படும் நூற்பொருள்களை அனுபவித்தல் உடையராதல், விண் உலகே ஒக்கும்-சுவர்க்கத்தைப் போலும், விழைவிற்று-விருப்புதலையுடையது, நுண் நூல்-நுண்ணிய பொருட்களை உணர்த்தும் நூல்களை, உணர்வு இலர் ஆகிய-அறிதல் இல்லாராகிய, ஊதியம் இல்லார்-பிறப்பின் பயன் இல்லாதவரை, புணர்தல்-கூடுதல், நிரயத்துள்-நரகங்களில் ஒன்று-விசேட நரகமாம், எ-று.

பண்புடையாளர் தொடர்பு-நற்குணம் உடைய மக்கள் தங்களிலே செய்த நட்பு, பயில் தொறும்-பழகுந் தோறும், (அவர்க்கு இன்பம் செய்தல்) நூல்-நூற்பொருள், நவில் தொறும்-கற்குந்தோறும், நயம் போலும்-கற்பவர்க்கு இன்பம் செய்தல் போலும், எ-று.

கனை-ஒலிக்கின்ற, கடல்-கடலினது, தண்சேர்ப்ப-தண்மையாகிய துறையை யுடையோனே! (ஒருவன்) கற்று அறிந்தார்-கற்றுணர்ந்தவரிடத்துச் செய்யும், கேண்மை-நட்பு, கரும்பு-கரும்பை, நுனியின்-நுனியில் நின்று, தின்றால் அற்று-தின்றாற் போல நாட் செல்லச் செல்ல இன்பந் தருவதாகும், பண்பு இலாத-கற்று நற்குணமில்லாத, ஈரம் இல்லாளர் தொடர்பு-அன்பின்மையை உடையாரிடத்துச் செய்யும் நட்பு, நுனி நீக்கி-நுனியில் நின்று தின்னுதலை விடுத்து; தூரின்-வேரில்நின்று தின்றால் அன்ன-தின்றால் போன்ற, தகைத்து-நாள் செல்லச் செல்ல வெறுக்குந் தன்மையை யுடையது, எ-று.

நீரவர்-அறிவுடையாரது, கேண்மை-சிநேகமானது, பிறை-பிறை போல, நிறை நீர-நாடோறும் நிறையும் தன்மையுடையனவாம், பேதையார் நட்பு-அறிவில்லாதாரது நட்பு, மதி-பூரண சந்திரன் போல, பின் நீர-பின்னே நாடோறும் குறையுந் தன்மை உடையனவாம்.

பொன்கேழ்-பொன்னிறம் போலும் நிறமுள்ள, புனல்-அருவி நீர் ஒழுக-விழுதலால், புள் இரியும்-பறவைகள் பறந்து நீங்குகின்றன, பூ குன்ற நாட-பொலிவாகிய மலை நாட்டை யுடையவனே! இல் பிறப்பு-ஒருவரது, உயர்குடிப் பிறப்பினை, எண்ணி-ஆராய்ந்து, இடை திரியார்-(இவர் நட்புச் செய்தபின்) இடையிலே விட்டுவிடார், என்பது-என்று சொல்லப்படுவதாகிய, ஓர் நல் புடைகொண்டு-ஒரு நல்ல பட்சத்தைப்

பெற்று, அமை-அவரோடு நட்புக்கொள், அல்லது-இதை அல்லாமல், மனம் அறியப்பட்டது-மன மறியப்பட்ட, பட்சம் ஒன்று அன்று-ஒருபட்சம் அன்று, எ-று.

குணனும்-ஒருவனது குணத்தையும், குடிமையும்-குடிப் பிறப்பையும், குற்றமும்-குற்றத்தையும், குன்று இன்னும்-குறைவற்ற சுற்றத்தையும், அறிந்து-ஆராய்ந்து அறிந்து, நட்பு யாக்க-அவனோடு சிநேகம்செய்யக்கடவன், எ-று.

நட்பு ஆள்பவர்க்கு-நட்பை விரும்பி அதனிடத்தே நிற்பவர்க்கு, நட்டபின்-ஒருவனோடு நட்புச் செய்தபின், வீடு-அவனை விடுதல், இல்லை-, (ஆதலால்) நாடாது-ஆராயாமல், நட்டலின்-சிநேகித்தல் போல, கேடு-கேடு தருவது, இல்லை-வேறு இல்லையாம்.

பக். 53. குடிப் பிறந்து-உயர்ந்த குடியில் பிறந்து, தன்கண்-தன்னிடத்து, பழி-உலகத்தார் சொல்லும் பழிக்கு, நாணுவானை-அஞ்சுபவனை, கொடுத்தும்-யாதாயினும் ஒரு பொருளைக் கொடுத்தாயினும், நட்புக் கொளல் வேண்டும்-சிநேகம் செய்யவேண்டும், எ-று.

மாசு அற்றார்-குற்றம் அற்றவரது, கேண்மை-நட்பையே, மருவுக-பழகக் கடவன், ஒப்பு இலார்-உலகத்தோடு ஒத்தலில்லாதவரது, நட்பு-சிநேகத்தை, (ஆராயாது கொண்டால்) ஒன்று-அவருக்கு வேண்டிய ஒன்றை, ஈந்து-கொடுத்தாயினும், ஒருவுக-விடக்கடவன்.

யானை அனையவர்-யானையை ஒத்த இயல்பினரது, நண்பு ஒரீஇ-நட்பை நீக்கி, நாய் அனையார்-நாயை ஒத்த இயல்பினை யுடையவரது, கேண்மை-நட்பை, கெழீஇக் கொளல்வேண்டும்-தழுவிக்கொள்ளவேண்டும், எ-று.

நீர்-நீரானது, நிலத்து-தான் சேர்ந்த நிலத்தினது, இயல்பான்-குணத்தினால், திரிந்து-தனது தன்மை மாறுபட்டு, அற்று ஆகும்-அந்நிலத்தின் தன்மையதாகும், (அது போல) மாந்தருக்கு-மனிதருக்கு, அறிவு-அறிவானது, இனத்து-தாம் சேர்ந்த இனத்தினது, இயல்பு-குணத்தினாலே, திரிந்து-தன்மை வேறுபட்டு, அது ஆகும்-அவ் வினத்தினது தன்மையதாகும், எ-று.

பக். 55. கடையாயர்-கடையானவர், நட்பின்-நட்பினால், கமுகு அனையர்-கமுக மரத்தை ஒப்பர், ஏனை-மற்ற, இடையாயர்-இடையானவர், தெங்கின் அனையர்-தென்னமரத்தை ஒப்பர், தலையாயர்-முதன்மையுடையவர், தொன்மையுடையார்-பழமை பாராட்டுத லுடையராகி, தொடர்பு-கொண்ட நட்பு, எண் அரு-பயனை அளவிடுத லருமையாகிய, பெண்ணை போன்று-பெண் பனை போன்று, இட்ட ஞான்று-நட்புச் செய்த நாளில், இட்டதே-செய்த உதவியேயாம், எ-று.

அன்பின்-அன்புடனே, வழிவந்த-பழையதாய் வந்த, கேண்மையவர்-நட்பினையுடையவர், அழிவந்த-அழிவு வந்தவைகளை, செய்யினும்-செய்தாராயினும், அன்பு அறார்-அவரிடத்தே அன்பு நீங்கார், எ-று.

நிறம்-நன்னிறமாகிய, கோங்கு-கோங்க மலரில், உருவம்-அழகாகிய, வண்டு-வண்டுகள், ஆர்க்கும்-ஆரவாரிப்பதற் கிடமாகிய, உயர்வரை நாட-உயர்ந்த மலைநாட்டரசனே! தம் நட்டார்-தம்மால் நட்புச்செய்யப் பட்டவர், இறப்ப-மிகுதியாக, தீயவே-தீமையான காரியங்களேயே, செயினும்-செய்தாராயினும், பொறுத்தல்-(அறிவுடையார்) பொறுத்துக் கொள்ளுதல், தகுவது-நட்புக்கு தகுவதாகிய, ஒன்று-ஒரு செயல், அன்றோ-அல்லவா? ஒருவர் பொறை-இரு சிநேகருள் ஒருவருடைய பொறுமையால், இருவர் நட்பு-அவ் விருவருக்கும் நட்புளது, எ-று.

இருவர்-இரண்டு பேர், வேற்றுமை இன்றி-நான் நீ என்ற வேறுபாடில்லாமல், கலந்து நட்டக்கால்-மனம் கலந்து சிநேகித்தால், ஒருவன் கண்-இருவருள் ஒருவனிடத்து, தேற்றாத ஒழுக்கம்-மற்றவர்க்கு அறிவிக்கக் கூடாத தீய ஒழுக்கம், உண்டு ஆயின்-உண்டானால், ஆற்றும் துணையும்-மற்றவன் பொறுத்துக்கொள்ளுமளவும், பொறுக்க-பொறுத்துக்கொள்ளக் கடவன், பொறான் ஆயின்-பொறுத்துக்கொள்ளக் கருத்திலன் ஆயின், தூற்றாதே-செய்தவனது தீய ஒழுக்கத்தைப் பல ரறியச் சொல்லாமல், தூர விடல்-அவனது நட்பைத் தூரவிடக்கடவன், எ-று.

பக். 56. இன்னா செய்தாரை-தமக்குத் துன்பம் தருபவைகளைச் செய்தவரை, ஒறுத்தல்-தண்டித்தலாவது, அவர் நாண-அவர்தாமே நாணும்படி, நல் நயம் செய்து-அவருக்கு இனிமையான மகிழ்ச்சிகளைச் செய்து, விடல்-அவ் விரண்டையும் மறத்தலாம், எ-று.

சீரியார் கேண்மை-மேன்மக்களது சிநேகம், சிறந்த சிறப்பிற்று ஆய்-மிகுந்த சிறப்புடையதாய், மாரிபோல்-மழை பெய்தாற் போல, மாண்ட-மாட்சிமைப்பட்ட, பயத்ததாம்-கொண்டவருக்கு மிகுந்த பயனுளதாகும், எ-று.

பக். 60. நட்பிற்கு-சிநேகத்திற்கு, வீற்றிருக்கை-அரசிருக்கை, யாது எனின்-ஏதெனில், கொட்புஇன்றி-எந்நாளும் வேறுபடாமல், ஒல்லும் வாய்-கூடும் இடத்தெல்லாம், ஊன்றும் நிலை-அறம் பொருள்களிலே தளராமல் தாங்குந் தன்மையாம், எ-று.

———:o:———

## சாதுரியம்

பக். 67. கூம்பும் பருவத்து-தொழில்மேல் செல்லாதிருக்கவேண்டுங் காலத்து, கொக்கு ஒக்க-கொக்கு இருப்பது போல் இருக்கக் கடவர், மற்றுச் சீர்த்த இடத்து-மற்றும் செல்லுங்காலம் வாய்த்த இடத்து, அதன் குத் தொக்க-அது தப்பாமல் குத்திக்கொள்வதுபோலத் தப்பாமல் செய்துமுடிக்கக் கடவன்.

வினையால்-செய்யப்படுகின்ற தொழிலால், வினை-அப்படிப்பட்ட வேறொரு தொழிலை, ஆக்கிக் கோடல்-முடித்துக்கொள்ளக்கடவன், அது, நனைகவுள்-மதத்தால் நனைந்த கபோலத்தையுடைய, யானையால்—, யானை-அப்படிப்பட்ட வேறொரு யானையை, யாத்தற்று-கட்டியதை ஒக்கும்.

பக். 69. அடுத்தது காட்டும் பளிங்குபோல்-தன்னை அடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்குபோல், நெஞ்சம் கடுத்தது முகம் காட்டும்-ஒருவன் நெஞ்சத்தில் இருப்பதை அவனது முகமானது காட்டிவிடும்.

---

## கல்வி

பக். 82 குலனும்-உயர்குலப் பிறப்பும், குணனும்-நற்குணமும் குரவரைப் பேணும் நலனும்-தாய் தந்தை ஆசான் முதலாயினோரைப் போற்றி யொழுகுஞ் சிறப்பும், கடவுளை நயத்தலும்-இறைவனை விருப்போடு வழிபடுதலும், கருணையும்-, புலன் அவித்து ஒழுகலும்-சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் புலன்களிற் செல்கின்ற அவா ஐந்தனையும் அடக்கி யொழுகுதலும், பொறையும்-, தோற்றமும்-பொலிந்து தோற்றுதலும், உலகியல் அறிந்து உயிர்க்கு உறுதி கோடலும்-உலகத்தி னியல்பினை யறிந்து உயிருக்கு வேண்டிய பயனை (ஆன்மலாபத்தை) க் கைக்கொள்ளுதலும், கற்றவர் காமுற வாழ்தலும்-கல்வியல்லார் விரும்புமாறு வாழுதலும், காந்தியும்-அழகுடைமையும், மதி நிகர் கல்வியும்-பூரண சந்திரனை யொத்து அருளோடு விளங்குங் கல்வியும், கதிர் நிகர்வனவாம்-சூரியனை ஒத்தனவாகிய, வாய்மையும் தூய்மையும்-உண்மை பேசுதலும் சுத்த முடைமையுமாகிய இவற்றில், வழுவுதல் இன்றுய்-தவறுதலில்லாமல், கற்றன யாவும் கழகத்து உதவும் பெற்றியன்-படித்தவற்றை யெல்லாம் அவையார்க் கினிது விளங்குமா றெடுத்துரைக்கும் தகைமையுடையனுய், மறந்தும் பிறர் பழி கூறுன்-மறந்தாயினும் பிறரைப் பழிதூற்றுதவனுய், சதுருடையேன் எனத் தற்புகழ்ந்து அறியான்-திறமையுடையேனெனத் தன்னைப் புகழ்ந் தறியாதவனுய், முதுமொழி இலக்கணம் இலக்கிய முறையே-பழைய மொழியி

னிலக்கணத்தினதும் அப் பழைய மொழியா லியன்ற இலக்கியத்தின தும் முறைமையைத் தழுவி, புது மொழி புணர்க்கும்-புதுவதாகத் தன் னாற்றல்கொண்டு சொற்களைத் தொடுத் துரைக்கும், புலமையோனே-புலமையை யுடையோனே-ஆசிரியனாதற் குரியன்.

பக். 84. விலங் கொடு மக்கள் அனையர்-மிருகத்தோடு ஒப்பிட்டு நோக்குங்கால், மக்கள் எத்துணை நன்மையுடையாரோ, அத்துணைத் தீமையுடையார், இலங்கும் நூல்கற்றோரோடு எனையவர்-விளங்கிய நூலைக் கற்றோரோடு ஒப்பிட்டு நோக்குங் கால் கல்லாதவர்.

பக். 85. இம்மை பயக்கும்-இப் பிறப்பின் பயனைத் தரும், ஈய-பிறருக்கு ஈவதனால், குறைவு இன்று-குறைதல் இலது, தம்மை-கற்ற தம்மை, விளக்கும்-அறிவினால் விளங்கச் செய்யும், தாம் உளர் ஆக-தாம் உள்ளவராகச் செய்து, கேடு இன்று-கெடுதல் இலது, ஆதலால், எம்மை உலகத்தும்-எவ்வுலகத்திலும், கல்விபோல்-கல்வியைப்போல, மம்மர்-பேதைமையாகிய நோயை, அறுக்கும்-ஒழிக்கின்ற, மருந்து-மருந்தை, யாம் காணேம்-யாம் கண்டிலேம், எ-று.

பக். 86. மணல்-மணலிடத்தே, கேணி-கேணியானது, தொட்ட அனைத்து-தோண்டிய அளவினதாக, ஊறும்-சுரக்கும், அதுபோல, மாந்தர்க்கு-மனிதருக்கு, அறிவு-அறிவானது, கற்ற அனைத்து-கற்ற அளவினதாக ஊறும்.

பக். 90. பேதை-அறிவிலான், கற்றதும் இன்றி-பொருள் கேட்டு உணர்ந்தது மில்லாமல், கணக்காயர் பாடத்தால்-எழுத்து நடை பயிற்றுவோர் கற்பித்த பாடத்தினால், ஓர் சூத்திரம்-ஓர் செய்யுள், பெற்றது ஆம்-முகபாடம் ஆக்கப்பட்டதாம், அதனை-அச் செய்யுளை, நல்லார் இடை-குற்றம் அற்ற அறிவுடையார் கூட்டத்தில், புக்கு-புகுந்து, நாணாது-நாணமில்லாமல், சொல்லி-, தன் புல் அறிவு-தனது அறிவின்மையை, காட்டிவிடும்-வெளிப்படுத்திவிடுவான், எ-று.

பக். 92. நூல்பயில் இயல்பு நுவலின்-நூலில் அப்பியாசம் செய்யுந் தன்மையை சொல்லுங்கால், வழக்கு அறிதல்-உலக வழக்கு செய்யுள் வழக்காகிய இரு வகை நடைகளையும் ஆராய்ந்தறிதலும், பாடம் போற்றல்-மூல பாடங்களை மறவாமல் பாதுகாத்தலும், கேட்டவை நினைத்தல்-ஆசிரியனிடம் கேட்ட நூற்பொருளைப் பலகால் சிந்தித்தலும், ஆசாற் சார்ந்து அவை அமைவரக் கேட்டல்-ஆசிரியனை அணுகி முன் கேட்ட நூற் பொருட்களை அமையும்படி கேட்டலும், அமாண்பு உடையார் தம்மொடு பயிறல்-அவ்வாறு கற்குந்தொழிலாளரோடு அப்பியாசம் செய்தலும், வினாதல்-தான் ஐயுற்ற பொருளை அவரிடத்து வினாதலும், வினயவை விடுத்தல்-அவர் வினவியவைகளுக்குத் தாம் உத்தரங் கொடுத்தலும், என்று இவை கடனாக்கொளினே-ஆகிய இச்செயல்களை மாணவன் தன் கடமைகளாகக் கொள்வானாயின், மடம் நனி இகக்கும்-அறியாமை அவனை மிகவும் விட்டு நீங்கும், எ-று.

## வசனம்

பக். 117. கேட்டார்-நட்பாய் ஏற்றுக்கொண்டவரை, பிணிக்கும்-பின் வேறுபடாமல் கட்டும், தகை-குணங்களை, அவாய்-அவாவி, கேளாரும்-மற்றப் பகையாய் ஏற்றுக்கொள்ளாதவரும், வேட்ப-பின் அப் பகைமை ஒழிந்து நட்பை விரும்பும் வண்ணம், மொழிவது-சொல்லப் படுவதே, சொல்-சொல்லாம், எ-று.

பக். 118. சொல்லின் நடை-சொற்களது நடையை, தெரிந்த-ஆராய்ந்து அறிந்த, நன்மையவர்-நன்மையை உடையவர், இடைதெரிந்து-சபையில் ஒன்று சொல்லும்போது சமயத்தை ஆராய்ந்து அறிந்து, நன்கு உணர்ந்து-வழுப்படாமல் மிகவும் தெளிந்து, சொல்லுக-சொல்லக் கடவர்.

பக். 121. எனைத்து-எப்பொருளையும், ஒருங்கு-முற்றுக (குறைபாடின்றி), சில் எழுத்தினலே-சில சொற்களாலே, பொருள் அடங்க-கருத்துக்கள் பொதிய, காலத்தால்-எடுத்துக்கொண்ட கால அளவுக்குள், செவ்வியறிந்து-கேட்போர் தன்மையை யறிந்து, சொல்லுக.

மாசு அற்ற-குற்றம் அற்றவைகளாய், சில-சிலவாகிய சொற்களை சொல்லல்-அவ் வகையால் சொல்லுதலை, தேற்ருதவர்-அறியாதவர், பல-பலவாகிய வார்த்தைகளை, சொல்ல-தொடுத்துச் சொல்ல, காமுறுவர்-விரும்புவர்.

பக். 123. ஆற்றலும்-வல்லமையும், நிறைவும்-நற்குண நற்செயல்களின் நிறைவும், கல்வி யமைதியும்-கற்றடங்கிய தன்மையும், அறிவும்-இயற்கை யறிவும், என்னும்-என்னு மிவற்றில், இவனேடு வேற்றுமை இல்லை-இவனேடு எனக்கு வேறுபாடில்லை, யாம் என விளம்பல் உற்ருன்-இத் தன்மைகளால் இவன் யானே யென்று கூறினன், எ-று.

உலகத்து எங்கும் இல்லாத-உலகத்திலே எங்கும் இல்லாதனவாய், இசைகள் கூர-புகழ்கள் நிரம்புமாறு, கல்லாத கலையும்-கல்லாமலே பெற்ற இயற்கை யறிவும், வேதக் கடலுமே-வேதமாகிய சமுத்திரமுமாம், ஈங்கு இவன்-ஈங்குக் காணப்படும் இவன், என்னுங் காட்சி-என்னுந் தோற்றம், சொல்லாலே தோன்றிற்று-இவன் வாயிலிருந்து வருஞ் சொற்களாலே விளங்கிற்று, எ-று.

:o:

# செய்யுள்

பக். 132. எழுத்து முதலா-எழுத்து முதலாக (சீர் ஈறாக) ஈண்டிய அடியில்-அவை மூன்றும் ( எழுத்து, அசை, சீர் ) ஒன்றாகத் தொடர்ந்து கூடி நின்ற அடியில், குறித்த பொருளை-தான் வைக்கக் கருதிய பொருளை, முடிய நாட்டல்-முடியுமாறு ( நிரம்பி நிற்குமாறு ) யாத்தலே, யாப்பென மொழிப-செய்யுளென்று கூறுவர், யாப்பு அறி புலவர்-அவ்வாறு செய்தலை வல்ல புலவர், எ-று.

பக். 133. பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல் போல்-தோல், இரத்தம், தசை, மேதை, எலும்பு, மச்சை, சுக்கிலம் என்னும் ஏழுவகையான தாதுக்களினால் உயிருக்கு இடமாக ஆக்கப்பட்ட உடம்புபோல, பல சொல்லால் பொருட்கு இடனாக-பல சொற்களால் பொருளுக்கு இடமாக, உணர்வினின் வல்லோர்-இயற்கையறிவிலும் கல்வியறிவிலும் வல்ல மேலோர், அணிபெறச் செய்வன செய்யுள்-பல்வேறு அழகுகள் பொருந்துமாறு செய்து கொள்வன செய்யுட்களாம், எ-று.

அழகு-சுருங்கச் சொல்லல் முதலியவற்றையும், அலங்காரங்களையுங் குறித்து நின்றது.

கலைமகள் வாழ்க்கை-சரஸ்வதி வாழுமிடம், முகத்தது எனினும்-தன் முகத்தின் (நாவின்) இடமேயாயினும், மலரவன்-பிரமன், வண்தமிழோர்க்கு-அழகிய தமிழைக் கற்ற புலவோர்க்கு, ஒவ்வான்-ஒப்பாகமாட்டான், மலரவன் செய்-பிரமன் படைக்கின்ற, வெற்றுடம்பு-பயனற்ற உடம்பு, மாய்வது போல்-அழிவது போல, இவர் செய்யும் உடம்பு-கல்வியாளர்களாகிய இவர்கள் செய்துகொள்கின்ற புகழுடம்புகள், மாயா-அழியமாட்டா, எ-று.

எல்பொரு நாகர் தம் இருக்கை-(அப் பொய்கையானது) தம்மிடத்திலுள்ள மாணிக்கங்களின் விளக்கத்தால் சூரியனோடு மாறுபாடுறுகின்ற நாகர்களுறையும் பாதாள வுலகம், ஈது என நிற்பது-இதுதான் என்று சமீபமானதாகச் சொல்லக் கூடியதாகிய, ஓர் காட்சியது எனினும்-ஒரு தோற்றத்தை யுடையதாயிருந்தாலும் (பாதாள வுலகம் வரையிலும் ஆழ்ந்துள்ளதாயிருந்தாலும் என்பதாம்) கற்பகம்-, அனைய-போன்ற, அக் கவிஞர்-அந்தப் புலமை மிக்க பாவலர், நாட்டிய-தாம் செய்து இந்நிலவுலகத்தில் நிலை நிறுத்திய, சொல் பொருளாமென-சொற்களின் பொருள்கள் (கருத்துக்கள்) போல, கீழ் உறு-கீழுலகம் வரையிலும், தோன்றல் சான்றது-விளங்குதலமைந்தது ( மிகவுந் தெளிந்த நீரையுடையது), எ-று. செழுமையான புலவோர் இயற்றியருளிய செய்யுட்கள் ஆழ்ந்த நுண்ணிய கருத்துடையனவாயினும், அவற்றின் பொருள், ஐயந்

திரிபின்றித் தெளிவாய்ப் புலப்படுதல்போல, இப் பொய்கை ஆழமுடைத்தாயினும் தெளிந்திருந்தது என்க.

பொன் விலை மகளிர்-வேசியர், கீழ்ப்போதல்-ஆழமுடைத்தாதல், புன் கவி-அதமச் செய்யுள்.

பக். 134. ஐந் திணைப் பொருள்-புணர்தல், பிரிதல், இல்லிருத்தல், ஊடல், இரங்கல் என்பனவும் அவற்றின் நிமித்தங்களும், ஆற்றுக்கென்னில்-, ஆன்ற பொருள்-மிக்க பொருள், புலம்-வயல், அவியகத்துறைகள்-நீர்த்துறைகள். தண்ணெனல்-குளிர்ச்சியுடையதாதல், ஒழுக்கந் தழுவல்-ஒரே நிலையில்நில்லாது நீரோடிக்கொண்டிருத்தல், ஐந்திணை நெறி அளாவல்-மலை நிலம், பாலை நிலம், முல்லை நிலம், மருத நிலம், கடனிலம் என்பவற்றினூடே வழிக்கொண்டு அளைந்து வருதல், சவி-ஒளி·

விபூதி-பெருமை, செல்வம். விசதம்-வெளிப்படை. ஸங்க்யை-எண், அளவு. ப்ரசாதம்-அனுக்கிரகம்.

பக். 135. மெல் இயல் ஆக்கைக் கிருமி-மென்மையான தன்மையையுடைய உடம்பையுடைய புழுவானது, குருவில் மிளிர் தந்து ஆங்கே செல்லிய செல்வகத்து-புண்ணிலே வெளிப்பட்டு அவ்விடத்திலேயே செல்லுகிற தொழிலையுடையது, உலகை என் காணும்-அது உலக நடத்தையை எங்ஙனம் அறியும், (அது போல) என்னுலும் தன்னைச் சொல்லிய சூழல் திரு மால் அவன் கவி யாது கற்றேன்-நாணத்தை இன்றியமையாக் குணமாகக் கொள்ளு மியல்புடைய என்னைக் கொண்டும் தன்னைச் சொல்லுவித்த சூழ்ச்சியை யுடைய திருமகள் கணவனை அத்தலைவனது புனைந்துரையை யான் யாதென்று அறிவேன்?, பல்லியின் சொல்லும் சொல்லாக் கொள்வதோ பண்டு பண்டு உண்டு-பல்லியின் வார்த்தையையும் (பின் நிகழ்ச்சியை முன் குறிக்கும்) சொல்லாகக் கொள்ளுதலோ, மிக வெகு காலமாக உள்ளது, எ-று.

புண்ணிலே தோன்றிய புழு, தான் தோன்றிய இடமான அப்புண்ணையே யொழியப் புறம்பொன்றை அறியாதவாறுபோல, அகமாகிய அவன் காதலிலே அகப்பட்ட யான், அதனையே யன்றிப் புறமாகிய சொற்செயல்களைச் சருதவே னல்லேன், ஆனாலும் பல்லியின் சொல்லை நிமித்தமாகக் கொள்ளுதல் தொன்றுதொட்டுவரும் மிகப் பழமையான மரபாதலால், நமது மனையிடத்துப் பல்லி நல்ல இடத்தில் அவன் வரவுக்கு ஏற்ப ஒலித்தலைக் கண்டு அந்த நற் குறியாலே ஆறியிருக்கிறேனென்று கூறினன்'' என்பது தமிழ்ப் பண்டிதர் திரு. கே கிருஷ்ணமாச்சாரியர் அவர்கள் அன்புகூர்ந் தனுப்பிய பழைய வுரை.

தன்னை (இறைவனை) யானென்றே கருதித் தமிழ்ப் பாக்களாற் செய்யப்பெற்ற கவிகளைப் பண்ணினோடு பாடித் தென்னா என்று தாளமிட்டு வணங்கும் என் அம்மான், திருமாலிருஞ் சோலையான் என்க.

தென்னா-தாளக் குறிப்பு, அம்மான்-தகப்பன்.

படிகம்-பளிங்கு, பவளச்செவ்வாய்-பவளம்போலும் சிவந்த வாய், கடிகமழ் பூந்தாமரை-வாசனை வீசும் பொலிவையுடைய தாமரைப்பூ, துடி-உடுக்கை, அனவரதமும்-எப்போதும்,-நிறத்தையும் வாயையுங் கையையும் இடையையுந் துதித்தால் கல்லுங் கவி சொல்லாதோ என்க,

பா-பாட்டு ( வெண்பா முதலியவை ), தொடை-ஒரு சீரையும் அதனையடுத்துவருஞ் சீரையும் பிணிக்குஞ் செய்யுளுறுப்பு, பதம்-செய்யுளடி, மொழியுமாம். சீர்-அசைகள் சீர்பெற நிற்றற்கிடனாயிருக்குஞ் செய்யுளுறுப்பு.

பித்தர்-பைத்தியகாரர், பேதையர்-அறிவிலார், பத்தர்-கடவுளடியார், பன்னல்-எடுத்துச் சொல்லப்படுதல்.

Printed by B. Santiagoepillai, 1143-33.

## புஸ்தக விளம்பரம்

பண்டித பரீக்ஷை, பால பண்டித பரீக்ஷை, பிரவேச பரீக்ஷை, பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீக்ஷை முதலிய மேல் வகுப்புகளுக்கென நியமிக்கப்பட்ட புஸ்தகங்களும் இலங்கையிலுள்ள தமிழ் ஆங்கில பாடசாலைகளுக்கு உபயோகமான சகல புஸ்தகங்களும் பள்ளிக்கூட உபகரணங்களும் ஆங்கில தமிழ் நவல்களும் அறிவுக்குரிய அரிய நூல்களும் கைவசமிருக்கின்றன.

இன்னும் வேத சரித்திரங்கள், செபப் புஸ்தகங்கள், அம்மானை, ஒப்பாரி, நாடக வகைகள், வேதச் சாமான்கள், படங்கள் முதலியனவும் கைவசமிருக்கின்றன.

ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் விசேஷ கழிவு கொடுக்கப்படும்.

வீ. பீ. ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

M. Bastiampillai
Book-seller
Chundikuli
JAFFNA.

ம. வஸ்தியாம்பிள்ளை
புஸ்தக வியாபாரி
சுண்டிக்குளி
யாழ்ப்பாணம்.